(ALL RIGHTS RESERVED.)
இந்தப் பத்திரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் ப்ரசுரிக்கக்கூடாது.

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE

ஜி. ஏ. வைத்யராமன், பி.ஏ., பத்ராதிபர்.
G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 6. Vol. 6. | ப்ரமாதீச ஸ்ரீ பங்குனி மீ —MARCH 1914. | ஸஞ்சிகை 3. No. 3.

பொருளடக்கம்.

வ்யாஸங்கள்—	பக்கம்.
ஒட்டுமாஞ்செடி பயிர் செய்வது —என். எஸ். க்ருஷ்ணஸ்வாமி அய்யர்	114
ஸமுத்ரக் கரையிலுள்ள மணல் நிலங்களில் வெங்காய ஸாகுபடி	116
கெரஸின் இமல்ஷன்	118
ட்ரை பார்மிங் என்னும் புன்செய்ஸாகுபடி.	120
தொழுவத் தெருவை நிரவிவிடுதல்	121
விவஸாயமும் வெடிமருந்தும்	122
நெல் ஸாகுபடியில் ஒற்றையலகு நடுதல்	123
வெட்டுக் கிளிகளைக் கொல்ல மருந்து	124
மெம்பர்களின் பழைய கடன்கள்	125
வேர்க்கடலை வ்யாபாரம்	129
கால அளவுகள்	133
நிலங்கள் தர்காஸ்துக் கொடுத்தல்	137
பட்டணங்களில் பால் ஸப்ளை	141
வௌவால்	145
ஸ்நேஹலதாவின் கடிதம்	149
மிஸ்டர் வி.பி.மாதவராவ், பி.ஏ.,ஸி.ஐ.இ.	153
விவஸாயப் பகுதி	114
கோஆப்பரேஷன் பகுதி	125
வியாபாரப்பகுதி	129
வித்யாவிஷயப் பகுதி	133
வியவஹாரப் பகுதி	137
ஸுகாதாரப் பகுதி	141
பையன்கள் பகுதி	145
ஸ்த்ரீகள் பகுதி	149
ஜீவிய சரித்ரம்	153
சிறு கதைகள்	155
பகுதிக்குறிப்புகள்	157
மாஸ வர்த்தமானம்	162
காலஸ்திதி	167
பஞ்சாங்கம்	168

CONTENTS.

Articles—	PAGES.
GRAFT MANGO CULTIVATION —N. S Krishnaswami Aiyar, Salem	114
CULTIVATION OF ONIONS IN SEA SAND	116
KEROSINE EMULSION	118
DRY FARMING	120
SPREADING FARM YARD MANURE	121
EXPLOSIVES AND AGRICULTURE	122
SINGLE PLANTING OF PADDY	123
LOCUST POISON	124
OLD DEBTS OF MEMBERS	125
THE GROUNDNUT TRADE	129
TIME MEASURES	133
GRANT OF LANDS ON DHARKAST	137
MILK SUPPLY IN TOWNS	141
THE BAT	145
SNEHALATA'S LETTER	149
MR. V. P. MADHAVA RAO, B.A., C.I.E.	153
The Agricultural World	114
The Co-operative World	125
The Commercial World	129
The Educational World	133
The Legal World	137
The Sanitary World	141
The Boys' World	145
The Ladies' World	149
Biography	153
Short Stories	155
Departmental Notes	157
Diary of the Month	162
Season Report	167
Calendar	168

G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetti Street, Georgetown, Madras.
ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனி, 3 & 4. சுங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ்.

ஒவ்வொரு இந்தியரும்

அறிந்திருக்கவேண்டியது.

கான்பூரில் லாலிம்லி மில்ஸ் கம்பெனியார் கீழ்த்தேசங்களில் மிகவும் ப்ரஸித்திபெற்றதான லாலிம்லி துணிகளை நெய்வதற்காக ஆயிரக்கணக்கான இந்தியர்களுக்கு கஷ்டமில்லாத நிபந்தனைகளுடன் ஒழுங்கான நல்ல வேலை கொடுத்துவருகிறார்கள்.

லா லி ம் லி

கலப்பில்லாத கம்பளித் துணி

தேச க்ஷேமத்தைக் கருதும் ஒவ்வொரு இந்தியரும் துணிகள் வாங்கும்போது லாலிம்லி துணிகளை வாங்கவேண்டும். ஏனென்றால் கொடுக்கும் விலைக்கு ரொம்ப உயர்ந்த சரக்குக் கிடைக்கிறதோடுகூட தேசத்தார்களுக்கு உதவி செய்ததாகிறது.

லாலிம்லி ஸூட் துணிகள், ட்வீடுகள், போர்வைகள், முதலியவைகளின் மாதிரிகளுக்கும், விலைவிவரங்களுக்கும் எழுதுங்கள்; இனாமாய் அனுப்பப்படும்.

கான்பூர் வுல்லன் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்,

டிபார்ட்மெண்ட் நம்பர் 25, கான்பூர்.

CAWNPORE WOOLLEN MILLS Co., Ld.,

Dept. No. 25. Cawnpore.

SUPPLEMENT TO THE "PRACTICAL LIFE."
"பிழைக்கும் வழி"க்கு அநுபந்தம்.

The Late LORD MINTO. (p. 166.)
காலஞ்சென்ற லார்ட் மின்டோ. (166-ம் பக்கம்.)

பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

PRACTICAL LIFE

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜீ. எ. வைத்யராமன், பி. எ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A.,
EDITOR.

புஸ்தகம் 6. Vol. 6. | ப்ரமாதீச ௵ பங்குனி ௴, MARCH 1914 | ஸஞ்சிகை 3. No. 3.

Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, economics, story, biography, citizenship, and popular, scientific and technical education.

'Practical Life' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs.	A.	P.		Foreign. Rs.	A.	P.
Per annum ...	4	0	0	... ...	6	0	0
Single copy ...	0	6	0	... ...	0	8	0
Sample copy ...	0	4	0	... ...	0	6	0

RATES OF ADVERTISEMENT.

1 Page ...	5	0	0	per month.
½ do ...	2	8	0	do
¼ do ...	1	4	0	do
1/10 do ...	1	0	0	do

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

Notice to Contributors:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be *understood* that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama *Chetty Street, Georgetown, Madras.*

பிழைக்கும் வழி.

முக்யமாய் விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், கதை, ஜீவ்ய சரித்ரம், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணாக்கர்கள், இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'பிழைக்கும் வழி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.				அந்ய நாடு.		
வருஷம் 1 க்கு ...	4	0	0	...	6	0	0
தனிப்ரதி ...	0	6	0	...	0	8	0
மாதிரி காபி ..	0	4	0	..	0	6	0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

1 பக்கத்திற்கு	மாஸம் ஒன்றுக்கு		5	0	0
½ பக்கத்திற்கு	,,	,,	2	8	0
¼ பக்கத்திற்கு	,,	,,	1	4	0
1/10 பக்கத்திற்கு	,,	,,	1	0	0

வ்யாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில மட்டுமே எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை க்ருபநேயர்கள் அறியவேணும்.

ஜீ. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, & 4, சங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

The Agricultural World.

விவஸாயப் பகுதி.

GRAFT MANGO CULTIVATION.

By

N. S. KRISHNASWAMI AIYAR, SALEM.

ஒட்டுமாஞ்செடி பயிர் செய்வது.

சேலத்தில் ஒட்டுமாமரங்கள் ஸுமார் 50 வருஷங்களுக்கு முன்னிருந்து பயிராகிவருகின்றன. அதற்கு முன் சேலத்தில் சிலதோட்டங்களில் நாட்டு மாமரங்கள்தானிருந்தன. அவைகளின் காய்கள் அதிக சிறியவைகளாயும் நாருள்ளனவாயும் இருந்தன. வேறு சில மரங்களின் காய்கள் மஞ்சள் நாற்றமுடையனவாயுமிருந்தன. அவ்வித மரங்களை யிப்போது காணலாமென்றால் இச்சேலத்தில் ஒன்றுவது காணோம். 50 வருஷங்களுக்கு முன் சேலத்தில் மிஸ்டர் ஜே. பிஷர்(Mr. J. Fisher) என்று ஒரு துரை யிருந்தார். அவர் இந்த ஊரில் 10 ஏக்கர் பூமி யொன்றைத் தோட்டமாக்கி அதற்கு "கொண்டன்" தோட்டமென்று பெயரிட்டிருக்கிறார். இத்தோட்டம் சேலத்துக்குக் கிழக்கே இரண்டு மைல் தூரத்திலிருக்கிறது. இத்தோட்டத்தின் பக்கத்தில் ஓர் காட்டாறு வருகிறது. அதைக் குறுக்கிட்டு ஓர் அணை கட்டி தண்ணீரைத் தேக்கி இத்தோட்டத்தின் நாற்புறமும் வாய்க்கால் வெட்டி அதில் அத்தண்ணீரைப் பாய்ச்சி இத்தோட்டத்தை உற்பத்தி செய்திருக்கிறார். இத்தோட்டத்தில் அந்தத் துரையால் ஒட்டுமாஞ் செடிகள் 50-வருஷங்களுக்கு முந்தி வைத்துப் பயிராக்கப்பட்டன. அவ்வொட்டுச் செடிகள் அக்காலத்தில் அத்துரையால் வங்காளத்திலிருந்து கொண்டு வந்து பயிராக்கப்பட்டதாய்த் தெரிகிறது. பிறகு அச்செடிகள் பெருத்து 15-20 வருஷங்களான பிறகு இத்தோட்டத்தில் ஒட்டுகள் கட்டும் வேலையைக் கற்ற ஒரு மேஸ்திரியை வைத்து அநேக ஒட்டுகள் தயார் செய்து ஓர் ஒட்டுச்செடி 5 ரூ வீதம் விற்பனை செய்யப்பட்டது. இவைகளை சிலர் வாங்கி வைத்துப் பயிர் செய்தார்கள். பிறகு கொஞ்ச காலத்துக்கெல்லாம் இச்செடிகளின் விலையைக் குறைத்து 3-ரூ, 2 ரூ ஆகக் குறைந்த விலைக்கு விற்கவே, அநேக தோட்டக்காரர்கள் பல தினுஸு ஒட்டுச் செடிகளை வாங்கி வைத்துப் பயிராக்கினார்கள். இவ்வாறு அந்தத் துரையிருந்த காலத்துக்கு பிறகு, 30 வருஷத்துக்குள் இச்சேலத்தில் முன்னிருந்த நாட்டுமரங்களை யெல்லாம் வெட்டி விட்டு எங்கும் ஒட்டுச் செடிகளாகவே பயிராக்கி விட்டார்கள். சேலம் டவுனுக்கு 10 மைல் தூரமுள்ள எல்லா க்ராமங்களிலும் இப்போது இவ்வொட்டுமாஞ் செடிகளைப் பார்க்கலாமேயொழிய முன்னிருந்த நாட்டு மரங்களைப் பார்ப்பதரிது. இந்த 30 வருஷங்களில் இவை இவ்வளவு ப்ரபலமாவதற்குக் காரணம் என்னவென்றால் அவற்றி லுண்டாகும் பழங்களின் மாதுர்ய விசேஷமும், வாஸனையும், அவை யதிகமான விலைக்கு போகிறதென்பதுமே. பின்னிட்டு 10-வருஷ காலமாய் இச்சேலத்தில் அநேக தோட்டக்காரர்கள் ஒட்டுச் செடிகள் கட்டி ஊர் ஊராய்க் கொண்டுபோய் விற்று அநேக இடங்களில் பரவச்செய்திருக்கிறார்கள். இவ்வூரில் வேறு சிலதோட்டக்காரர்கள்ஏராளமாய் ஒட்டுச்செடிகளைத் தயார்செய்து வைத்துக்கொண்டு பத்திரிகை மூலமாய்த் தங்களுடைய பெயர்களைத் தெரிவித்து தங்களுடைய ஒட்டுச்செடிகளை விற்று வருகிறார்கள்.

ஒட்டுச் செடிகள் பயிராக்க இச்சேலத்தின்

பூமியைப் போன்ற கெட்டியான பூமியே ஏற்றது. செம்மண்ணும்,கற்களும் கலந்த பூமியே சேலத்தில் அதிகமாயுண்டு.களிமண் பூமியிலும சில விடங்களில் பயிராக்கியிருக்கிறார்கள். ஆற்றோரங்களிலும் மணல் கலந்த பூமியிலும் பயிராக்கி யிருக்கிறார்கள். இப்பூமியிலுண்டாவதை விட மற்றவிடங்களில் அதிக செழிப்பாய் மரங்கள் வளர்ந்து வருகின்றனவே யொழிய இப்பூஸாரத்திலுண்டாவதுபோல் அவ்வளவு மாதுர்யம் காணேம. இச்செடிகளில் பலதினுஸுகளுண்டு. அவைகளின் பெயர்களை அடியில் கூறுவோம்.

(1) குண்டு, (2) மல்கோவா, (3) நடுச்சாலே, (4) குதாதாத்,(5) தில் பஸந்து,(6) கிளிமூக்கு, (7) சொரக்காமாத்தி,(8) பெங்களூரா,(9) ஆமலெட், (10) கத்தேமார்.

இவைகளைப்போல் வேறு சில தினுஸுகளுமுண்டு. இவைகளில் குண்டு என்பது முதல தரமானது. இது பழம் பழுத்து 10-நாள் வரையில் கெடாமலிருக்கும். பழத்தின் மேல் தோல் சுருங்கி உள்ளிருக்கும் பழம் கெடாமலிருக்கும். இப்பழம அதிக தூரதேசங்களுக்கு அனுப்புவதற்கு ஏற்றது. ஆகையால் இதற்கு அதிகவிலை. மல்கோவா வென்பது இதற்கு இரண்டாவது; இதுவும் 15-நாள் வரையில் கெடாமலிருக்கும். மூன்றாவதான நடுச்சாலே யென்பது பார்வைக்கு அதிக அழகாயும நல்ல வாசனையுள்ளதாயும், மாதுர்யத்திலும் மேற்சொன்ன இரண்டிற்கும ஸமமாயுமிருக்கும். மற்ற தினுஸுகளும இம்மூன்றிற்கும ஸமமான மாதுர்யமும் வாஸனையு முள்ளவைகள்.

இவ்வித மேன்மையுள்ள மாமரங்களை வைத்துப் பயிராக்காமல் இன்னும் அநேகர் பூர்வீகமான நாட்டுச் செடிகளையே இன்னும தங்களுடைய தோட்டங்களில் வைத்துக் கொண்டிருப்பது அதிக விஸனகரமானதே. நாட்டுச்செடிகளில் உற்பத்தியாகும் பழங்களை பைஸாவுக்கு ஒன்றுவீதமவிற்றுவருகிறார்கள். ஒட்டுச் செடிகள் வைத்துப் பயிராக்கினல் அவைகளிலுண்டாகும் பழங்களைக் குறைந்தது பழம்3-பைஸாவாக விற்கலாமே. இந்த லாபகரமான பயிரை ஏன் செய்யாமலிருக்கிறார்கள் ? தற்காலத்தில் ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்ட்ரேலியா முதலான விடங்களில் அநேக தோட்டக்காரர்கள் அவ்விடங்களிலேயே நல்ல பெரும பழங்களாயும, மாதுர்யமானவைகளாயு மிருப்பவைகளில் ஒட்டுகள்தயார்செய்துவ்ருத்திசெய்துவருகிறார்கள். இது சாஸ்த்ரோக்தமானவழி. அவ்விதம் ஒட்டுகள் செய்து வேறு இடங்களில் பயிராக்குவதால் அவைகளின் குணதிசயங்களும் வ்ருத்தி யாகின்றன. இவ்வித ஒட்டுச்செடிகளையே பயிராக்கின பிறகு நாட்டுமரஙகளை ஒவ்வொன்றாக வெட்டி விடலாம். மாமரங்களைப்போலவே வேறு பழச் செடிகளையும் ஒட்டுகள் கட்டி வ்ருத்தி செய்யலாம்.

ஒட்டுமாமரங்கள் வைத்துப் பயிர் செய்வதில் யாதொரு கஷ்டமுமில்லே. முதலில் செடியை வைத்த ஒரு வர்ஷம் வரையில் கொஞ்சம் கவலேயெடுத்து வரவேண்டும். பிறகு அவ்வளவு கவலை வேண்டுவதில்லை. ஒரு வர்ஷத்திற்குள் அது வேரூன்றி சற்றுப் பெருத்து விடும். செடியை பூமியில் வைத்த சிலகாலம வரையில் ஒட்டியிருக்குமிடத்திலுள்ள துணியைக் கரையான் தொடாமற பாாத்துவந்தால் ஒரு வாஷத்திற்குள் அடித்தண்டு சற்று பெருத்து அந்தத்துணி தானகவே கீழேவிழுந்து விடும். அதை கவனிக்காமல் சிலர் அசட்டையாயிருப்பதால் கரையான் பிடித்துச் செடியைத் தின்று விடுகிறது. அதனல் செடி பட்டுப் போகிறது. அதை கவனித்து ஒரு வர்ஷம் வரையில் ஈரம் காயாமல் குழியைப் பார்த்து வந்தால் செடி அதிக சீக்ரத்தில் வளர்ந்து விடும். இரண்டாவது வர்ஷம் ஒருவாரத்

தில் இரண்டுதரம தண்ணீர் பாய்ச்சினல் போதும். மூன்ருவது வர்ஷம் ஒருவாரத்தில் ஒருதரம் தண்ணீர் போதும். இப்படியே வயது ஏற ஏற நமக்கு ச்ரமம் குறைகிறது. 5-வது வர்ஷம்முதல் பலனுக்கு வந்து விடும். இவைகளுக்கு யாதொரு எருவும் தேவையில்லை. செடி வைப்பதற்கு முந்தி ஒரு கஜம் ஆழமும் ஒருகஜம் சதுரமுமுள்ள குழிகள் தயார்செய்து அவைகளில் சப்பாத்துக்கள்ளியைச் சிறு துண்டுகளாய்க் கொத்திப்போட்டு தண்ணீர் பாய்ச்சி யழுகவைத்து அதின்மேல் மண்ணைத்தள்ளி செடியை வைத்துவிடவேண்டியது. பிறகு யாதொரு எருவும் தேவையிலலை. ஆனல் சில விடங்களில் பூமி அதிக கொழுமையாக விருப்பதால் அப்பேர்ப்பட்ட விடங்களில் பயிராகும் மரங்கள் 10-வர்ஷம் வரையிலும் பலனுக்குவாராமலிருக்கலாம். அப்பேர்ப்பட்டமரங்களில் அடிமரத்தை கொத்திவிடுவதனல் அதிலுள்ள அதிக கொழுமையான ஈரமெல்லாம் கொத்திய காயத்தின் வழியாய் வெளிப்பட்டு வந்து விடுகிறது; அல்லது ஓரடி நீளத்துக்கு, பெருவிரல் கனதத்துக்கு சில இருப்பாணிகள் தயார் செய்து பலனுக்கு வராத மரங்களில் அறைந்து வைப்பதனல் அவைகளிலுள்ள கொழுமையான ஸாரம் வெளிப்பட்டு பிறகு மறுவர்ஷமே பலனுக்கு வருவதாய், வங்காளத்தில் ஒருவா சொல்லியிருக்கிறா.

இவ்வொட்டுமாமரங்கள்வைத்துப் பயிராக்குவதில் அதிக கஷ்டமேயில்லை. மேலே யான் சொல்லியவைகளை கவனித்து வந்தால் போதும், இப்போதோ ஒட்டுமாமரங்கள் முன்போல் 5ரூ-3ரூ-2ரூபாயாக இலலாமல் 8-அணு முதல் 12-அணு வரையில் அதிக குறைவான விலைக்கு விற்றுவருகின்றன. இவ்வித ஸலிஸான ஒட்டுகளை வாங்கி வைத்துப் பயிராக்காமல் அதிக நஷ்டப்படுவது மிகவும் விஸனிக்கத்தக்கது.

என். எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யர்.

CULTIVATION OF ONIONS IN SEA SAND.

ஸமுத்ரக் கரையிலுள்ள மணல் நிலங்களில் வெங்காய ஸாகுபடி.

திருநெல்வேலிஜில்லா திருச்செந்தூர் தாலுகா குலசேகரப்பட்டணத்திற்கருகில் ஸமுத்ரக் கரையிலுள்ள நிலங்களில் விவஸாயிகள் வெங்காய ஸாகுபடி செய்கிருர்கள் என்றும், வெங்காயப்பயிர் அதிக செழிப்பாயிருப்பதோடு தக்க லாபம் கிடைக்கிறதென்றும் 'கிருஷிகன்,' பத்ரிகை சொல்லுகிறது. வேறு இடங்களிலும் ஸமுத்ரக்கரையிலுள்ள மணல் நிலங்களில் விவஸாயிகள் வெங்காயம் ஸாகுபடி செய்து லாபமடையலாமென்று நாம் எண்ணுகிறோம். குலசேகரப்பட்டணத்தில் விவஸாயிகள் மணல் நிலங்களில் வெங்காயம் ஸாகுபடி செய்யும் விதத்தைப்பற்றி 'கிருஷிகன்' பின் வருமாறு எழுதுகிறது.

நிலம்.

ஸமதளமான எந்த பாகத்திலுள்ள மணலிலும் இப்பயிர் செய்யலாம். முதலில் மணலை மேடுபள்ளங்களில்லாமல் ஸமதளப்படுத்த வேண்டும்.

வேலிகட்டல்.

வெங்காயம நட உத்தேசிக்கும் நிலத்தைச் சுற்றி ஒரு அடிக்கு ஒருபனை மட்டையாக நட்டு தென்னம் மட்டைகளை நீட்டுப்போக்கில் குறுக்காக வைத்து மட்டைகளைச் சேர்த்துக் கட்டுகிறுர்கள். பின்பு வேலம் முள் கொண்டு வந்து இம்மட்டைகளைச் சேர்த்து அணைத்து விடுகிறுர்கள். இப்படிச் செய்வதால் ஆடுமாடுகள் முதலான ப்ராணிகள் இதற்குள் போக முடியாது.

வண்டலடித்தல்.

கால் ஏக்கர் நிலத்திற்கு ஸுமார் 40-வண்டி வண்டலடித்து மணலோடு கலந்து, ஸுமார் 10-கிடை ஆடு போட்டு வெங்காயம நடுகிறுர்கள்.

கிணறெடுத்தல்.

அவ்விடத்தில் கிணறெடுத்து அங்கு அகப்படும் கற்களால் கட்டிவிட ரூ. 5 (ஐந்து)தான் பிடிக்கிறது. கால் ஏக்கர் நிலத்திற்கு ஒரு கிணறு வீதம் அடித்துக் கொள்கிறார்கள். ஏனென்றால் மணலில் தண்ணீர் அதிக தூரம் போனால் மண்ணிற்குள்ளேயே ஊறிப்போகுமென்று நினைத்து, நடு வாய்க்கால்மட்டும் இக்கற்களால் கட்டி அங்கிருந்து இரண்டடி சதுரப்பாத்திகள் செய்து, மண்வெட்டி முதலான யாதொரு ஆயுதங்களுமில்லாமல் கையினாலேயே மடைகளைத் திறந்து தண்ணீர் பாய்ச்சி அடைக்கிறார்கள்.

வெங்காயம் நடுங்காலம்.

கார்த்திகைமீ ஒருதரமும், வைகாசி முதல் ஆடிமீ வரையில் ஒரு பட்டமுமாக வர்ஷத்திற்கு இரண்டு முறை நடுகிறார்கள். ஒரு கிணற்றிறவையில் ஸாகுபடியாகும் நிலமாகிய கால் (¼)ஏக்ராவுக்குப் பிடிக்கும் செலவு லாபம் முதலியவைகளை இங்கு விவரமாய் எழுதுகிறோம்.

முதல் பிடிக்கும் செலவு

		ரூ.	அ.	பை.
நிலத்தை மேடுபள்ளங்களில்லாமல் திருத்த	...	10	0	0
கிணறடித்துக் கட்ட	...	5	0	0
வண்டலடிக்க	...	10	0	0
ஆட்டுக்கிடைவைக்க	...	10	0	0
வேலியடைப்பு முதலிய சில்லரைச் செலவு	...	10	0	0
இலாப்போட கால்கட்ட	...	5	0	0
ஆகமொத்தம்	...	50	0	0

இந்த ரூ. 50-நிலம் சீர்ப்படுத்தும் செலவில் ஏற்படுவதாலும், வர்ஷா வர்ஷம் இச்செலவுகள் ஏற்படுவதில்லை யாதலாலும் இதை நிலக்ரயத்தோடு சேர்த்து இதற்கேற்படும் வட்டி மட்டும் சேர்த்துப் பார்க்க வேண்டும்.

வர்ஷா வர்ஷம் ஏற்படும் செலவு.

		ரூ.	அ.	பை.
எரு	...	[illegible]	0	0
30 துலாம் விதை வெங்காயம், துலாம் ஒன்றுக்கு 8 அணா வீதம். (ஒரு துலாம் என்பது 20 இராத்தல்-)	...	15	0	0
தண்ணீர் இறைப்பு, 2½ மாதம்	...	18	12	0
நிலக்ரயத்திற்கும் சீர்திருத்திய செலவிற்கும் வட்டி, 100-க்கு மாதம் 1 வட்டியாக, ஒரு பயிருக்கு	...	6	0	0
மாஸூல் எடுத்தல், வைத்தல், சரக்காக்கல்	...	5	4	0
ஆக மொத்தம்.		50	0	0

காலை 4-மணி முதல் 6-மணி வரையில அவரவர்களே தண்ணீர் இறைத்துக் கொள்வதால் இச்செலவும் அவர்களுக்கு லாபந்தான்.

வருமானம்.

200 துலாம் வெங்காயம், குறைந்தது துலாம் ஒன்றுக்கு 6 அணாவாக 75-0-0.

துலாம் ஒன்று 6 அணாவுக்குக் குறைவாகிறதில்லை. நோய் நொடிகள் விழுந்து மாஸூல் இவ்வளவு அதிகம் காணாவிட்டால அதற்கேற்றபடி 1 துலாம் வெங்காயம் ரூபா ஒன்று வரையில் விற்கிறது.

காலேக்கர் நிலத்தில் ஒரு தடவையில் லாபம். 25 0 0

அவரவர்கள் வேலைக்குப் போகுமுன் காலை 4-மணிமுதல் 6 மணி வரையில் தண்ணீர் இறைத்து விட்டுப் போவதால், இறவைக்குப் போட்டிருக்கும செலவாகிய ரூ. 18-12-0-ம் இவர்களுக்கு லாபமாகிறது. இப்படி வர்ஷம் ஒன்றுக்கு 2-தரம் வெங்காய ஸாகுபடி செய்வதோடு முதல் மாஸூல் தைமாஸக் கடைசியில் அறுவடை செய்தபின் வேறு உரம் போடாமல் கேழ்வரகுப் பயிராவது, வெண்டை, கத்திரி, மிளகாய் முதலிய காய்கறிகளாவது போட்டு தக்க லாபம அடைகிறார்கள். அவ்விடத்திலுள்ள பறையர், இடையா

முதலான ஒவ்வொருவரும் கால் ஏக்கர் வெங்காயத் தோட்டமாவது பயிர செய்யாமலிருப்பதில்லை. காலையில் யதாப்ரகாரம் அவரவர்கள் வேலைக்குப் போவதற்கும் யாதொரு ஆட்சேபணை யில்லை.

மாஸஹல் எடுத்தல்.

காலையில் வெங்காயத்தைத் தாள்களோடு பிடுங்கி அங்கங்கே கும்பல் கும்பலாய் தாள்களோடு போட்டுவைத்து விடுகிறார்கள். மறு நாள்காலையில் தாள்களையெல்லாம் உள்புற மாகவும் கிழங்குகள் வெளிப்புறமாகவும் அடுக்கி வயலிலேயே வைத்து மேலே ஓலைபோட்டு மூடிவைக்கிறார்கள். சில நாள்கள் சென்றபின் இவைகளை யெல்லாம தாளகளோடு வீட்டில் கொண்டுபோய் பத்ரப்படுத்தி வைத்து, விற்கிற காலத்தில்தான் தாள்களை அரிகிறார்கள். இப்படித் தாள்களோடு வெங்காயம் வைக்கப் படுவதால அநேக மாஸங்கள் வரையில் வெங்காயம் கெடாமலும் அழுகிப்போகாமலும் இருக்கிறது. இப்படி வைததிருப்பதில் எந்த ஸமயத்தில வெங்காயம் விலை ஏறுகிறதோ அந்த ஸமயத்தில் விற்க முடிகிறது. ஸாதாரணமாய் வெங்காயம ஸாகுபடி செய்பவர்கள் இம் முறையைக் கையாடுவதால் தக்க லாபம் அடைவார்க ளென்பதில் ஸந்தேகமில்லை.

ஸமுத்ரக்கரை யோரங்களி லுள்ளவர்கள் பரீக்ஷார்த்தமாய் கொஞ்ச நிலத்திலாவது ஸாகுபடி செய்து பார்த்துத் தக்க லாபம் அடைவார்களென்று நம்புகிறோம். மணல் நிலமானதால் நித்யம் தவறாமல் தண்ணீர் இறைத்து வரவேண்டு மென்பதை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும்.

KEROSINE EMULSION.

கெரஸின் இமல்ஷன்.

கெரஸின் இமல்ஷன் என்னும் மருந்தானது பூச்சிகளைக் கொல்லும் மருந்துகளில் ச்ரேஷ்டமானவைகளில் ஒன்று. அந்த மருந்து வெகு காலமாக உபயோகத்தி லிருந்து வருகிறது. இந்த மருந்து செய்வதற்கு வேண்டிய சரக்குகள் அநேகமாய் யாவருக்கும் ஸுலபமாய் அகப்படக் கூடியவை. அவைகளாவன: கெரஸின் எண்ணெய், ஸோப் (சவர்க்காரம்), ஜலம், ஆகிய மூன்று தான்.

$4\frac{3}{4}$ படி (பட்டணம் படி) கெரஸின் எண்ணெயும், $2\frac{1}{2}$ படி (பட்டணம் படி), ஜலமும், 1-ராத்தல் சவர்க்காரமும் எடுத்துக் கொள்ள வேண்டும. முதலில் சவர்க்காரத்தை மெல்லியதாகச சீவி ஜலத்தில் சேர்க்கவும். ஜலத்தையும சவர்க்காரத்தையும் ஒரு பாத்ரத்தில் போட்டு அடுப்பில் வைத்துக் கொதிக்க வைக்க வேண்டும். ஸாதாரண கெரஸின் தகரத்தில் ஊற்றிக் கொதிக்க வைத்தால் போதுமானது. சவர்க்காரம் (ஸோப்) ஜலத்தில் கரைந்து போனதும் பாத்ரத்தை அடுப்பிலிருந்து இறக்கிக்கொண்டு, சவர்க்கார ஜலம் சூடாயிருக்கும் போதே அதில் கெரஸினை ஊற்றவும. பிறகு அதை ஒரு பம்பினாலாவது விசிறிஞ்சினாலாவது இழுத்தும் அடித்தும் அதைக் கடையவும். அல்லது மத்தினால் கடையவும். இதனால் அந்த ஜலம் கெட்டியான குழம்பு போலாகும. அந்தக் குழம்புக்குத் தான கெரஸின இமல்ஷன் என்று பெயர். 5-அல்லது 10 நிமிஷம கடைந்தால் போதும். எண்ணெய் குழமபின் மேல் மிதக்கக்கூடாது.

இந்த இமல்ஷனை அப்படியே உபயோகிக்கக் கூடாது. இதை அப்படியே கையிருப்பாய் வைத்துக்கொண்டு வேண்டும்போது அப்போதைக் கப்போது தகுந்த அளவு ஜலம் கலந்து உபயோகிக்க வேண்டும். இமல்ஷன் செய்வதற்கும், ஜலத்தில் கலப்பதற்கும் கூடுமானால் சுத்தமான மழை ஜலத்தை உபயோகிக்கவும்.

மருந்தை உபயோகிக்கும் வழி.

இமல்ஷனை ஜலத்தில கலந்து வைத்துக்

கொண்டு, பூச் செடிகளுக்கு ஜலம் வார்க்கும் தகரத்தால் மருந்தை பூச்சிகள் உள்ள மரஞ் செடிகளில் தெளிக்கவும். ஜலம் வரும் த்வாரங்கள் எவ்வளவுக்கெவ்வளவு சிறியனவாயிருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது. மரஞ் செடிகளில் மருந்தைத் தெளிப்பது பூச்சிகளைக் கொல்வதற்காகவாதலால், கூடியமட்டும் பூச்சிகளின்மேல்மாத்ரம் மருந்து படும்படி தெளிக்கவேண்டும். மருந்தை சதும்பத் தெளித்து இலையிலிருந்து வடிந்து சொட்டும்படியாவது, அடிமரத்தில் வழிந்தோடும்படியாவது, அவ்வளவு அதிகமாகத் தெளிக்கக் கூடாது. மருந்து ஜலம் பனிபோல சிறிய துளிகளாக செடியிலும் இலைகளிலும் தங்கும்படி செய்வதே முக்ய நோக்கமாகும். ரொம்ப மருந்து செடியின் வேர்களில் சேர்ந்தால் செடிகளுக்குக் கெடுதியுண்டாகக்கூடும். அதிகாலையிலாவது, ஸாயந்திரமாவது, அல்லது வானம் மேகத்தால் மூடப்பட் டிருக்கும்போதாவது தான் மருந்தை உபயோகிக்கவேண்டும்.

மரங்கள் தளிர்விட்டு குருத்துகளுடனிருக்கும்போது மருந்து தெளிக்கக்கூடாது. ரொம்ப வெயிலடித்துக் கொண்டிருக்கும் போது மருந்து தெளிக்கக் கூடாது.

மேலே எண்ணெய் மிதக்கும்போது இமல்ஷனை உபயோகிக்கக் கூடாது.

ஒரு தடவை மருந்தைத் தெளித்த பிறகு மறுபடியும் 3-வாரம் கழித்து ஒரு தடவை தெளிக்கவேண்டும். முதல் தடவையில் சாகாமல் தப்பின பூச்சிகளும்,நாசமாகாமல் தப்பின முட்டைகளிலிருந்து வந்த பூச்சிகளும் இதனால் இறந்துபோகும்.

மருந்தின் அளவு.

சில செடிகளிலுள்ள பூச்சிகளுக்கு கொஞ்சம் இமல்ஷன் கலந்த ஜலம் உபயோகித்தால் போதும். சில பூச்சிகளுக்கு அதிக இமல்ஷன் கலந்த ஜலம் உபயோகிக்க வேண்டும். உபயோகிக்கு முன் மருந்தை நன்றாய்க் கலக்கிக்கொள்ளவேண்டும்.

இந்த மருந்து பட்டமாத்ரத்தில் பூச்சிகள் செத்துப்போகின்றன. செடிகளில் வஸித்து அவைகளின் மரச் சாற்றைக் குடித்து வாழும் பூச்சிகளுக்கு இந்த மருந்து மிகவும் உபயோகமுள்ளது. மரங்களிலுள்ள எறும்புகளைக் கொல்லவும் இந்த மருந்தை உபயோகிக்கலாம்.

மரங்களிலுள்ள சிறிய ஜாதி எறும்புகளுக்கு நூற்றுக்கு 10 பாகம் இமல்ஷனுள்ள ஜலம் வேண்டும். எறும்புகள் பெரியவையாயும் தடித்த தேக முள்ளவையாயு மிருந்தால் நூற்றுக்கு 20 பங்கு இமல்ஷனுள்ள வேணடும்.

இமல்ஷனோடு ஜலம் கலப்பதில் நூற்றுக்கு 5 பங்கு இமல்ஷன் இருக்க வேண்டுமானால், 2½படி இமல்ஷனோடு 27படி ஜலம் கலக்கவும்.

நூற்றுக்கு 10 பங்கு இமல்ஷனிருக்க வேண்டுமானால், 2½ படி இமல்ஷனோடு 13½படி ஜலம் கலக்கவேண்டும். நூற்றுக்கு 15 பங்கு இமல்ஷனிருக்க வேண்டுமானால் 2½ படி இமல்ஷனோடு 8½ படி ஜலம் கலக்கவேண்டும். நூற்றுக்கு 20 பங்கு இமல்ஷனிருக்கவேண்டுமானல் 2½ படி இமல்ஷனோடு 5½படி ஜலம் கலக்கவேண்டும். நூற்றுக்கு 25 பங்கு இமல்ஷன் வேண்டுமானால் 2½படி இமல்ஷனோடு 4 படி ஜலம் கலக்கவேண்டும்.

ஸாதாரணமாய் மற்ற பூச்சிகளுக்கு நூற்றுக்கு 5-பங்கு இமல்ஷன் போதும். பெரிய பூச்சிகளுக்கு நூற்றுக்கு 10 பங்கு வேண்டும்.

இந்த மருந்து செய்வது ஸுலபமானதால் க்ராமத்திலுள்ள விவஸாயிகள் இதைத் தயாரித்து தங்கள் கொல்லைகளிலுள்ள அவரை, கத்தரி முதல் மற்ற செடிகள், மரங்கள் முதலிய வைகளில் இருக்கக் கூடிய பூச்சிகளைக் கொல்வதற்கு உபயோகித்துப் பார்ப்பார்கள் என்று எண்ணுகிறோம்.

DRY FARMING.

ட்ரை பார்மிங் என்னும் புன்செய் ஸாகுபடி.

ட்ரை பார்மிங் என்னும் புன்செய் ஸாகுபடியாவது வறட்சியான காலத்தில் நிலத்தை அடிக்கடி உழுவதால் நிலத்திலுள்ள ஈரத்தை வீண் போகாமல் பூமியிலேயே தங்கும்படி செய்வது.

இந்த முறையின் நோக்கம் என்னவென்றால், வானம் பார்த்த ப்ரதேசங்களில் பயிர்கள் ஸாகுபடி செய்வது ஸாத்யமாகும்படி நிலத்து மண்ணில் ஒருவித மாறுபாடு உண்டாக்குவதே. முதலில், நிலத்திலுள்ள மண்ணை ரொம்ப ஆழம் இளகும்படி செய்ய வேண்டும். இதனால், மழை பெய்தால், பெய்த மழை முழுவதும் அந்த நிலத்தில் சுவறிப் போகும். நிலம் இளகலாயிராமல் இருந்தால் பெய்யும் மழையானது அதிகமாக பூமிக்குள் சுவறாமல் வெளியிலோடிப் போய் விடுகிறது. மண் இளகலாயிருந்தால் ஜலம் உள்ளே ஊறிப் போய், அங்கேயே தங்கியிருந்து பின்னால் உபயோகப்படுகிறது.

மழை பெய்தபிறகு மேல் மண்ணை 2-முதல் 4 அங்குல ஆழத்துக்கு அடிக்கடி தளர்த்திக் கொடுக்கவேண்டும். இப்படிச் செய்தால் அடி மண்ணிலுள்ள ஈரம் மேலே வராமல் அடியிலேயே தங்கியிருக்கும். மேல் மண்ணைத் தளர்த்தி விடாமலிருந்தால் அடியிலுள்ளஜலம் மேலே வந்து சீக்ரம் ஆவியாய்ப்போய்விடும்.

நன்றாய் உழுது பிறகு அடிக்கடி வேவாரியால் மண்ணைக் கிளறிக் கொடுத்துக்கொண்டேயிருக்கவேண்டியது மிகவும் அவச்யம்.

மேல்மண் கெட்டியாய்ப் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவச்யம். மழை குறைவாயிருந்து ரொம்ப வறட்சியாயிருந்தால் மேல் மண்ணை அடிக்கடி தளரும்படி செய்யவேண்டும்.

நிலத்தில் களைகள்வளராமல்பார்த்துக்கொள்ளவேண்டும். களைகள் வளர்ந்தால் அடிமண்ணிலுள்ள ஈரம் அவைகளின் இலைகள்வழியாக ஆவியாய்ப்போய் பூமியிலுள்ள ஈரத்தைக் குறைத்துவிடும்.

மணல் கலந்த வண்டலிலும், களியுள்ள வண்டலிலுந்தான் ட்ரை பார்மிங் என்னும் புன்செய் ஸாகுபடி செய்யக்கூடும். பருமணல் உள்ள நிலத்திலும், பூராமணலான நிலத்திலும் கெட்டியான களியுள்ள நிலத்திலும் இந்தப் புன்செய் ஸாகுபடி செய்வது முடியாது. செங்குத்தான குன்றின் சாரல்களை விட ஸமமான அல்லது சற்று சாய்வான நிலங்களில்தான் இந்த ஸாகுபடி செய்வது நல்லது.

இந்தப் புன்செய் ஸாகுபடியால் ப்ரயோஜனம் ஏற்படக்கூடிய இடங்களில் ஸாதாரணமாய் நிலத்தின் தன்மையும் சீதோஷ்ண நிலைமையும் ஸாதகமாகவே இருப்பது வழக்கம். அப்படிப்பட்ட இடங்களில் ஸாதாரணமாய் மண் இளகலாகவும், அந்தமண் ரொமப ஆழம் வ்யாபித்தும் இருக்கும். அதில் உள்ள இந்த்ரிய வஸ்துவில், நனசெய் நிலத்து இந்த்ரிய வஸ்துவில் இருக்கும் நைட்ரொஜினை விட அதிகமாக நைட்ரொஜின் இருக்கிறது. அநேகமாய் பெய்யக்கூடிய மழை முழுவதும் ஸ்வல்ப காலத்துக்குள்ளேயே பெய்து விடுகிறது.

ஆகையால் அப்படிப்பட்ட இடங்களில் நிலத்தை உழுது திருத்தி மழை ஊறிப் போகும்படியான ஸ்திதியில் வைக்கவேண்டியது அவச்யம். மழை பெய்த பிறகு அந்த ஜலம் ஆவியாய்ப் போகாதபடி மேல் மண்ணை அடிக்கடி தளர்த்திக் கொடுக்க வேண்டும்.

அந்த நிலங்களில் விவஸாயக் கருவிகளை ஸுலபமாக உபயோகிக்கும் பொருட்டு க்ரமமாக ஸாகுபடி செய்ய வேண்டியது அவச்யம். வருஷாந்தப்பயிரானல் விதைகளை கூடியமட்டும் நேர் நேரான வரிசையில் விதைக்க வேண்டும். இப்படி விதைப்பதால் பயிர்வளர்ந்திருக்கும்போது அவைகளின் இடையில் பூமியை உழுவது முடியும்.

SPREADING FARM YARD MANURE.

தொழுவத் தெருவை நிரவிவிடுதல்.

அநேக விடங்களில் தொழுவத் தெருவை நிலங்களில் குப்பல் குப்பலாகக் கொட்டி வைக்கிறார்கள். இதை நிலத்தில் கொட்டினவுடனே நில முழுவதும் நிரவிவிடாவிட்டால் எருவிலுள்ள பயிருணவு ரொம்பவும் சேதமடைந்து விடுகிறதென்று ஒரு இங்க்லீஷ் பத்ரிகை சொல்லுகிறது.

எருவைக்குப்பல் குப்பலாகக்கொட்டிவைப்பதை விட நிலத்தில் உடனே நிரவிவிட்டால் பயிருணவு அதிகமாக சேதம் அடைவதில்லையாம். மேலும் உடனுக்குடன் நிரவிவிடுவதால் வயலில் எல்லாப்பக்கங்களிலும் ஒரே அளவாக எருவிடுவது ஸாத்யமாகிறது. நிலத்தை உழுவதற்கு வெகு காலத்துக்கு முன்னால் முதல் கொண்டே எருவை நிலத்தில் கொட்டி நிரவுவதால் நஷ்டம் ஏற்படும் என்று அநேகர் எண்ணி வந்தார்கள். ஆனால் தற்போது அது அப்படியல்ல வென்று தெரிகிறது.

அப்படி எருவைக்கொட்டி நிரவி விடுவதால் எரு ஸத்தானது மேல்மண்ணில் இறங்கி அடுத்தாற்போல் ஸாகுபடி செய்யப்படும் பயிருக்கு உணவாகத் தயாரா யிருக்கிறது.

தற்காலத்து விவஸாய சாஸ்த்ரிகள் எருவை உழுமுன் நிரவிவிடுவதே நல்லதென்று சொல்லிவருவதை உத்தேசித்து இங்க்லண்டில் சேர்திருந்திய விவஸாயி முறைகளை அநுஸரித்து வரும் ப்ரதேசங்களில நிலங்களை உழுவதற்கு இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்னாலேயே தொழுவத் தெருவைக் கொட்டி நிலத்தில் நிரவி விட்டு வைக்கிறார்களாம்.

SOME POINTS ABOUT MILKING.

மாடு கறப்பதைப்பற்றிய சில குறிப்புகள்.

பால் கறப்பதில் ரொம்ப வேகமாயாவது ரொம்ப மெதுவாயாவது கறக்காமல் நிதானமாய் கறப்பவர்களைக் கொண்டு கறக்கச்சொல்வதே மேலானது. இப்படிப் பால் கறப்பதால் மாடுகள் வெகுகாலம் வற்றிப் போகாமல் பால்கொடுத்துக்கொண்டிருக்கும். வேகமாய்ப் பால் கறப்பதில் சில ஸமயம் பால்காரன் அவஸரமாகப் போகவேண்டியிருந்தால் கடைசியில் பீச்சும்பாலை ஒட்டக்கறக்காமல் விட்டு விடுவான். இதனால் மாட்டுக்காரருக்கு நஷ்டம் ஏற்படுவதோடு மாடு சீக்ரம் வற்றிப்போவதற்கும் இடமேற்படும்.

மெதுவாய்க் கறப்பதில் ஒரு கஷ்டம் நேரிடக்கூடும். அப்படி மெதுவாய்க் கறப்பவர் எப்போதாவது கறக்க முடியாமலிருந்து வேகமாய்க் கறக்கும் வேறொருவர் கறந்தால் மாடு சரியாய்ப் பால்கொடுப்பதில்லை. எதற்கும் நிதானமாய்க் கறப்பவர்களைக்கொண்டு பால் கறப்பது தான் நல்லது.

தலையீற்றுக் கடாரியை பால் கறக்கும் போது முரட்டுத் தனமாய்ப் பால் கறக்காமல் அதைப் பக்ஷமாய் நடத்த வேண்டும். முதலில் அது சாந்தமாய் பால் கறக்க விடுவதற்கு அதற்கு ஏதாவது தீனி கொடுக்கலாம். ஆனால் கூடிய சீக்ரம் அந்த வழக்கத்தை நிறுத்தி விட வேண்டும். இல்லாவிட்டால் எப்போதும் தீனிவைத்தால்தான் பால் கறப்பதற்கு ஏற்கும். ஆரம்பத்திலிருந்து தீனி வைக்காமலே பால் கறக்கப் பழக்கி விட்டால் ரொம்ப உத்தமம். ஏனென்றால், தீனி தின்னும்போது மாடுகள் தங்களுடைய வாலை வீசி மாடு கறப்பவர்களுக்குத் தொந்திரவு கொடுக்கின்றன.

பால் கறப்பதில் கால ஒழுங்கு வேண்டியது மிகவும் அவசியம். பாலை அப்படியே விற்பவர்கள் இந்த ஒழுங்கை கவனிக்க முடியாது. ஒரு தரம் கறந்தபின் 12 மணிநேரமான பிறகே மறுபடியும் கறக்க வேண்டும்.

HENS AND LIGHT.

பெட்டைக் கோழிகளும் வெளிச்சமும்.

ஸமீபத்தில் இங்க்லண்டில் ஒரு பொருள்

காட்சியில், மின்ஸாரவெளிச்சத்தால் பெட்டைக்கோழிகளை அதிக முட்டை யிடும்படி செய்ய முடியுமா என்பதைப் பற்றி சில பரீக்ஷைகள் நடத்தினர்கள். ஐந்து பெட்டைகள் ஸாயந்திர மானதும் தங்கள் கூடுகளுக்குப் போய்ப் படுத்துக் கொள்ளும்படி விடப்பட்டன. வேறு ஐந்து பெட்டைகளிருக்கு மிடத்தில் மின்ஸார வெளிச்சம் வைத்து அவைகளை ஓடியாடும்படி செய்தார்கள். அஸ்தமன நேரமானதும் தங்கள் கூடுகளுக்குள் போய்விட்ட கோழிகள், நான்கு நாட்களில் பத்து முட்டைகள் இட்டன. அதிக நேரம் ஓடியாடிக் கொண்டிருந்த பெட்டைகள் 19 முட்டைகள் இட்டன. இன்னெரு விசேஷம என்ன வென்றல் அதிக காலம் ஓடித் திரிந்த பெட்டைகளின் முட்டைகள் மற்ற முட்டைகளை விடப்பெரியனவாயிருந்தனவாம். இதற்கு மின்ஸார விளக்குத்தான் வேண்டு மென்பதில்லையாம். பலமான காற்றில் அணையாத லாந்தல் (ஹரிகேன் லாம்ப்) வெளிச்சம் போதுமாம்.

பெட்டைகள் அதிக முட்டை யிட வேண்டு மென்று விரும்பும் விவஸாயிகள் மேல் சொன்னபடி செய்து பார்க்கலாம்.

EXPLOSIVES AND AGRICULTURE.

விவஸாயமும் வெடிமருந்தும்.

சென்ற வருஷம் மாசிமாஸத்திய ஸஞ்சிகையில் அமெரிக்கர்கள் நிலத்தைச் சீர்திருத்த வெடிமருந்தை உபயோகிப்பதைப்பற்றி எழுதியிருந்தோம். ஆஸ்ட்ரேலியாவிலும விவஸாயிகள் வெடிமருந்தை உபயோகித்து வருகிருர்கள். அவர்கள் அங்கே நிலத்தின் அடி மண்ணைத் தளரச்செய்வதற்கு மாத்ரமன்றி கால்வாய் வெட்டுதல், ஜலத்தை வடிய விடுதல் முதலிய வேறு பல விவஸாய வேலைகளுக்கும் வெடிமருந்தை உபயோகிக்கிருர்கள்.

நிலம் ஈரமாயிருக்கும்போது வெடிமருந்தை உபயோகிக்கக்கூடாது. அப்படி உபயோகித்தால் வெடிமருந்தால் அதிக பலன் ஏற்படுவதில்லை. தரை உலர்ந்திருக்கும்போது வெடிமருந்தை உபயோகித்தால் ரொம்ப பலன் ஏற்படுவதோடு நிலத்தில் அதிகபாகம் தளர்ந்து கொடுக்கிறது. வெடிமருந்து வைப்பதற்கு $1\frac{1}{2}$ அடி ஆழம் முதல் $2\frac{1}{2}$ அடி வரையில் குழிகள் வேண்டும். ஒவ்வொரு குழிக்கும் மத்தியில் 7 அடிமுதல் 18 அடிவரையில் இடைவெளியிருக்கலாம். வெடி மருந்தால் நிலத்தின் மண் புரண்டு கொடுக்க வேண்டுமென்பதில்லை. நிலத்தின் மண் கட்டுத்தளர்ந்து கொடுத்தால் போதும்.

பல்வருஷங்கள் ஸாகுபடியிலிருந்து ரொம்ப பீடாயிருக்கும் நிலத்தைக்கூட வெடிமருந்தால் நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவந்து விடலாமாம்.

வெடிமருந்து உபயோகிப்பதால் பல விதத்தில் நன்மை ஏற்படுகிறது. நிலத்தின் அடிப்பாகத்திலுள்ள பயிருணவு பயிருக்கு உதவுவது ஸாத்யமாகிறது. மழை ஜலமானது அடிமண்ணில் இறங்கி தங்கியிருக்கக் கூடும். நல்ல வடிகால் வஸதி ஏற்படும். காற்று நிலத்தில் நன்ருய் ஊடுருவிச் செல்லக்கூடும்.

பயிரின் வேர்கள் அடிமண்ணில் ஸுலபமாய் இறங்கும். வயல்களில் உள்ள எலிகள் ஓடிப் போகின்றன. மாஸூல் ஏராளமாய் கிடைக்கும்.

ஆஸ்ட்ரேலியாவில் நிலத்துக்கு வெடி மருந்து உபயோகிக்க குழிகளின் தூரத்துக்கும், மருந்தின் அளவுக்கும் தகுந்தபடி ஏகர் ஒன்றுக்கு 10 ரூபாய் முதல் 40 ரூபாய் வரையில் செலவாகிறதாம்.

WHY THE AMERICAN FARMER IS RICH.

அமெரிக்க விவஸாயி தனவந்தனு யிருப்பதற்குக் காரணங்கள்.

அமெரிக்காவில் விவஸாயமானது ரொம்பவும் சீர்திருத்த மடைந்திருக்கிறது. அங்கே

விவஸாயத் தொழிலானது தோன்றினது தோன்றினபடியெல்லாம் செய்து வரும் ஒரு தொழிலாயிராமல் அது ஒரு சாஸ்த்ரமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. விவஸாயிகள் தங்களுடைய பயிருக்கு நோய்கள் உண்டாகாமலும், காலஸ்திதி மாறுவதால் அதிக கெடுதிகள் நேரிடாமலும் பார்த்துக்கொள்ளுகிறார்கள். நிலத்தில் ஈரம் தங்கியிருக்கும்படி வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொள்ளுகிறார்கள். உபயோகமற்ற நிலங்களையும் நல்ல எருக்களிட்டு ஸாகுபடிக்கு ஏற்ற நிலமாக மாற்றிவிடுகிறார்கள். அவர்களுக்கு எப்படி மாற்றுப் பயிர்கள் ஸாகுபடி செய்யவேண்டுமென்று தெரியும். பல விடங்களில் அவர்கள் நிலங்களுக்கு தகுந்த உரமிட்டு தகுந்தபடி ஸாகுபடிசெய்து ஸாதாரணமாய்க் கிடைக்கும் மாஸுலைவிட அதிகமாக கண்டுமுதல் செய்து வருகிறார்கள். இன்னம் அவர்கள் பலவித சீர்திருத்தங்களை அனுஷ்டித்து அதிகப் பலனடைந்து வருகிறார்கள். இதனால் அவர்கள் மிகவும் பணக்காரர்களாக ஆகியிருக்கிறார்கள்.

இப்படி அவர்களிடம் முன்னேற்றம் திடீரென்று ஏற்பட்டு விடவில்லை. அங்கே ஜனங்கள் விவஸாய விஷயமாய் வெகுகாலம் ரொம்பவும் பாடுபட்டு உழைத்து இப்படி உயர்ந்த நிலைமையை அடைந்திருக்கிறார்கள். கவர்ன்மெண்டாரும் விவஸாயிகளின் நிலைமையை உயர்த்த மிகவும் பாடுபட்டு வருகிறார்கள். நமது தேசத்திலேயும பாடுபட்டால் நிலம் நன்றாய் விளையுமென்பதில் ஸந்தேகமில்லை. வெள்ளாமையோ, வல்லாமையோ !

SINGLE PLANTING OF PADDY.

நெல் ஸாகுபடியில் ஒற்றையலகு நடுதல்.

நெல ஸாகுபடியில் ஒற்றையலகாக நட்டால், நெல் நாற்றுகளை 9 அங்குல தூரத்துக்கு ஒன்றாக நடுவதுதான் லாபகரமானதென்று சொல்லப்படுகிறது. கவர்ன்மெண்டு விவஸாயப்பண்ணைகள் எல்லாவற்றிலும், ஆராய்ச்சிக்காக வேறு விதமாய் நட்டாலும், ஸாதாரண ஸாகுபடி நிலத்தில் ஒற்றை யலகாகத்தான் நடுகிறார்கள். ஸாமல்கோட்டா விவஸாயப் பண்ணையிலுள்ள நன்செய் நிலங்களில் ஏகருக்கு சராசரி 1302 பட்டணம்படி நெல் கிடைத்திருக்கிறது. அதே காலத்தில் அந்தப் பண்ணையின் சுற்றுப்புறத்திலுள்ள நிலங்களிலே, ரொம்ப அதிகபக்ஷமாக 1009 பட்டணம் படி நெல் தான் கிடைத்தது. பாலூர் விவஸாயப்பண்ணையில் சராசரியில் முக்யமான போகத்தில் மாத்ரம ஏகருக்கு 963 பட்டணம் படி நெல் கிடைத்தது. அதற்குப்பக்கத்திலுள்ள நிலங்களில் அதிகபக்ஷமாக கிடைத்தது ஒரு ஏகருக்கு அதே போகத்தில் 851 படி நெல்தான். இந்த வித்யாஸத்துக்குக் காரணம் ஒற்றையலகு நாற்று நடுதலும், பசுந்தாளுரம் போடுவதுமே. இன்னங்கூட விவஸாயிகள் ஒற்றையலகையும் பசுந்தாளுரத்தையும் உபயோகிக்காமலிருப்பதற்கு தகுந்த காரணமில்லையென்று தோன்றுகிறது.

SOAKING SEED PADDY.

விதை நெல்லை ஊறப் போடுவது.

பித்தளை அல்லது செப்புப்பாத்ரத்தில் நெல் ஊறப்போடுவதால் த்ராவகங்கள் உண்டாகி நெல்லை முளைக்காதபடி செய்கிறதென்பது சரியான அபிப்ராயமல்ல. அப்படி ஊறப்போட்ட நெல் ஏன் சரியாய் முளைப்பதில்லை என்றால், நெல் ஊறினவுடன் சற்று பருமனாகும்; கோணியில் இறுகக்கட்டி ஊறப்போட்டால் ஊறிப் பருமனாகும்போது ஊறி மேல்போக இடமில்லாததால் அதிக பிகுவாயிருக்கிறது. அப்போது முளை நன்றாய்க் கிளம்புகிறது. கோணியோடு அப்படியே தூக்கிக்கொண்டு போவதில் முளைகளும் சேதமாவதில்லை. கொப்பரையிலே ஊறப்போட்டு வைக்கோல்கொண்டு இறுக்கி மூடிஊறினவுடன், மேலே

ளிளம்பாதபடி சரியான பாரம் அதற்குமேல் வைத்தால் சரியானபடி முளையுருவி நன்றாய் முளைக்கும்.

LOCUST POISON.

வெட்டுக்கிளிகளைக் கொல்ல மருந்து.

வெட்டுக்கிளிகள் வந்து பயிரை அழிக்கும் இடங்களில் வெட்டுக்கிளிகளைத் தொலைப்பதற்குப்பலவழிகள் இருக்கின்றன. அவைகளில் ஒரு முறை வெட்டுக்கிளிகள் முட்டையிட்டிருக்கும் போதாவது, அல்லது அவைகள்வெளிக்கிளம்பியிருக்கும் போதாவது, ஜலத்தில் ஆர்ஸனேட் அப் காப்பர் என்னும் மருந்தைக் கரைத்து அவைகளின்மேல் தெளிப்பதுதான். இந்த மருந்து ஜலத்தில் மொலாஸ்ஸஸ் என்னும் தேன்பாகும் சர்க்கரையும் கலந்து கொள்ளவேண்டும். இந்த மருந்து பட்ட மாத்ரத்தில் வெட்டுக்கிளிகள் இறந்து போகின்றன. மருந்து மேலே படாமல் தப்பின வெட்டுக்கிளிகளும் மருந்து பட்டிருக்கும் புற்களையும் விஷத்தாலிறந்து போன வெட்டுக்கிளிகளையும் தின்பதால் இறந்து போகின்றன.

தென் ஆப்ரிக்காவில் கவர்ன்மெண்டார் தங்களுடைய மேற்பார்வையில் இப்படிப்பட்ட வெட்டுக்கிளி மருந்து தயார்செய்து இரும்புப் பாத்ரங்களில் ஊற்றி மூடி விடுகிறார்கள்.

ஒவ்வொரு பாத்ரத்திலும் 5-ராத்தல் ஆர்ஸனேட் அப் ஸோடாவும், 2½-படி மொலாஸ்ஸஸும்,10-ராத்தல் பழுப்புச் சர்க்கரையும் கலக்கப்பட்டிருக்கின்றன.

இந்த மருந்து தயார் செய்ய முதலில் 200-ராத்தல் ஆர்ஸனேட் அப் ஸோடாவை 36 பட்டணம் படி கொதிக்கும் ஜலத்தில் கரைத்து அதோடு இன்னம் 12 பட்டணம் படி குளிர்ந்த ஜலத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு இரும்புப் பாத்ரத்திலும் 1¼ படி மருந்தை ஊற்றி அதோடு 24 படிமொலாஸ்ஸைச் சேர்த்து நன்றாய்க் கலக்கிவிட வேண்டும்.

வெட்டுக்கிளிகள் பிறந்து இரண்டு வாரத்துக்கு மேலாகாவிட்டால் மேல் சொன்னபடி தயாரித்த மருந்தில் 1 பாகத்தோடு 60 பாகம் ஜலத்தைக் கலந்துகொள்ள வேண்டும். வெட்டுக்கிளிகள் பிறந்து இரண்டுவாரத்துக்கு மேலாகிவிட்டால் 1 பாகம் மருந்துடன் 50 பாகம் ஜலம் கலந்து கொள்ளவேண்டும்.

இந்த மருந்தை வெட்டுக்கிளிக்கூட்டம் செடிகளின்மேல் அமைதியாய்த் தூங்கிக்கொண்டிருக்கும்போது அவைகளின்மேல் ரொம்ப கொஞ்சமாய்ப் பனிவிழுவதுபோல் தெளிக்கவேண்டும். அல்லது வெட்டுக்கிளிகள் வருவதற்கு முன்னால், வரும் வழியில் இருக்கும் செடிகளில் மருந்தைத் தெளிக்கவேண்டும். புல்லையாவது வெட்டுக் கிளிகளையாவது மருந்தால் நன்றாய் நனைத்துவிடக்கூடாது. வெட்டுக்கிளிகள் தித்திப்பான மருந்து ஜலத்துக்காக அதனருகே வந்து, அந்த மருந்தினால் சிலமணி நேரத்துக்கெல்லாம் இறந்து போகின்றன. வெட்டுக்கிளி மருந்தை உபயோகிக்கும்போது மாடுகளுக்குக் கெடுதி நேரிடாதபடி முன் ஜாக்ரதை எடுத்துக்கொள்ளவேண்டும்.

இந்த மருந்தால் அதைஎடுத்து உபயோகிப்பவர்களுடைய தேகத்தில தோலில் எரிச்சல் காணுமாதலால் அந்த மருந்து நன்றாய் மூடியுள்ள பாத்ரங்களில் வைத்து விற்கப்படுவதோடு, மருந்தைத் தொடாமலே ஜலத்தில் கலந்து விடும்படிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதை செடிகளின்பேரிலும் வெட்டுக்கிளிகளின்பேரிலும் தெளிப்பதற்கும் தகுந்த பம்புகளை உபயோகிக்கிறார்கள்.

The Co-operative World.
கோவாபரேஷன் பகுதி.

OLD DEBTS OF MEMBERS.
மெம்பர்களின் பழைய கடன்கள்.

ஸமீபத்தில் கோவாபரேடிவ் ஸங்கங்களின் ரெஜிஸ்ட்ரார்கள் கான்பரென்ஸ் ஸிம்லாவில் கூடினபோது, வடக்கே அகோலாவிலுள்ள ஸெண்ட்ரல் பாங்கியின் சேர்மனாகிய ராவ் ஸாகிப் கே. ஜி. தாம்லே என்பவர் மெம்பர்களின் பழைய கடன்களைப்பற்றி ஒரு வ்யாஸம் வாசித்தார். அந்த வ்யாஸத்தின் ஸாராம்சம் பின்வருமாறு.

க்ராம கோவாபரேடிவ் ஸங்கங்கள் நன்றாய் நடந்து வரவேண்டுமானால் அந்த ஸங்கங்களிலுள்ள மெம்பர்கள் வெளியில் வாங்கியிருக்கக் கூடிய பழைய கடன்களைத் தீர்த்துவிடுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டியது அவச்யம். இப்படி ஒன்றும் செய்யாவிட்டால் கோவாபரேஷனால் உண்டாகும் நன்மையெல்லாம் வ்யர்த்தமாகும். கோவாபரேஷன் ஏற்பாட்டில் மெம்பர்களுக்கு நம்பிக்கைக் குறைவு உண்டாகிவிடும். இதனால் க்ராம ஸாவ்காரினுடைய நிலைமை பலப்பட்டு, மெமபர்கள் மறுபடியும் அவருடைய வலையில் அகப்பட்டுக் கொள்வார்கள். ஆகையால் கோவாபரேடிவ் ஸங்கங்கள் க்ராம ஸாவ்கார் செய்துவருவது போல் செய்து வரவேண்டியது அவச்யமென்று மிஸ்டர் தாம்லே அபிப்ராயப்படுவதாகச் சொன்னார். இந்த அபிப்ராயம் சரியாயிருக்குமானால் கடன்களைத் தீர்க்கப் பணத்துக்கு என்ன செய்கிறது என்று கேள்வியுண்டாகிறது. பணம் கடன் கொடுப்பதில் மெம்பர்கள் கடனைத் திருப்பிக் கொடுக்கக் கூடியவர்களா என்று பார்க்க வேண்டியிருக்கிறது. ஸாதாரணமாய் அந்தந்த விடங்களில் விசாரிப்பதனாலேயே இதை ஸுமாராய் அறிந்து கொள்ளலாம். பேரார் மாகாணத்தில் ஸங்கங்கள் வெகுவாய் விவஸாயஸம்பந்தமானவைகள். அவைகளிலுள்ள மெம்பர்கள் ஸாவ்கார்களிடம் ரொம்பக் கடன்வாங்கியிருக்கிறார்கள்.

நிலம் விளையாமல் போவது, பஞ்சம் முதலிய ஆபத்துகள் உண்டாவதால் விவஸாயிகளாகிய மெம்பர்கள் எப்போதும் கடனைத் திருப்பிக் கொடுக்க முடிவதில்லை. ஆகையால் அவர்களுக்கு அதிகநாள் தவணையுள்ள கடன்கள் தான் நல்லது.

ஆனால் அதிகாலத்தவணையுள்ள கடன்கள் கொடுப்பதென்றால் மெம்பர்கள் தகுந்த ஜாமீன் கொடுக்கவேண்டும். அவர்கள் வெகுவாய் ஏழைகளாதலால் அவர்களுடைய ஜங்கம ஸொத்துகள் தகுந்த ஈடாகமாட்டா. நிலங்கள் தான் நல்ல ஜாமீனாகும். ஆனால் சில ஏற்பாடானது மாகாணத்துக்கு மாகாணம் வித்யாஸப்படுவதால் இது விஷயமாகத் தொந்தரவு ஏற்படுகிறது. நல்ல ஜாமீனில்லாவிட்டால் பணம் கொடுக்க முடியாது. மற்ற மாகாணங்களில் வழக்கமெப்படியிருக்கிறதென்று தெரியவேண்டும்—என்று சொன்னார்.

வ்யாஸம் படித்தானபிறகு கான்பரென்ஸுக்கு வந்திருந்தவர்கள் இந்த விஷயத்தைப் பற்றிப் பேசினார்கள்.

தார்வாரிலுள்ள ஸங்கங்கள் மெம்பர்களுடைய கடன்களில் 80,000 ரூபாய் வரையில் தீர்த்திருக்கின்றனவாம். இந்தப் பணம் வெளியிலிருந்து வாங்கப்படவில்லை. குஜராத்தில் ஒரு க்ராமத்தில் மெம்பர்களை யெல்லாம் கூப்பிட்டு பழைய கடன்களைத் தீர்ப்பதற்கு ஏற்பாடு

செய்யவேண்டுமென்று சொன்னபோது, மெம்பர்கள், தாங்கள் ஸாவ்கார்களிடம் நூற்றுக்கு 6-வீதம் கடன் வாங்கி யிருப்பதாகவும், கோவாபரெடிவ் ஸங்கங்களில் கடன் வாங்கினால் 9⅜ வீதம் வட்டி கொடுக்க வேண்டி யிருக்குமென்றும், ஆகையால் பழைய, கடன்களைத் தீர்க்கவேண்டியதில்லை யென்றும் சொன்னார்கள்.

பம்பாயில் கடன் கொடுத்தால் ஸங்கங்கள் நிலங்களை போக்யமாக வாங்கிக்கொள்ளுகின்றனவாம். எந்த மெம்பருக்காவது நிலமில்லாமலிருந்தால் அவருக்கு ஸ்வல்பமான தொகையே கொடுப்பது வழக்கமாம்.

கடன்களில் இரண்டுவிதமுண்டு. ஒன்று ஈட்டுக் கடன். மற்றது ஈடு இல்லாத கடன். ஈட்டுக் கடன்களுக்கு அதிக வட்டி கிடையாது. ஆனால் ஸாதாரண கடனுக்கோ வட்டி அதிகம். ஸாவ்கார்கேட்கும்வட்டியானது கோவாபரெடிவ் ஸங்கங்கள் கேட்கும் வட்டியைவிட அதிகமாயிருப்பதால் ஈடு இல்லாத கடன்களைத் தீர்ப்பது ஸுலபமாயிருக்கும்.

நிலத்தை சொந்தக்காரர் வசத்திலிருந்து மாறுவதற்குத் தடைகள் ஏற்பட்டிருப்பது கோவாபரேஷனுடைய முன்னேற்றத்துப்பொருந்தியதல்ல வென்று ஒருவர் சொன்னார். பஞ்சாப்பில் நிலத்தைக் கடன் கொடுத்தவருக்குப் பராதீனம் செய்வது முடியாது. மத்யமாகாணங்களிலோ, ஸ்வல்பகாலத்துக்கு நிலங்களை ஈடு வைப்பது கூடாது. வங்காளத்தில், ஜமீன்தாரின் ஸம்மதமில்லாமல் நிலங்களை மாற்றக்கூடாது, கடைசியில் ப்ரெஸிடெண்ட், ஒவ்வொரு மாகாணங்களிலும் நிலத்தைப் பராதீனஞ்செய்வதைப்பற்றி சட்டம் வித்யாஸமாயிருப்பதால், பொதுவான விதி ஒன்றும் ஏற்படுவதற்கில்லையென்று முடிவு செய்தார்,

THE HADAPSAR CO-OPERATIVE SOCIETY.

ஹாடாப்ஸார் கோவாபரேடிவ் ஸங்கம்,

வடக்கே பூனாவுக்கு ஸமீபத்தில் உள்ள ஹாடாப்ஸார் என்னும் சிறிய க்ராமத்தில் ஒரு கோவாபரெடிவ் ஸங்கம் இருக்கிறது. இது 1910-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டதாயினும் இப்போது ரொம்ப நல்ல நிலைமையில் இருப்பதோடு மற்ற ஸங்கங்கள் பார்த்து நடப்பதற்கு ஒரு மாதிரி ஸங்கமாக விளங்குகிறதாம். இது முதலில் 80-மெம்பர்களோடு ஸ்தாபிக்கப் பட்டது. இப்போது 165-மெம்பர்கள் இருக்கிறார்கள். ப்ராமணர்கள், மராட்டியர்கள், தையற்காரர்கள், வண்ணார்கள், வாணியர்கள், மகமதியர்கள், கிறிஸ்தவர்கள், தாழ்ந்தஜாதியார்கள் ஆகியபலரும் இந்த ஸங்கத்தில் இருக்கிறார்களாம். இந்த ஸங்கத்தின் மூலதனம் 50,000-ரூபாயாகும். இந்த ஸங்கத்தில் நாம் கவனிக்க வேண்டிய ஒரு புது அம்சம் என்னவென்றால், இதில் 17-ஸ்திரீகள் " மெம்பர்களாயிருக்கிறார்கள் என்பதே. அவர்கள் 3000-ரூ. வரையில் டெபாஸிட் செய்திருக்கிறார்கள். இவர்களைக்கண்டு க்ராமத்திலுள்ள மற்ற ஸ்த்ரீகளில் பலரும் 1350-ரூபாய் வரையிலும்டெபாஸிட் செய்திருக்கிறார்களாம். இவர்களில் பலர் கூலிவேலை செய்து ஜீவிப்பவர்களாம். இப்படிப் பணம் டெபாஸிட் செய்வதால் அவர்களிடம் செட்டாய் ஜீவிக்குங்குணம் அதிகரிக்கும் என்பதில் என்ன தடை? சென்ற மூன்று வருஷகாலமாக இந்த ஸங்கம் மெம்பர்களுக்கு விவஸாயச் செலவுகளுக்காக மட்டும் லக்ஷத்து பதினெண்ணாயிரம் ரூபாய் வரையில் கடன் கொடுத்திருக்கிறது. இந்த ஸங்கத்தால் மெம்பர்களுக்கு மொத்தத்தில் 15,000 - ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறதாம். இந்த ஸங்கம் ஜனங்களுக்குப் பணங்கொடுப்பதே யல்லாமல், விவஸாய ஸம்பந்தமான விஷயங்களைப் பற்றியும் கோவாபரேஷனைப் பற்றியும் தகுந்தவர்

களைக் கொண்டு ப்ரஸங்கம் செய்யும்படி ஏற்பாடுகள் செய்திருக்கிறது. மெம்பர்களுக்குள் கார்ய நிர்வாகத்திறமை அதிகரித்து வருவதோடு அவர்கள் பொதுவிஷயங்களில் அதிக ச்ரத்தையும் பாராட்டி வருகிறார்களாம்.

CO-OPERATION IN MADRAS.

சென்னையில் கோவாபரேஷன்.

சென்ற 1913-ம் வருஷம் ஜூன்மாஸம் 30-ந்தேதியோடு முடிவான வருஷத்தில் சென்னையில் ஸெண்ட்ரல் பாங்கிகள் 6-லிருந்து 7-க்கும், மேல் விசாரணை செய்யும் யூனியன்கள் 3-லிருந்து 4-க்கும் அதிகரித்தன. ஸெண்ட்ரல் பாங்கிகளில் மெம்பர்களின் ஸங்க்யை 643 ஆகவிருந்தது சென்றவருஷம் 835 ஆக அதிகரித்தது. யூனியன்களில் 96-ஸங்கங்கள் இருந்தன. விவஸாயிகளுக்கான ஸங்கங்கள் 916-லிருந்து 1008 ஆக அதிகரித்திருக்கின்றன. அவைகளிலுள்ள மெம்பர்களின் ஸங்க்யை 52,006-லிருந்து 64,007-ஆக அதிகரித்திருக்கிறது.

விவஸாயிகளல்லாத மற்றவர்களுடைய ஸங்கங்கள் 47-லிருந்து 59-ஆகவும், அவைகளிலுள்ள மெம்பர்களின ஸங்க்யை 13,507-லிருந்து 17,841 ஆகவும் அதிகரித்திருக்கின்றன. ரொம்ப ஸங்கங்கள் உள்ள ஜில்லாக்கள் செங்கல்பட்டும (193ஸங்கங்கள்) அநந்தபூருமாகும் (148 ஸங்கங்கள்). கஞ்சம ஜில்லாவில் 4-ஸங்கங்களும் பல்லாரியில 3-ஸங்கங்களும் இருக்கின்றன. இவைகள்தான் ரொம்ப குறைந்த ஸங்கங்கள் உள்ள ஜில்லாக்கள். ஸெண்ட்ரல் பாங்கிகளின நடைமுதல், யூனியன்களின் நடைமுதலுள்பட, நாற்பது லக்ஷத்து முப்பத்தொன்பதினாயிரம ரூபாய். விவஸாயிகளுக்கான ஸங்கஙகளின நடை முதல் 44,38,000 ரூபாய்.

விவஸாயிகளல்லாத மற்றவர்களுக்கான ஸங்கங்களின் நடைமுதல்10,70,000 ரூபாய். விவஸாயிகளுக்கான ஸங்கங்கள் 23 லக்ஷம் ரூபாயும் விவஸாயிகளல்லாதவர்களுக்கான ஸங்கங்கள் 8·43 லக்ஷம் ரூபாயும் கடன் கொடுத்திருக்கின்றன. அந்த வருஷததில் 3-தான்ய பாங்கிகளும, உபாத்யாயாகளுக்கு 3-ஸங்கங்களும்,சென்னையில் உப்பு ஏற்றும் கூலிகளுக்கு ஒரு ஸங்கமும், சேலத்தில் தோட்டிகளுக்கு ஒரு ஸங்கமும் ஸ்தாபிக்கப்பட்டன.

ஸெண்ட்ரல் பாங்கிகளின் லாபம் 76,604 ரூபாய். இதற்கு முந்தின வருஷம் 54,255 ரூபாய்லாபம் கிடைத்தது. விவஸாயிகளல்லாதவர்களுக்கான ஸங்கங்களின் லாபம் 55,500, ரூபாய். இதற்கு முந்தின வருஷம் 40,550 ரூபாய் லாபம் கிடைத்தது. விவஸாயிகளுக்கான ஸங்கங்களின் லாபம 1,03,000 ரூபாய். இதற்கு முந்தின வருஷத்தில் 67,176 ரூபாய் லாபம் கிடைத்தது. எல்லா ஸங்கங்களினுடையவும் ரிஸர்வு பண்டானது 3,00,986-லிருந்து 4,43,357 ஆக அதிகரித்தது. சென்ற வருஷத்தில் 106-ஸங்கங்கள் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டன.

CO-OPERATIVE CATTLE INSURANCE IN BURMA.

பர்மாவில் கோவாபரேடிவ் கால் நடை இன்ஷூரென்ஸ்.

பர்மாவில் 1912-13-ம் வருஷத்தில் கால் நடை இன்ஷூரென்ஸ் ஸங்கங்கள் 23-லிருந்து 57-ஆக அதிகரித்திருக்கின்றன. இன்னும் இப்படிப்பட்ட ஸங்கங்கள் ரொம்ப அதிகரிக்கும் என்று தோன்றுவதால் அவைகளுக்கு நஷ்டம் வராமல் பாதுகாக்க வேண்டியது அவச்யமாகிறது. அதற்கு என்ன செய்வதென்றால் மேல் சொன்ன கம்பெனிகள் எந்தக் கால்நடைகளை இன்ஷூர் செய்தனவோ அந்தக் கால்நடைகளால் ஏதாவது நஷ்டம் வரும் பக்ஷத்தில் அதில் ஒரு பாகத்தை ஈடு செய்யவேண்டுமென்று இதர இன்ஷூரெ

ன்ஸ் கம்பெனிகளோடு ஒப்பந்தம் செய்து கொள்வதுண்டு. இதற்கு ரீ-இன்ஷூரென்ஸ் என்று பெயர். இப்படி ரீ-இன்ஷூரென்ஸ் ஏற்பாடுகள் இல்லாததால் ரீ-இன்ஷூரென்ஸ் ஏற்பாடுகள் செய்வதைப்பற்றி டிபார்ட்மெண்டார் யோசித்து வருகிறார்கள். மறுபடியும் இன்ஷூர் செய்வதாகிய ஏற்பாடு செய்யப்படுகிற வரையில் புது ஸங்கங்கள் ரெஜிஸடர் செய்யவேண்டாம் என்று எண்ணி அப்படியே புது ஸங்கங்கள் ரெஜிஸ்டர் செய்யவில்லை. இப்போதுள்ள பை-லாக்களின்படி இன்ஷூர் செய்யப்படும் மாடொன்றுக்கு வருஷம் ஒன்றுக்குக் கட்டவேண்டிய ப்ரீமியம் 3 ரூபாயாகும். கோமாரியால் கால்நடைகள் இறந்தால் அதற்கு இன்ஷூரென்ஸ் தொகை கொடுப்பதில்லை.

57-ஸங்கங்களிடத்திலும் 3,300 ரூபாய் கையிருப்புத் தொகையாயிருந்தது. 9-கால்நடைக ளிறந்துபோனதற்கு 141 ரூபாய் இன்ஷூரன்ஸ் தொகையாகக் கொடுக்கப்பட்டது. இன்ஷூரென்ஸ் ஸங்கங்களுக்கு ஏற்பட்ட செலவு ரூபாய் 34-தான். வருஷக் கடைசியில் இன்ஷூர் செய்யப்பட்டிருந்த கால்நடைகளின் தொகை 2,099. இவற்றிற்கு இன்ஷூரென்ஸ் செய்திருக்கும் தொகை 76,396 ரூபாய். கால்நடைகள் கோமாரியால் இறந்தாலும் அவைகளுக்கு இன்ஷூரென்ஸ் தொகை கொடுக்கலாமா என்பதைப்பற்றி டிபார்ட்மெண்டார் ஆலோசித்துவருகிறார்கள்

பர்மாவில் 57-கால்நடை இன்ஷூரென்ஸ் ஸங்கங்கள் இருக்க, இந்தியாவிலோ ஒரு ஸங்கமாவது கிடையாது. இது கோவாபரேடர்கள் கவனிக்க வேண்டிய விஷயம்.

CO-OPERATIVE LAND RECLAMATION.

கோவாபரேஷனால் நிலத்தைத் திருத்துதல்.

ஸமீபத்தில் ஹாலண்டிலுள்ள ஒரு ஊரில் நிலத்தைச் சீர்திருத்துவதற்காக ஒரு கோவாபரேடிவ் ஸங்கம் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. விவஸாயம், தோட்டவேலை, கால்நடை அபிவ்ருத்தி முதலிய வேலைகளுக்காக ஸாகுபடியாகாத நிலத்தை ஸாகுபடிக்குக்கொண்டு வருவதும், ஸாகுபடியாகி வரும் நிலங்களை சீர்திருத்துவதுமே இந்த ஸங்கத்தின் நோக்கங்களாம். இந்த நோக்கங்கள் கைகூடுவதற்காக அந்த ஸங்கம் பின் வரும் வழிகளை அநுஸரிக்கப்போகிறதாம்.

(1) ஸாகுபடியாகாத தரிசு நிலங்களில் மரங்கள் வைத்து வளர்த்தும், புல்வளர்த்தும் அவைகளை ஸாகுபடிக்கேற்றதாகச் செய்வதில் நிலஸ்வான்களுக்கு உதவியாக இருப்பது.

(2) ஸாகுபடியாகாத அல்லது சீர்திருத்தப்பட்ட நிலங்களை குத்தகைக்குவிடுவதாலும், அல்லது விலைக்கு வாங்கி விற்பதாலும், சிறு குடிகளினுடைய நிலைமையை உயர்த்துவது. க்ராமாந்தரத்தில் சிறு குடிகளுக்கு வீடு முதலிய கட்டிடங்கள் கட்டுவதில் உதவி செய்வது.

(3) யந்த்ரங்கள், விவஸாயக் கருவிகள் முதலியவைகளை விவஸாயிகளுக்கு வாடகைக்கு விடுவது.

(4) ஸங்கத்துக்காக ஸொந்தத்திலாவது அல்லது மற்றவர்களுக்காகவாவது வ்யாபாரம், காட்டு மரங்கள் வைத்து வளர்த்தல், பயிரிடுதல் ஆகிய இந்தத் தொழில்களைச் செய்வது.

கால்நடை, மீன், விதைகள், செடிகள் ஆகிய இவைகள் விலைக்கு வாங்குவது, விற்பது, அல்லது ஸங்கமே ஸொந்தத்தில் உற்பத்தி செய்வது.

(5) மேலே சொன்னவைகள் நடப்பதற்காக லேவாதேவி பாங்கி வ்யாபாரம்செய்வது.

இந்த ஸங்கம் 20 வருஷம நடந்துவரும். வருஷலாபத்தில் நூற்றுக்கு 3 பங்கை ரிஸர்வு பண்டில் வைத்துக்கொள்வார்கள். 4½ பங்கு மெம்பர்களுக்குக் கொடுக்கப்படும். மிச்சத்தில அரைபாகத்தை மெம்பர்களுக்காக ஸங்கம் செய்த வேலைகளுக்குத் தகுந்தபடி அவரவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்படும். இன்னொரு அரை பாகத்தை ஸ்பெஷல் ரிஸர்வு பணடாக வைத்திருப்பார்கள். பொது ஜன உபயோகத்துக்காகப் பாடுபடும் ஸங்கங்களுக்கு உதவி செய்ய அதை உபயோகிப்பார்கள்,

The Commercial World.
வ்யாபாரப் பகுதி.

THE GROUNDNUT TRADE.
வேர்க்கடலை வ்யாபாரம்.

சென்னை ராஜதானியில் சென்ற சில வருஷங்களாக வேர்க்கடலை ஸாகுபடி ரொம்ப அதிகரித்துக் கொண்டிருக்கிறது. பின் வரும் கணக்கால் சென்ற 4 வருஷங்களாக எந்தெந்த ஜில்லாக்களில் வேர்க்கடலை ஸாகுபடி செய்யப்படுகிறதென்பதும், இத்தனை ஏகர் நிலத்தில் வேர்க்கடலை ஸாகுபடி செய்யப்படுகிறதென்பதும், ஸாகுபடி விஸ்தீரணம் இவ்வளவு அதிகரித்துக்கொண்டு வந்திருக்கிறதென்பதும் தெரியவரும்.

ஜில்லாக்கள்.	வேர்க்கடலை ஸாகுபடியின் விஸ்தீரணம் (ஏகர்களில்)			
	1910-11	1911-12	1912-13	1913-14
கஞ்சம் ...	130	210	460	540
விசாகப்பட்டணம் .	100	400	140	390
குண்டூர் ...	100	800	600	150
பல்லாரி ...	260	350	1,260	2,640
கர்நூல் ...	270	990	3,870	8,130
கடப்பை ..	1,600	1,330	3,090	2,130
அநந்தபூர் ...	1,910	2,720	4,440	9,160
செங்கல்பட்டு ...	1,460	1,370	3,070	3,790
வடஆற்காடு ...	6,940	8,850	12,970	9,920
சித்தூர் ...	...	430	780	750
தென்னாற்காடு ...	24,840	22,980	19,390	21,660
சேலம் ...	2,450	2,240	2,490	3,010
கோயம்புத்தூர் ...	2,200	4,210	3,030	3,750
திருச்சிராப்பள்ளி	4,050	4,220	3,370	3,360
தஞ்சாவூர் ...	4,100	4,070	3,280	3,920
மதுரை ...	2,520	1,930	990	1,630
மலையாளம் ...	800	500	500	500
க்ருஷ்ணா ஜில்லாவும் மற்றவைகளும் ...	800	400	400	140
மொத்தம். ...	52,910	56,110	62,780	75,120

1911-12-ம் வருஷத்தோடு முடிகிற 5-வருஷ காலத்தில சராசரியில், சென்னை ராஜதானியில் வேர்க்கடலை ஸாகுபடி செய்யப்படும் நிலத்தின் விஸ்தீரணமானது இந்தியா முழுவதிலும் வேர்க்கடலை ஸாகுபடி செய்யப்படும் விஸ்தீரணத்தில் நூற்றுக்கு 70-பங்காக இருக்கிறதென்று விவஸாய டிரெக்டர் சொல்லுகிறார். 1912-ம் வருஷம் ஸெப்டம்பர் மாஸம் முடிய விதைக்கப்பட்ட வேர்க்கடலை ஸாகுபடி விஸ்தீரணத்தைவிட 1913-ம் வருஷம் ஸெப்டம்பர் மாஸம் முடிய விதைக்கப்பட்ட வேர்க்கடலை ஸாகுபடி விஸ்தீரணம் நூற்றுக்கு 19-மடங்கு அதிகமாயிருக்கிறது. தக்ஷிணஜில்லாக்களாகிய பல்லாரி, கர்நூல் அனந்தபூர் ஆகிய இவைகளில் தான் வேர்க்கடலை அதிகமாக ஸாகுபடியாயிருக்கிறது. ஆனால் செங்கல்பட்டு, தென்னாற்காடு, சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை ஆகிய இவைகளிலும் வேர்க்கடலை ஸாகுபடி நிலம் அதிகமாகி யிருக்கிறது.

இந்த, வேர்க்கடலை ஏற்றுமதி எப்படியிருக்கிற, தென்று பார்ப்போம். பின்வரும் கணக்கால் ஒவ்வொரு துறைமுகத்திலும் சென்ற 4-வருஷத்தில் இவ்வளவு நிறையுள்ள வேர்க்கடலை ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறதென்பது தெரியவரும்.

துறைமுகங்கள்.	இத்தனை டன் வேர்க்கடலை ஏற்றுமதி செய்யப்பட்டது.			
	1909-10	1910-11	1911-12	1912-13
புதுச்சேரி ...	99,866	78,817	93,925	1,10,504
கூடலூர் ..	49,804	46,998	51,440	77,591
மதராஸ் ...	27,698	19,843	56,574	67,056
விசாகப்பட்டணம் ...	35,680	37,403	31,812	33,095
பரங்கிப்பேட்டை ...	32,077	28,881	33,929	28,302
மொத்தம் ...	2,35,125	2,11,442	2,67,690	3,16,548

மேலே காட்டிய இரண்டு கணக்குகளால் வேர்க்கடலை வ்யாபாரம் ரொம்ப அபிவ்ருத்தியாகிக் கொண்டு வருகிறதென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

வேர்க்கடலை வ்யாபாரம் வெகு சீக்ரம் தென்னிந்தியாவில் அபிவ்ருத்தியடைந்து வருவதற்குக் காரணம் என்னவென்றால், ப்ரான்ஸின் தெற்கிலுள்ள மார்ஸேல்ஸ் என்னும் துறைமுகத்தில் வேர்க்கடலையிலிருந்து ஒருவித எண்ணெய் தயார் செய்கிறார்கள். அது சாப்பாட்டுக்கு உபயோகப்படுவதால் அதற்கு க்ராக்கி ஏற்பட்டு அதனால் தென்னிந்தியாவிலும் வேர்க்கடலைக்கு க்ராக்கி உண்டாகி விட்டது. மார்ஸேல்ஸ் பட்டணத்தில் எண்ணெ யாட்டும் தொழில் ப்ரபலமாய் நடந்து வருகிறது. அங்கே எண்ணெயாட்டப்படும் எண்ணெய்வித்துக்களில் பாதியளவு வேர்க்கடலையாம். அந்த வேர்க்கடலையில் 100-க்கு 80 பாகம் தென்னிந்தியாவிலிருந்து போகிறது. வேர்க்கடலை ஸாகுபடி அதிகமாயிருப்பதை உத்தேசித்து சென்னைத்துறைமுகத்தில் வேர்க்கடலை ஏற்றுமதிக்காக வேண்டிய ஸௌகர்யம் செய்து கொடுக்க வேண்டுமென்று மதராஸ் போர்ட் ட்ரஸ்ட் போர்டின் சேர்மனாகிய ஸர் ப்ரான்ஸிஸ் ஸ்ப்ரிங் ஒரு ஸ்கீம் தயார் செய்திருக்கிறார்.

அவர் அபிப்ராயப்படி, சென்னைத்துறைமுகத்தில் வேண்டிய ஸௌகர்யங்கள் செய்து கொடுத்தால் வேர்க்கடலை ஸாகுபடி செய்பவர்களுக்கும், அதில் வ்யாபாரம் செய்பவர்களுக்கும் அதிகலாபம் கிடைக்குமாம். ஏனென்றால் (1) துறைமுகத்தில் ஸாமான்கள் ஏற்றியிறக்கும் மேடைகள் கட்டிவிட்டால் ஸாமான்கள் வைத்திருக்கும் கொட்டகைகளிலிருந்து கப்பலுக்கு வெகு சீக்ரமாகவும், ஸுலபமாகவும், செலவு குறைவாகவும் கொண்டு போய ஏற்றலாம். இதனால் கப்பல்கள் துறைமுகத்தில் அதிக நாள் தங்கியிருக்க வேண்டியதில்லையாகையால், கப்பல் சார்ஜு குறைந்து போகும்.

(2) ஸாமான் முழுவதையும் மேடைகளுக்குப்பக்கத்தில்ஸௌகர்யமானஇடத்தில் வைத்திருந்தால், ஒரு கப்பலில் தினம் 1000 டன் வீதம் ஸாமானை ஏற்றலாம். ஏற்றுவதற்குக்கூலி ஒருடன்னுக்கு 6½ அணா தானாகும். இதனாலும் கப்பல் சார்ஜு குறைவுபடும்.

(3) வடக்கிலிருந்து அதாவது பல்லாரி, அநந்தபூர், கர்நூல் ஆகிய இந்த ஜில்லாக்களிலிருந்து வரும் வேர்க்கடலைச் சரக்குகள் மதராஸ் தென் மராட்டா ரெயில்வே வழியாய் வர வேண்டியிருக்கிறது. அந்த ஜில்லாக்களில் மீட்டர் கேஜ் அதாவது ரொம்ப அகலமில்லாத பாதைகள் தானிருக்கின்றன அவைகள் வழியாய் வந்த பிறகு சென்னைக்குக் கொண்டு வர வேண்டுமென்றால், ப்ராட்கேஜ் அதாவது, அகன்ற பாதைகளில்ஓடும்வண்டிகளுக்கு ஸாமானை மாற்ற வேண்டும். மாற்றுவதில் காலதாமஸம் ஏற்படுவதோடு சரக்குகளும் திருட்டுப்போவதுண்டு. இதனால் வ்யாபாரிகள் சரக்குகளை சென்னைத்துறைமுகத்துக்குக் கொண்டு போகாமல் வேறு துறை முகங்களுக்குக் கொண்டு போய் விடுகிறார்கள்.

ஆனால் மதராஸ் தென்மராட்டா ரெயில்வே கம்பெனியார் ரேணிகுண்டாவிலிருநது மதராஸுக்கு மீட்டா கேஜ் பாதைபோட உத்தேசித்திருக்கிறார்கள். அந்தப் பாதை போடப்பட்டால் அங்கிருந்து வேர்க்கடலைச் சரக்கை குறைநதசெலவில் சென்னைத் துறைமுகத்துக்குக்கொண்டு வரலாம். சென்னைத துறைமுகத்தில் கப்பல் வருவதற்கு முன் கடலையைக் கொட்டிவைக்கவும், சரக்கை சீக்ரம் கப்பலில் ஏற்றுவதற்கும வேண்டிய ஸௌகர்யங்கள் செய்து கொடுத்த, சிறிய துறைமுகங்களில் நடக்கும திருட்டு முதலியவைகள் நடக்காமலிருக்கும்படி பார்த்து வர ஏற்பாடு செய்

தால், வ்யாபாரிகளுக்கும், விவஸாயிகளுக்கும் அதிகலாபம் கிடைக்குமபடி செய்யக் கூடும்.

புதுச்சேரியில் ஏற்றுமதி செய்வதில் இரண்டு அஸௌகர்யங்கள் இருக்கின்றன. அங்கே சில நாள்களில் கடல் கொந்தளிப்பாயிருப்ப துண்டு. அப்படிக் கொந்தளிப்பா யிருந்தால் கப்பல்களில் சரக்குகள் ஏற்றமுடியாது. கப்பல்கள் ரேவில் சும்மா நிற்கவேண்டியிருக்கும். இதனால் கப்பல்காரர்களுக்கு அதிக பணச் செலவு ஏற்படுகிறது. இந்த நஷ்டத்தை ஈடு செய்ய கப்பல்காரர்கள் நாளடைவில் கப்பல் கூலியை அதிகப்படுத்த நேரிடும். சென்னையிலோ கடல் கொந்தளிப்பாயிருந்து கப்பல்களில் சரக்கு ஏற்ற முடியாமல் ஒரு நாளும் இருப்பதில்லை.

புதுச்சேரியில் அதிக கப்பல்கள் வந்து விட்டால் சரக்கு ஏற்றுவதற்கு வேண்டிய அளவுக்குப் படகுகள் இருப்பதில்லை. இதனால் கால தாமஸம் ஏற்படுவதோடு படகுகளுக்கு அதிகக் கூலியும் கொடுக்க நேரிடுகிறது. வ்யாபாரிகளுக்குள் மனஸ்தாபம் நேரிடுவதும் உண்டு.

சென்னையில் புதிதாய்க் கட்டுவதாக உத்தேசித்திருக்கிற ஸாமான் கிடங்குகள் கட்டியானதற்குள் சரக்கு ஏற்றும் மேடைகளும் வேண்டிய அளவுக்கு கட்டியா யிருக்கும். இதனால் படகுக் கூலி இல்லாமல் போவதோடு கப்பல் கூலியும் குறைவுபடும். ஏனென்றால் சரக்கேற்ற முடியாத நாளும் கடல் கொந்தளிப்பா யிருக்கும் நாளும் இருப்பதற்கில்லை. சரக்கை வெகு சீக்ரம் கப்பலில் ஏற்றி விடலாம்.

இந்த ஸௌகர்யங்கள் ஏற்படுவதற்காக துறை முகத்தில் இரண்டு கிடங்குகள் கட்ட வேண்டுமென்று ஸர் ப்ரானஷிஸ் ஸ்ப்ரிங் உத்தேசிக்கிறார். அந்த கிடங்குகள் ஒவ்வொன்றும் 480 அடி நீளம், 120 அடி அகலமுள்ளதாயும், இரண்டு தளங்கள் உள்ளதாயும் இருக்கும். ஒவ்வொரு தளமும் ஒவ்வொன்றும் 120 அடி சதுரமுள்ள 4-அறைகளாகப் பிரிக்கப் பட்டிருக்கும். மூன்றாவது மேல் தளத்தில் சரக்குகளைக் காயப்போடலாம். சரக்குகளை வண்டிகளிலிருந்து எடுத்து முதல் தளத்திலும் இரண்டாவது தளத்திலும் சேர்ப்பதற்காக க்ரேன்கள் என்னும் மூட்டை தூக்கும் யந்த்ரங்கள் மூன்றாந் தளத்தில் வைக்கப்படும். முதல் தளத்தில் 14,000 டன்சரக்கும், இரண்டாவது தளத்தில் 8,000 டன் சரக்குமாக இரண்டு கிடங்கிலும் 44,000 டன் நிறையுள்ள வேர்க்கடலை மூட்டைகள் அடுக்கி வைக்கலாம். ஆனால் இவ்வளவு நிறை சரக்கும் ஒரே ஸமயத்தில் கிடங்கில் போட்டு வைத்திருக்க வேண்டி யிருக்காது. மேலும் வேர்க்கடலை ஏற்றுமதிகாலம் வருஷத்தில் 4-5-மாஸ காலந்தான். மற்ற காலங்களில் அந்தக் கிடங்குகளை வேறு ஏற்றுமதிச் சரக்குகள் கொட்டி வைப்பதற்கு வாடகைக்கு விடலாம்.

க்ராமாந்தரங்களில் வேர்க்கடலையைத் தடியாலடித்து மேல் தோலியை எடுக்கிறார்கள். இதனால் உள்ளே யிருக்கும் பருப்பு கெடுதலடைகிறது. இன்னம் சில இடங்களில் கடலையின் தோல் ஸுலபமாய் எடுபடும் பொருட்டு அதை ஜலத்தில் நனைப்பதும் உண்டு. இந்த ஜலமானது பருப்பில் சேர்ந்து பூசணம் உண்டாக ஹேதுவாகிறது. ஆகையால் கிடங்குகளில் கடலையின் தோலை உரித்தெடுக்கும் யந்த்ரங்கள் ஸ்தாபிக்கலாமென்றும் ஸர் ப்ரான்ஸிஸ் சொல்லுகிறார்.

இந்தக்கிடங்குகள் கட்ட ஸுமார் 4-லக்ஷம் ரூபாய் போல் வேண்டியிருக்குமாம். மதராஸ் ட்ரஸ்ட் போர்டும் கவர்ன்மெண்டும் இந்த ஸ்கீமை ஒப்புக்கொண்டால் கட்டிடங்களுக்கு வேண்டிய ப்ளான்களும் எஸ்டிமேட்டுகளும் தயார் செய்யப்படும் என்று ஸர் ப்ரான்ஸிஸ் ஸ்ப்ரிங் சொல்லுகிறார்.

WASTE IN SALE.

விற்பனையில் ஏற்படும் சேதம்.

கைத்தொழில் ஸாமான்கள் விற்பதில் ஏற்படும் சேதத்தை விட விவஸாய விளைபொருள்களை விற்பதில் ஏற்படும் சேதம் அதிகம் என்பதில் ஸந்தேக மில்லை. விவஸாயவிளைபொருள்களில், முக்யமாய் சீக்ரம் கெட்டுப்போகக் கூடிய காய்கறிகள், பழங்கள் முதலியவைகளில் தான் இப்படி சேதம் ஏற்படும். இந்த விளை பொருள்களின் தன்மையாலும், அவைகள் ஒவ்வொரு வருஷமும் ஸாகுபடி செய்யப்படும் விஸ்தீர்ணத்தின் வித்யாஸத்தாலும் இவைகளின் விலைவாசி அடிக்கடி வித்யாஸப்படுகிறது. இதனால் கெட்டுப்போகக்கூடிய இந்த ஸாமான்களின் சில்லரை விலையானது ரொம்பத் தூக்கி விற்கிறது. சரக்கின் மொத்தபேர விலை உயர்ந்தால் சில்லரைபேர விலையையும் வ்யாபாரிகள் உயர்த்தி விடுகிறார்கள். ஆனால் மொத்தபேர விலை இறங்கிப்போய் விட்டால் சில்லரை பேர வ்யாபாரிகள் சில்லரைபேர விலையைக் குறைப்பதில்லை. இதனால் விவஸாயி வாங்கிக்கொள்ளும் விலைக்கும், ஸாமானை உபயோகிப்பவன் கொடுக்கும் விலைக்கும் ரொம்ப வித்யாஸம் ஏற்படுகிறது.

கடைகளில் ஸாமான் அதிகமாக வந்து சேர்ந்துவிட்டால் அநேக ஸமயங்களில் அதிக சேதம் ஏற்படுவதுண்டு. விற்பனைக்கு வேண்டியிருக்கக் கூடிய அளவுக்குமேல் ஸாமான் வந்து விட்டால் சில்லரை பேர வ்யாபாரிகள் தரகு வ்யாபாரிகளிட மிருந்து தாழ்ந்த விலையில் ஸாமானை வாங்கிப்போட்டுக் கொள்ளுகிறார்கள். ஆனால் கையிலிருக்கும் சரக்கெல்லாம் விற்றுத் தீர்ந்து விடுவதற்குத் தகுந்தபடி சில்லரை பேரத்தில் குறைந்த விலைக்கு விறகாமல் அதிக ஸாமான் வருவதற்கு முன்னால் இருந்த உயர்ந்த விலையிலேயே விற்பது அவர்களுக்கு அநேக ஸமயங்களில் லாபமாயிருக்கிறது. இதனால் ஏராளமான பழங்களும் காய்கறிகளும் அழுகி வீணாய்ப் போவதுண்டு. குறைந்த விலைக்கு விற்றிருந்தால் அநேக ஏழை ஜனங்கள் இப்படி வீணாய்ப் போன ஸாமானை வாங்கி யிருக்கக்கூடும்.

A RIVAL TO THE COCOANUT.

தேங்காய்க்கு ஒரு போட்டி.

மத்ய அமெரிக்காவிலுள்ள ப்ரிட்டிஷ் ஹாண்டுராஸ் என்னும் ப்ரதேசத்தில் கோஹூன் என்று ஒரு வகைக்காய் ஏராளமாய்க் கிடைக்கிறதாம். அது ஒரு முட்டையளவு இருக்கிறது, அதை உடைத்தால் அதற்குள் ஜாதிக்காயளவுள்ளதாய் பருப்பு இருக்கிறது. அந்தப் பருப்பில் நூற்றுக்கு $71\frac{3}{4}$ பாகம் எண்ணெய் இருக்கிறது. இந்த எண்ணெயை தேஙகாய் எண்ணெய்க்குப் பதிலாக உபயோகிக்கலாமாம். பருப்பை எடுப்பதற்கு காயை உடைப்பதுதான் ரொம்ப கஷ்டமாம். காயை உடைக்க ப்ரத்யேகமான யந்த்ரங்கள் வேண்டியிருக்கின்றனவாம். தக்க யந்த்ரங்கள் உபயோகித்து இந்தக் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுக்க முதலாளிகள் முன் வருவார்களானால் அவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கலாம். இந்தக்காயானது தேங்காய்க்கு ஒரு போட்டியாக ஏற்படக்கூடும் என்று சொல்லப்படுகிறது.

HEAT AND COLD RETAINING BOTTLE.

சீதோஷ்ணத்தை மாறவிடாத சீஸா.

வென்னீரின் உஷ்ணமும தண்ணீரின் குளிமையும் குறைந்து போகாதபடி காக்கக் கூடிய ஒரு ஸீஸா அமெரிக்காவில் செய்யப்பட்டு விற்கப்படுகிறது. அது லகுவில் உடைந்து போகாதபடி ஸீஸாவின் (குப்பி) கழுத்தில் ரப்பரும், அடியில் கம்பி வேலைப்பாடும் அமைத்திருக்கிறார்கள். வென்னீரை அதில் போட்டு வைத்தால் 24-மணிநேரம் உஷ்ணம் குறையாமல் இருக்கிறதாம். குளிர்ந்த ஜலம் மூன்று தினம் குளிர்ச்சி மாறாமல் இருக்கிறதாம்.

இது ப்ரயாணிகளுக்கும் இரவில் குழந்தைகளுக்கு உதவும்படி பால் காய்ச்சி வைப்பதற்கும் உதவும் என்று சொல்லப்படுகிறது. நமது தேசத்தில் இவைகள் "வாகுவம் ப்ளாஸ்க்" என்று விற்கப்படுகின்றன.

The Educational World.

வித்யாவிஷயப் பகுதி.

TIME MEASURES.

கால அளவுகள்.

தற்காலக் கணக்குகளின்படி ஒரு நாளை 24-மணியாகவும், ஒரு மணியை 60-நிமிஷமாகவும், ஒரு நிமிஷத்தை 60-ஸெகண்டுகளாகவும் பிரித்திருக்கிறார்கள். இப்படிப் பிரித்திருப்பதற்கு காரணமென்னவெனபது விளங்கவில்லை. வாரத்துக்கு 7-நாள் ஏற்படுத்தியதற்கும் இயற்கையில் யாதொரு ஆதாரமும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் வருஷத்தின் அளவும், மாஸங்களின் அளவும் அப்படியல்ல. அவைகளுக்குக் காரணங்கள் இருக்கின்றன. வருஷத்திற்கு மேற்பட்ட கால அளவும் நிமிஷத்திற்குக் குறைவான கால அளவும் வழக்கத்தில் உபயோகப்படுவதில்லை. ஆனால் முன்னோர்கள் கால அளவுகள் ஏற்படுத்துவதில் இயற்கை ப்ரமாணங்களை கவனித்து அவைகளின்படி கால அளவுகளை நிர்ணயித்துவந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஸூர்யனைச்சுற்றி பூமி ஒருதரம் வருவதற்குப் பிடிக்கும் காலமே ஒருவருஷமாகும். இந்தக் காலம் தேவதைகளுக்கு ஒரு நாள் என்று சொல்லப்படுகிறது. இதில் முதல் 6-மாஸம் ஸூர்யன் வடக்கில் தெரியும்போது தேவதைகளுக்கு பகலாகவும், அடுத்த ஆறு மாஸம் ஸூர்யன் தெற்கில் தெரியும்போது இரவாகவும் பிரிக்கப்பட்டது. இப்போதும் வடத்ருவத்திலும், தென் த்ருவத்திலும் வருஷத்தில் ஆறுமாஸம் பகலாகவும், ஆறுமாஸம் இராவாகவும் இருந்து 'தேவநாள்' போல இருந்து வருகிறது. மேற்குறித்த ஒரு வருஷ காலத்திற்குள், அதாவது பூமி ஸூர்யனைச் சுற்றி ஒருதரம் வருவதற்குப் பிடிக்கும் காலத்திற்குள் சந்த்ரன் பூமியை 12-தடவை சுற்றி வருகிறது. சந்த்ரன் ஒருதடவை பூமியைச் சுற்றி வரச் செல்லும் காலத்தை ஒரு மாஸமாகவும்; ஒரு வருஷத்திற்கு 12-மாஸமாகவும் ஏற்படுத்தினார்கள். ஒவ்வொரு மாஸமும் அமாவாஸையிலிருந்து ஆரம்பமாகும். ஆனால் சந்த்ரன் பூமியைச் சுற்றுவதற்கு முப்பது நாளாகாமல் அதற்குக் குறைவாக ஆவதால் வருஷத்தில் சில நாள் தனியாக நின்று போகிறது. அதற்காக மூன்று வருஷத்துக்கு ஒரு தடவை ஒரு மாஸம் அதிகமாகச் சேர்த்துக் கொண்டார்கள்.

நிற்க, ஆகாயமண்டலத்தை 12-பாகமாகப் பிரித்துக்கொண்டார்கள். பூமி ஸூர்யனைச் சுற்றிச் செல்லும் பாதையில் பூமி ஒவ்வொரு மாஸமும் கடந்து செல்லும் அளவுக்குக் கிட்டத்தட்ட சரியாயிருக்கும்படி இந்த பாகங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்த பாகங்களுக்கு ராசி சக்ரமெனறு பெயர். ஒவ்வொரு ராசியிலும் பூமி போவதற்கு ஏற்படுங்காலத்தை யனுஸரித்து ஸூர்ய மாஸங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு மாஸத்தின் கால அளவும சற்று வித்யாஸமாயிருக்கும். சாந்த்ரமாஸம், அதாவது சந்த்ரனை அனுஸரித்து ஏற்படுத்தப்பட்ட மாஸம் இரண்டு பக்ஷங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பக்ஷங்களின் கால அளவும் சற்று விதயாஸப்படும். பக்ஷங்களில் சில 14-நாட்களாகவும், சில 15 நாட்களாகவும் இருக்கும்.

ஒரு நாள் பொழுதானது பகலும் இரவுமென இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டது. இவைகளின் கால அளவும் மற்ற கால அளவுகளைப் போலவே சில காலங்களில் அதிகமாகவும், சில காலங்களில் குறைவாகவும் இருக்

கும். மார்ச்சுமாஸம் 21-தேதியும், ஸெப்டம்பர்மாஸம் 23-தேதியும் தான் பகல்பொழுதும் ராத்ரிப் பொழுதும் ஸம அளவுள்ளனவாக இருக்கின்றன. பகல் பொழுதையும் ராத்ரிப் பொழுதையும் எப்படி மறுபடியும் பாகம் செய்தார்களென்று பார்ப்போம்.

ஒருதடவை உதித்த சந்த்ரன் மறுநாள் மறுபடியும் உதிப்பதற்குள் சற்று காலதாமஸமாய் விடுகிறது. இந்தக் காலமானது ஒரு நாள் பொழுதில் கிட்டத்தட்ட முப்பதில் ஒரு பாகமாகும். ஆகையால் இதை ஆதாரமாகக் கொண்டு ஒரு நாளை முப்பது முகூர்த்தமாகப் பிரித்தார்கள். ஸூர்யன் உச்சிக்கு வருவதைக் கொண்டு பகலை இரண்டு பாகமாகவும், நடுராத்ரியை ஆதாரமாக இரவை இரண்டுபாகமாகவும் பிரித்துக்கொண்டு, பிறகு முற்பகல், பிற்பகல், முன்னிரவு, பின்னிரவு ஆகிய இந்த நான்கு பாகங்களில் ஒவ்வொன்றையும் இரண்டுபாகமாகப் பிரித்துக்கொண்டு ஒவ்வொரு பிரிவுக்கும் ஜாமம் என்று பெயரிட்டார்கள். ஒவ்வொரு முகூர்த்தத்தையும் பாதியாகச்செய்ய ஒவ்வொருபாகமும் ஒருநாழிகையாகிறது. ஒவ்வொரு பக்ஷத்தையும் இரண்டு வாரமாகப் பிரித்தார்கள். ஒவ்வொரு வாரத்திற்கும் ஏழு முக்ய க்ரகங்களை அனுஸரித்து 7 - நாட்கள் ஏற்பட்டன.

வருஷத்துக்கு மேல் 5-வருஷங்கள் கொண்ட ஒரு யுகமும், 12-வருஷங்கள் கொண்ட ஒரு யுகமும் ப்ரபவாதி 60-வருஷங்கள் கொண்ட ஒரு அளவும் இருக்கின்றன. பின்னால் சொன்ன 60-வருஷகால அளவானது 3-பாகமாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொன்றுக்கும் ஒரு தேவதை அதிபதியாயிருப்பதாகச் சொல்லப்படுகிறது. முதல் 20-வருஷத்திறகு ப்ரும்மா அதிபதி யென்றும், அதில் ஜனத்தொகை அதிகரிக்குமென்றும், ஜீவராசிகள் சுறுசுறுப்பாயிருக்கு மென்றும் சொல்லப்படுகிறது. அடுத்த 20-வருஷத்திற்கு விஷ்ணு அதிபதி. இதில் அறிவு அபிவ்ருத்தி ஏற்பட்டு உலகத்தில் முன்னேற்றமும், ஸமாதானமும் இருக்கும். கடைசி 20-வருஷத்திற்கு ருத்ரன் அதிபதி. இதில் யுத்தமும், பஞ்சமும், கொள்ளை நோய்களும் அதிகமாக இருந்து ஜனங்கள் நாசமடைவார்கள். இது எம்மட்டில் உண்மை யென்று நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை. ஆனால் ஒன்று மட்டும் வ்யக்தமா யிருக்கிறது. சென்ற ப்ரபவாதியின் கடைசியும் நடப்பு ப்ரபவாதியின் ஆரம்பமுமாகிய காலத்தில் தான் இந்தியாவில் சிப்பாய் கலகமும், அமெரிக்காவில் யுத்தமும், ரஷ்யாவுக்கும் மற்ற ஐரோப்பிய அரசுகளுக்கும் சண்டையும், ப்ரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் கொடூரமான யுத்தமும், அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் சண்டையும் நடந்தன. இந்த ப்ரபவாதியின் கடைசி பாகமாகிய சென்ற சில வருஷங்களாக, க்ரீஸ் - துருக்கிய யுத்தம, இங்க்லீஷ்—போயர் யுத்தம், ருஷ்ய-ஜப்பானிய யுத்தம், இடலி-துருக்கி யுத்தம், துருக்கி-பால்கன் யுத்தம், துருக்கி, பெர்ஷியா, சீனா, போர்த்துகல், மெக்ஸிகோ, தென் அமெரிக்கா ஆகிய இவைகளில் ராஜாங்கப் புரட்சி கலகங்கள் ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன.

CO-OPERATION IN SCHOOLS.

பள்ளிக்கூடங்களில் கோவாபரேஷன்.

சென்ற ஜனவரியீ சென்னையில் ப்ரொவின்ஷியல் கோவாபரெடிவ் கான்பரென்ஸ் நடந்தபோது அதன் ப்ரெஸிடெண்டாகிய ஆனரபிள் மிஸ்டர் சிவஸ்வாமி அய்யர் தமது முடிவுரை ப்ரஸங்கத்தில் பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு கோவாபரேஷன் விஷயங்களைக் கற்பிப்பதைப் பற்றிப் பேசினார்.

அவர், கோவாபரேஷன் விஷயங்களை பள்ளி

களுக்குக் கற்பிக்க வேண்டியது அவச்யமென்பதைப்பற்றினமட்டில் கான்பரென்ஸோடு ஒத்து அபிப்ராயப்பட்டாலும் அவைகளைக் கற்பிப்பதற்கு ஏற்ற இடம் எலிமெண்டரி பள்ளிக்கூடமாகுமா என்பதில் தாம் ஸந்தேகங் கொள்வதாகச் சொன்னார். ஏனென்றால் எலிமெண்டரி பள்ளிக்கூடத்துச் சிறுவர்களுக்கு வரையறுக்கப்பட்ட பொறுப்பு, வரையறுக்கப்படாத பொறுப்பு ஆகிய இவைகளையும், இன்னம் கோவாபரேஷனின் முக்ய அம்சங்களையும் கற்பித்தால் அவர்களுக்கு விளங்குமா என்பதே ஸந்தேகமாயிருக்கிறது. பள்ளிக்கூடங்களில் ஏதாவது ஒருவகுப்பில் கோவாபரேஷனைப்பற்றிக் கற்பிக்க வேண்டியது அவச்யமென்றாலும், எலிமெண்டரி பாடசாலைகளிலுள்ள சிறுவர்களின் வயஸும் அறிவும் அதற்கேற்றவையா என்றும், வேறு என்னென்ன பாடங்கள் இன்னம் கற்பிக்கவேண்டுமெனச் சொல்லுகிறார்களென்றும் கவனிக்கவேண்டியிருக்கிறது. ஏனென்றால் விவஸாய டிபார்ட்மெண்டாரும், விவஸாய கான்பரென்ஸும் எலிமெண்டரி பாடசாலை மாணவர்களுக்கு விவஸாயக் கல்விகற்பிக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறார்களென்றும், தாம் (ப்ரெஸிடெண்ட் மிஸ்டர் சிவஸ்வாமி ஐய்யர்) கவர்ன்மெண்டில் ஸுகாதார விஷயங்களை கவனிக்கும் மெம்பராயிருப்பதில் சிறுவர்களுக்கு ஸுகாதாரவிஷயங்களை ப்ரத்யேகமான பாடமாகக் கற்பிக்கவேண்டுமென விரும்புகிறாரென்றும், இன்னும் ஒவ்வொரு டிபார்ட்மெண்டும் தங்கள் தங்களுடைய விருப்பத்திற்கேற்ற பாடங்களைக் கற்பிக்கவேண்டுமென விரும்புவார்களென்றும், சொன்னார்.

மேலும் ஸுகாதார விஷயங்கள் சிறுவர்களுக்கு ஸுலபமாய் விளங்கும் என்றும், கோவாபரேஷன் விஷயங்கள் சிறுவர்களுக்கு நன்றாய் விளங்குமென்பது ஸந்தேகந்தான் என்றும் சொன்னார். இன்னும், கோவாபரேஷனை உயர்ந்த வகுப்புகளில் கற்பிப்பது ஸௌகர்யமாயிருக்கலாமென்றும், எலிமெண்டரி பாடசாலைகளில்கோவாபரேஷனைகற்பிக்க ஏற்பாடு செய்யும்படி வித்யா டிரெக்டரைக் கேட்குமுன் ப்ரைவேட் பாடசாலைகளின் மானேஜர்கள் தங்கள் பாடசாலைகளில் கோவாபரேஷனைக் கற்பிக்க ஏற்பாடு செய்யலாமென்றும், அப்படிச்செய்து பார்த்து நன்றாய் நடந்துவந்தால் அது எலிமெண்டரி பள்ளிக்கூடங்களில் கோவாபரேஷனை கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வித்யா டிரெக்டரைக் கேட்பதற்குத் தகுந்த ஆதாரம் கிடைத்ததாகுமென்றும், மைஸூரில் எலிமெண்டரி ஸ்கூல்களில் கோவாபரேஷன் விஷயங்களைக் கற்றுக்கொடுத்து வருகிறார்களென்றும், அந்தஏற்பாடு த்ருப்தியாய் நடந்து வருகிறதா என்று பார்க்க இன்னும் சிலகாலமாக வேண்டுமென்றும் சொன்னார்.

COPY WRITING.
காபி எழுதல்.

மிஸ்டர் பி. வி. வ்யாஸராவ் எழுதுகிறார்:— சென்ற டிஸம்பர் ஸஞ்சிகையில் மாணாக்கர்கள் காபி எழுதுவதைப் பற்றிய விதிகள் விஸ்தாரமாய் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளுடன் இன்னும் சில விதிகளை உபாத்யாயர்கள் கவனிக்கவேண்டும்.

(1) பிள்ளைகள் காபி எழுதும் போது சிலர் தலையை அசைத்துக் கொண்டும், சிலர் நாக்கை வெளியில நீட்டிக்கொண்டும், சிலர் உதட்டைக் கடித்துக்கொண்டும், சிலர் கால்களை ஆட்டிக்கொண்டும், இன்னும் இவைகளைப்போல் பலவித சேஷ்டைகள் செய்துகொண்டுமிருப்பது வழக்கம். இக்கெட்ட வழக்கங்களைக் கண்டித்து நிறுத்தவேண்டும்.

(2) சில மாணாக்கர்கள் காபி எழுதவேண்டிய புஸ்தகத்தை சீக்ரத்தில் கிறுக்கி எழுதி

முடித்து விடுகிறார்கள். எழுத்துக்கள் ஆபாஸமாய்ப் போகின்றன. அப்படி எழுதாமல் நிதானமாயும் செவ்வையாயும் எழுதும்படி செய்ய வேண்டும்.

(3) சிலர் காபி எழுதும்போது காபி புஸ்தகத்தில் இங்கி விழச்செய்வதும், காபிபுஸ்தகத்தை சுத்தமாய் வைத்திருக்கத் தெரியாமல் 'தாரும் மாருமாய்' மடித்துக்கெடுத்து அஸங்க்யம்செய்வதும், நிப்புகளை இங்க் புட்டியில் தோய்க்கும் போது ஜாஸ்தியாய் தோய்த்து மேஜையின்பேரிலும் தரையிலும் உதறுவதும், நிப்புகள் பூராவையும் ஹோல்டரின் கொஞ்ச பாகத்தையும் இங்க் கறைசெய்து கொள்வதுமல்லாமல்? கைவிரல்களையும் கறைசெய்து கொள்வதும் யாவருக்கும் தெரிந்த விஷயமே. இவைகளையெல்லாம உபாத்யாயர்கள் கவனித்து அப்போதைக்கப்போதே சீர்திருத்தவேண்டும்.

THE TIRUPATI DEVASTHANAM SCHOOLS BILL.

திருப்பதி தேவஸ்தானத்து ஸ்கூல்கள் மசோதா.

திருமலை, திருப்பதி ஆகிய இந்த தேவஸ்தானங்களின ஆதீனத்தில் திருப்பதியில் ஒரு ஹைஸ்கூலும், ஒரு ஸம்ஸ்க்ருத காலேஜும், வேலூரில் ஒரு ஹைஸ்கூலும் நடந்து வருகின்றன. ஸமீபத்தில் ஹைகோர்ட்டார் தேவஸ்தானம் ஸம்பந்தமான ஒரு வ்யாஜ்யத்தில் தீர்ப்புச் சொன்னபோது இரண்டு ஹைஸ்கூல்களும் தேவஸ்தானத்துச் செலவில் நடந்து வருவது ந்யாயமாகாது என்று அர்த்தப்படும்படியாய் சொல்லியிருந்தார்கள். இந்த ஸ்கூல்கள் ஸுமார் 25-வர்ஷங்களுக்கு மேலாக நடந்துவருகின்றன. திருப்பதி தேவஸ்தானத்துப் பணத்திலிருந்து செலவு செய்யப்படும் பற்பல அம்சங்களைப் பற்றிப பலர் அநேக ஸமயங்களில் ஆக்ஷேபித்திருந்த போதிலும் இந்த ஸ்கூல்களுக்காகச் செலவிடுவதைப்பற்றி ஒருவரும் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் மேலே ப்ரஸ்தாபிக்கப்பட்ட தீர்ப்பில் ஜட்ஜுகள் மதஸம்பந்தமான பாடசாலைகளின் நிர்வாகந்தான் ந்யாயமாகும் என்று அபிப்ராயப்படுவதாகத் தோன்றுகிறதென்றும், அதனால் மகந்துக்கள் ஹைஸ்கூல்களுக்குச் செலவழிப்பது ந்யாயமென்றும் ஏற்படுத்த சட்டம் செய்ய வேண்டுமென்று சொல்லி ஆனரபிள் மிஸ்டர் ஜஸ்டிஸ் டி. வி. சேஷகிரி அய்யர், தாம் ஜட்ஜாக நியமிக்கப்படுமுன், ஹைஸ்கூல்களுக்குச் செலவிடுவது சட்ட ஸம்மதமான தென்று ஏற்படுவதற்காக சென்னை சட்டஸபையில் ஒரு மசோதா கொண்டு வந்தார். இப்படிச் செய்வதற்கு நம்முடைய சட்ட க்ரந்தங்களில் பல ஆதாரங்களிருப்பதாகவும், அப்படிச் செய்து வருவது சரிதானென்றும் மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் ஸர் ஸுப்ரமண்ய அய்யர் பலமாக பத்ரிகைகளில் வாதித்து வருகிறார்.

EDUCATIONAL HYGIENE.

பள்ளிக்கூடங்களில் ஸுகாதாரம்.

பள்ளிக்கூடங்களினுடையவும் மாணவர்களினுடையவும்ஸுகாதாரத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக ஐக்யமாகாணங்களின் லெப்டினண்ட் கவர்னர் ஒரு கமிட்டி ஏற்படுத்தி யிருந்தார். அந்தக் கமிட்டியார் அது விஷயமான ரிபோர்ட்டை வெளியிட்டிருக்கிறார்கள். கமிட்டியார் பற்பல ப்ரேரணைகள் செய்திருக்கிறார்கள். எல்லாப் பள்ளிக்கூடங்களினுடையவும் ஸுகாதார நிலைமையை ஒரு குறிப்பிட்டகாலத்துக் கொருதடவை பரிசோதித்துப் பார்க்க வேண்டும் என்பதும், யோக்யதாபத்ரம் பெற்ற வைத்யர்களைக்கொண்டு பள்ளிக்கூடத்து மாணவர்களுடைய தேகஸுகத்தை ஒரு குறிப்பிட்ட காலத்துக் கொருதடவை பரீக்ஷிக்க வேண்டும் என்பதும் முக்யமான ப்ரேரணைகளாகும்.

The Legal World.
வ்யவஹாரப் பகுதி.

GRANT OF LANDS ON DHARKAST.
நிலங்கள் தர்காஸ்துக் கொடுத்தல்.

வ்யாஜ்ய நிலம் முதல் முதல் ஒரு க்ராமத்தில் ஒருபாகமாக இருந்தது. க்ராமத்து ரெஜிஸ்டர்களில் அந்த நிலத்துக்கு தீர்வை ஏற்படுத்தியிருந்ததாகவும் குறிக்கப்பட்டிருந்தது. பிறகு அதை கவர்ன்மெண்டார் ரிஸர்வு காடுகளாக (பாரஸ்ட்) மாற்றினார்கள். ஆனால் கொஞ்சகாலத்துக்குக் கெல்லாம் ரிஸர்வு பாரஸ்டாக மாற்றியிருந்த அதை ஸாதாரண நிலமாக மறுபடியும் மாற்றினார்கள்.

பிறகு அந்த நிலத்தை தர்காஸ்தின்மேல் ஜனங்களுக்குக் கொடுத்துவிட எண்ணி ஸர்க்காரில் அதை ஸர்வே செய்யும்படி உத்தரவு செய்யவே, நிலம் ஸர்வேசெய்யப்பட்டது. கலெக்டர் அந்த நிலத்தைப் போய்ப் பார்வையிட்டு, அதன் விஷயமாய் ரயத்துகளைக் கண்டு பேசி, அதை தர்காஸ்து ரூல்களின்படி வேண்டுவோருக்குக் கொடுத்து விடும்படி டெபுட்டி கலெக்டருக்கு உத்தரவு செய்தார். டெபுட்டிகலெக்டர் அந்த நிலத்தை ரயத்துகளுக்குக் கொடுக்கும்படிடெபுட்டி தாசில்தாருக்கு உத்தரவிட்டார். டெபுட்டி தாசிலதார் அந்த நிலத்தை வாதிக்கு தர்காஸ்தாகக் கொடுத்து விட்டார். தாசில்தார் வாதிக்கு நிலங்கொடுத்ததை டெபுட்டிகலெக்டர் ஊர்ஜிதப்படுத்தி வாதிக்குப் பட்டாகொடுத்தார்.

டெபுட்டி கலெக்டர் ஊர்ஜிதப்படுத்தி சிலமாஸங்களான பிறகு இந்த விஷயங்களெல்லாம் கலெக்டருக்குத் தெரிவிக்கப்பட்டன. கலெக்டர் அவைகளின்மேல் போட்ட ஒரு உத்தரவில், டெபுட்டி தாசில்தாருக்கு தர்காஸ்து கொடுக்க அதிகாரமில்லையென்று ஆக்ஷேபிக்கவில்லை. பட்டா கொடுத்தபிறகு வாதியினிடமிருந்து கிஸ்தும், நிலத்திலிருந்த மரங்களின் க்ரயமும் வஸூலிக்கப்பட்டன.

ஆயினும் சிறிது காலத்துக்கெல்லாம் கலெக்டர் அந்த நிலம் தீர்வைப்படாத நிலமென்றும், 15-வது ஸ்டாண்டிங் ஆர்டர் 1-வது ஸெக்ஷனில் சொல்லியிருக்கிறபடி அதை அயன் அல்லது தீர்வைப்பட்ட நிலமாக மாற்றும்படி கலெக்டர் யாதொரு உத்தரவும் போடாததால், நிலத்தை தர்காஸ்துக்கொடுத்தது செல்லாதென்றும் சொல்லி கலெக்டர் தர்காஸ்தை ரத்து செய்து விட்டார்.

அதன்மேல் வாதி அந்த நிலத்தின்மேல் தமக்குப் பாத்யதை யுண்டென்று தீர்ப்பாகும்படி கோர்ட்டில் வ்யாஜ்யம் போட்டார். முன்ஸிப் நிலத்தை தர்காஸ்தாகக் கொடுத்தது செல்லாதென்று சொல்லி வ்யாஜ்யத்தைத் தள்ளிவிட்டார். அதன்மேல் வாதி டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டுக்கு அப்பீல்செய்ததில டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபின தீர்ப்பை மாற்றி வாதிக்கு ஸாதகமாகத்தீர்ப்புக்கொடுத்தார். அதன்மேல் கவர்ன்மெண்டார் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள். ஹைகோர்ட்டார் பின்வருமாறு தீர்ப்பு சொன்னார்கள்.

இந்தக்கேஸில் இரண்டு விஷயங்கள் வாதிக்கப்படுகின்றன. முதலாவது, அந்த நிலம் தீர்வைப்படாத நிலமென்றும, ஆகையால் 15-வது ஸ்டாண்டிங் ஆர்டர் 1-வது ஸெக்ஷன்படி கலெக்டர் அதை தீர்வைப்பட்ட நிலமாக மாற்றினால்தான் தர்காஸ்தாகக் கொடுக்கலா மென்றும், இந்தக்கேஸில் கலெக்டர் அப்படி அதை தீர்வைப்பட்ட நிலமாக மாற்றவில்லையென்றும், ஆகையினால் டெபுட்டி தாசில்தார் நிலத்

தை வாதிக்கு தர்க்காஸ்தாகக்கொடுப்பதற்கில்லையெனறும் வாதிக்கப்படுகிறது. (மேலே சொன்னபடி) தர்காஸ்து கொடுத்ததை டெபுட்டி கலெக்டர் ஊர்ஜிதம் செய்தபிறகுவிஷயங்களையெல்லாம் கலெக்டருக்குத் தெரிவித்தபோது, கலெக்டர், தர்காஸ்து கொடுக்க டெபுட்டி தாசில்தாருக்கு அதிகாரமில்லையென்று சொல்லி தர்காஸ்து கொடுத்ததை ஆக்ஷேபிக்கவில்லை. ஆகையால் நிலத்தை தர்காஸ்து கொடுக்கலாமா கொடுக்கக் கூடாதா என்பதையும், நிலம் தீர்வைப்பட்டதா அல்லவா என்பதையும் தீர்மானிக்க வேண்டிய விஷயங்களெல்லாம் கலெக்டருக்குத் தெரிந்திருநததால், அவர் நிலத்தைத்தீர்வைப்பட்ட நிலங்களாக்க மாற்றுவதற்கு க்ரமமாய் யாதொரு உத்தரவும் போடாமலிருந்தபோதிலும், நிலத்தை தீர்வைப்பட்ட நிலமாக ரயத்துகளுக்குக் கொடுத்து விடும்படி அவர் எண்ணிடெபுட்டி கலெக்டருக்கு உத்தர விட்டதனாலேயே வாதிக்கு நிலத்தைக்கொடுக்க கீழுத்யோகஸ்தர்களுக்கு அதிகாரம் கொடுத்ததாகிறது என்று டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் அபிப்ராயப்பட்டிருக்கிறார். நிலத்தை அயன் நிலமாய் மாற்றினதாக க்ரமமாக ஒரு உத்தரவும் போடாவிட்டாலும் உண்மையில் கலெக்டர் நிலத்தை அயன் நிலமாக பாவிக்க வேண்டுமென்று தீர்மானித்ததாகவே நாம் அபிப்ராயப்படுகிறோம்.

ரெவின்யூ ரூல்களின்படி கீழதிகாரிகள் கலெக்டருக்கு அனுப்பியிருந்த ஒரு பாரத்தில் நிலம் ஸப்டிவிஷன் செய்யப்பட்டிருக்கிறதென்பதும், ஒவ்வொரு ஸப்டிவிஷனுடைய விஸ்தீரணமும், அவைகளுக்குப் போடப்பட்டிருக்கும் தீர்வையும் குறிக்கப்பட்டிருந்தன. அதில் அந்த நிலங்களை ஸாகுபடிசெய்யக்கூடிய தரிசுநிலங்களாக பாவித்து ஸர்வேசெய்யப்பட்டிருக்கிறதென்றும், பக்கத்துப்பட்டா நிலங்களின் தீர்வை விகிதப்படி அவைகளுக்கு தீர்வைபோட்டிருக்கிறதென்றும், ரெவின்யூ உத்யோகஸ்தர்கள் அதில் குறித்திருந்தார்கள். அதைப்பார்வையிட்ட கலெக்டர் 'ஸர்வே விஸ்தீரணமும், விதித்திருக்கும் தீர்வையும் ஒப்புக்கொள்ளப்பட்டு ஸாங்க்ஷனையிருக்கின்றன' என்று எண்டார்ஸ் செய்திருக்கிறார். கலெக்டர் ஏற்கனவே இந்த நிலத்தைத் தீர்வைப்பட்ட நிலமாக மாற்ற ஸாங்க்ஷன் செய்யவில்லையென்றால், இந்த எண்டார்ஸ்மெண்டு போட்டதே அந்த நிலத்தைத் தீர்வைப்பட்ட நிலமாகமாற்ற ஸாங்க்ஷன் செய்ததாகிறது. கலெக்டர் ஆர்டர் போட்டதேதியிலிருந்து கீழ் ரெவின்யூ அதிகாரிகளுக்கு நிலத்தை அயன் நிலமாகவும், தர்க்காஸ்து கொடுக்ககூடியதாகவும் பாவித்துக்கொள்ள அதிகாரமிருக்கிறது. ஆகவே முதல் ஆக்ஷேபணை ப்ரயோஜனமற்றதாகிறது.

இன்னொரு ஆக்ஷேபணை என்னவென்றால், போர்ட் அப் ரெவின்யு ஸ்டாண்டிங் ஆர்டரின்படி கலெக்டர் தர்க்காஸ்து கொடுத்ததை ரத்துசெய்துவிட்டார் என்று சொல்லப்படுவது. ஆனால் இந்த ஆர்டர் ஏற்கனவே நிலைவரமாய் ஏற்பட்டுள்ள பாத்யதைகளை பாதிக்கமாட்டாது. வாதிக்குத் தர்க்காஸ்து கொடுத்தது இந்த ஆர்டர்பிறந்ததேதிக்கு முன நடந்திருக்கிறது. மேலும் தீர்வைப்படாத நிலங்களுக்கு ஏற்பட்டுள்ள நடவடிக்கைகள் சரிவர அநுஷ்டிக்கப்படவில்லையென்றும், அதை அயன் நிலமாக மாற்ற கலெகடா ஸாங்க்ஷன் வாங்கியிருக்கவேண்டுமென்றும் சொல்லி கலெக்டர் பட்டாவை ரத்து செய்திருக்கிறார். ஆனால் கலெக்டர் நிலத்தை அயன் நிலமாக மாற்ற ஏற்கனவே ஸாங்க்ஷன் செய்திருக்கிறார் என்று மேலே காட்டியிருக்கிறோம. ஆகையால் வாதிக்கு நிலத்தின் மேலுள்ள பாத்யதை ரத்துசெய்யக்கூடியதல்ல.—1914 லா வீக்லி 225.

LOSS OF CONTENTS OF PACKAGES.

மூட்டைகளில் திருட்டுப்போவது.

சில ஸாமான்கள் வாதிக்கு அனுப்பப்படுவதற்காக ப்ரதிவாதியாகிய ரெயில்வே கம்பெனியினிடம் ஒப்புவிக்கப்பட்டன. இந்திய ரெயில்வே ஆக்ட், 72-வது ஸெக்ஷனில் உள்ள நிபந்தனைகளின்படி தயார் செய்த பாரம் எச் (Form H) 'ரிஸ்க்நோட்', அதாவது, நஷ்டம நேர்ந்தால் யார் பொறுத்துக் கொள்வதென்பதைப் பற்றிய பத்ரம, ஒன்றை யனுஸரித்து மேற்படி ஸாமான்கள் ரெயில்வே கம்பெனியின்வசம் ஒப்புவிக்கப்பட்டன. அந்த 'ரிஸ்க்நோட்'டின்படி, ரெயில்வே நிர்வாகத்தார் வேண்டுமென்றே அலக்ஷ்யமா யிருந்ததாலோ, அந்த கம்பெனியாரின ஸிப்பந்திகள், ஸாமான்களை ஏற்றியிறக்கும் ஏஜெண்டுகள் ஆகிய இவர்களால் திருட்டு நேரிட்டோ, அல்லது இவர்கள் வேண்டுமென்று அலக்ஷ்யமாயிருந்ததனாலோ, ஒப்புவிக்கப்பட்ட ஸாமான்கள் எல்லாமாவது அல்லதுஒன்று அல்லது பல முழுச் சிப்பங்களாவது நஷ்டமாய்ப் போயிருந்தால்தான் ரெயில்வே கம்பெனி அந்த நஷ்டத்துக்கு பாத்யப்படும். அப்படி யில்லாமல், வேறு எந்தக்காரணத்தாலாவது, ஒப்புவிக்கப்பட்ட ஸாமான்கள் எல்லாவற்றிற்குமாவது, அல்லது அவைகளில எதற்காவது டாமேஜ் ஏற்பட்டோ, அவைகள் கெடுதலடைந்தோ, பழுதாயோ, காணாமலோ போயிருந்தால் அதற்கு ரெயில்வே கம்பெனி உத்தரவாதியாகாதென்று ஸாமான்களை ஒப்புவித்தவர் ஒப்புக்கொண்டார். பிறகு வாதி சில சிப்பங்களில் இருந்த ஸாமான்கள் காணாமல் போய்விட்டன என்று சொல்லி, அதற்கு நஷ்டத்துக்கு ஈடு கொடுக்கவேண்டுமென்று ரெயில்வே கம்பெனியின்மேல வ்யாஜ்யம் போட்டார். அந்த வ்யாஜ்யத்தில் பின் வருமாறு தீர்ப்புச் சொல்லப்பட்டது. 'ரிஸ்க் நோட்'டில் ரெயில்வேயைக் கட்டுப்படுத்தமாட்டா என்று சொன்ன காரணங்களால் நஷ்டம் ஏற்படவில்லையென்று வாதி ருசுப்படுத்த வேண்டும். சிப்பங்களின் உள்ளே யிருந்த ஸாமான்கள் காணாமல் போனது 'ரிஸ்க் நோட்'டில் சொல்லி யிருக்கிறபடி சிப்பம் முழுவதும் காணாமல் போனதாகாது. வ்யாஜ்யம் தள்ளுபடி செய்யப்பட்டது.

19 கல்கத்தா லா ஜர்னல் 142.

HINDU WIDOW AS TRUSTEE OF TEMPLE

ஹிந்து விதவை கோவில் ட்ரஸ்டியாவது.

ஒரு ஊரில் ஒரு கோவிலின் ட்ரஸ்டி ஸ்தானம் 60 வருஷகாலமாக அவ்வூரிலுள்ள ஒரு குடும்பத்தாரிட மிருந்து வந்தது. அந்தக் குடும்பத்தில் கடைசியாக ட்ரஸ்டிஸ்தானத்தை வகித்தவர் வாதியினுடையபுருஷனுவார். வாதி யிறந்த பிறகு க்ராமத்தார்கள் தாங்கள் கோயிலை ஸ்தாபித்ததாகச் சொல்லி ப்ரதிவாதியை ட்ரஸ்டியாக நியமித்தார்கள். அதன்மேல் வாதியாகிய விதவை ட்ரஸ்டி உத்யோகம வகிக்கும் பாத்யதை அவர்களுக்குச் சேராமல் தனக்குச் சேரவேண்டுமென்று டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் கோர்ட்டில் வ்யாஜ்யம் போட்டாள். டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் வாதிக்கு அனுகூலமாகத் தீர்ப்புச் செய்தார். ப்ரதிவாதி டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜிடம் அப்பீல் செய்ததில் ஜட்ஜானவர், வாதி ஒரு ஸ்த்ரீயானதினால், கோவில் ட்ரஸ்டி உத்யோகமவகிக்கபாத்யதை கிடையாதென்று சொல்லி டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப்பின் தீர்ப்பைமாற்றி விட்டார். வாதி மறுபடியும் சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தாள். கோவில் ட்ரஸ்டி உத்யோகம் வகிப்பதில் மத ஸம்பந்தமான பூஜை முதலிய கார்யங்கள் செய்யவேண்டுமென் றிருந்தாலொழிய ஒரு ஸ்த்ரீ கோவில் ட்ரஸ்டி உத்யோகம வகிக்க கூடாதென்று சொல்வதற்கு ஹிந்து லாவில் யாதொரு ஆதாரமும் இல்லை யென்றும், 60-வருஷகாலத்துக்கு மேலாக ட்ரஸ்டி உத்யோ

கம் வாதியின் குடும்பத்தாரிடமே யிருந்துவந்ததால் ட்ரஸ்டீஷிப்பு வாதிக்குச் சேரவேண்டுமே யொழிய க்ராமத்தார்களுக்குச் சேராதென்றும் வாதி பக்கம் வாதிக்கப் பட்டது. வாதியின் குடும்பத்தார் க்ராமத்தாருக்கு விரோதமாக ட்ரஸ்டிஷிப் பாத்யதையை தங்களுக்கு ஸொந்தமானதாகவே அடையக்கூடுமென்றும், ஆனால் வழக்கமாக தனனுடைய குடும்பத்தார்கள் ட்ரஸ்டிஷிப் பாத்யதையை வகித்து வந்தார்களென்பதைக் கொண்டு மாத்ரம் அந்த பாத்யதையை வாதியடைய முடியாதென்றும், ஹைகோர்ட்டார் அபிப்ராயப் பட்டு, சென்ற 60-வருஷ காலமாக வாதியின் குடும்பத்தார் கோவில் ட்ரஸ்டீஷிப் பாத்யதையை க்ராமத்தார்களுடைய அனுமதியின் மேல் அனுபவித்து வந்தார்களா, அல்லது க்ராமத்தார்களுக்கு ட்ரஸ்டீஷிப்பில் யாதொரு பாத்யமும் இல்லை யென்னும்படி அனுபவித்து வந்தார்களா என்பதை விசாரித்து ரிகார்டு செய்யும்படி கீழ்க்கோர்ட்டுக்கு உத்தரவிட்டார்கள்.

PAYMENT FOR GIVING EVIDENCE.

ஸாக்ஷ்யஞ் சொல்வதற்குப் பணங் கொடுத்தல்.

ப்ரதிவாதி ஸம்பந்தப்பட்டுள்ள ஒரு ஜீவனம்சக் கேஸில் ப்ரதிவாதிக்கு ஸாதகமாய் வாதியின் ஸ்நேகிதர் உண்மையான ஸாக்ஷ்யம் சொல்லுவதற்காக ப்ரதிவாதி வாதிக்குப் பணங்கொடுப்பதாய் ஒரு ப்ராமிஸரி நோட்டு எழுதிக்கொடுத்தார். பிறகு ப்ராமிஸரி நோட்டின்படி ப்ரதிவாதி பணங் கொடுக்கவேண்டுமென்று டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் கோர்ட்டில் வாதி வ்யாஜ்யம் போட்டார். டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் வ்யாஜ்யத்தைத் தள்ளிவிட்டார். அதன்மேல் வாதி டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப்பின் தீர்ப்பை மாற்றும்படி ஹைகோர்ட்டுக்கு ஸிவில் ரெவிஷன் பெடிஷன் போட்டார். ஹைக்கோர்ட்டார் பின்வருமாறு அபிப்ராயப்பட்டார்கள்.

கோர்ட்டில் ஸாக்ஷ்யம் சொல்லுவது ஒரு பொதுஜனக்கடமையாகும். ஸாக்ஷ்யம்சொல்லுவதாகவாதியின் ஸ்நேகிதாவாக்களிப்பது, ப்ரதிவாதி, வாதிக்குப் பணம் கொடுப்பதாக ப்ராமிஸரி நோட்டு எழுதிக் கொடுத்ததற்குத் தகுந்த ப்ரதிப்ரயோஜனமாக மாட்டாது. அப்படி ப்ரதிப்ரயோஜன மாகுமென்று சொல்வதும் வீண் ப்ரமையாகும். மேலும் சட்டத்தால் விதிக்கப்பட்ட ஒரு கடமையை ஒருவர் செய்வதற்காக அவருக்காவது அல்லது வேறொருவருக்காவது இனுமாக ஏதாவது பணம் கொடுப்பதாய் உடன்படிக்கைசெய்வது பொதுஜன நன்மைக்கு விரோதமானது. கீழ்க்கோர்ட்டார் வ்யாஜயத்தைத் தள்ளினது ந்யாயமானதே.—1914-வா வீக்லி 300.

HOW HE WON THE CASE.

கேஸ் ஜயித்த விதம்.

லார்ட் ராப்ஸன் எனற ப்ரஸித்திபெற்ற இங்க்லீஷ்கனவானுடைய மகன் இங்க்லண்டின் வடபாகத்தில் ஒரு பாரிஸ்டராயிருக்கிறார். இவரிருக்கும் ஜில்லாவில் இவருடைய தகப்பனா ராஜாங்க ஸம்பந்தமான கார்யங்களிலும் ஜனங்களுடைய க்ஷேமத்தைப்பற்றிய கார்யங்களிலும் ரொம்பவும் பாடுபட்டு வந்திருந்தார். இதனால் மகனுக்கும் அந்த ஜில்லாவில் ரொம்ப செல்வாக்கு இருந்தது. ஸமீபத்தில் ஸாதாரண குற்றம் செய்திருந்த ஒரு குற்றவாளியின் பக்கம் வாதிக்க மகன அந்த ஜில்லாவிலுள்ள ஒரு கோர்ட்டுக்குப்போயிருந்தார். அந்தக் கேஸில் குற்றவாளி ந்யாயமாய் தண்டனையடையவேண்டியவன். ஆயினும ஜூரிகள் அவனை விடுதலை செய்துவிட்டார்கள். மிஸ்டர் ராப்ஸன் கோர்ட்டைவிட்டு வெளியில் போய்க்கொண்டிருந்த போது ஜூரிகளில் ஒருவர் அவரிடம் வந்து "உமது தகப்பனுரை எங்கள் எல்லாருக்கும் ரொம்பத் தெரியும். அவரிடம் எங்களுக்கு ரொம்ப அபிமானம் உண்டு, அதனுல் தான் உமது கேஸ் தோற்றுப்போவதில் எங்களுக்கு இஷ்டமில்லை." என்றாராம்.

The Sanitary World.
ஸுகாதாரப் பகுதி

MILK SUPPLY IN TOWNS
பட்டணங்களில் பால் ஸப்ளை.

பட்டணங்களில் பால் வஸதி மிகவும் கேவலமாக இருக்கிறதென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். இது விஷயமாக பலர் பற்பல ஆலோசனைகள் சொல்லி வருகிறார்கள். சென்ற ஜனவரிமாஸம் எல்லா இந்திய ஸுகாதாரக் கான்பரென்ஸ் லக்னௌவில் கூடினபோது பூனா விவஸாயக்காலேஜ் ப்ரின்ஸ்பலாகிய டாக்டர் ஹாரோல்ட் மான் என்பவர் தாம் வாசித்த ஒரு வ்யாஸத்தில் இந்தப்பால் வஸதி விஷயமாக சில அபிப்ராயங்களையும் யோசனைகளையும் தெரிவித்தார். அவைகளை இங்கு சுருக்கி எழுதுகிறோம்.

அவர் தமது வ்யாஸத்தில், பூனாப்பட்டணத்தில் பொதுவாய்ப்பால் வஸதி எப்படியிருக்கிறதென்பதைத்தெரிவித்து கிட்டத்தட்ட அதைப் போலவே மற்ற பட்டணங்களிலும் இருக்குமென்கிறார். பூனாவில் பால்வஸதியின் நிலைமை பின் வருமாறு.

(1) பூனாவில் வேண்டியிருக்கும் பாலில் சற்றேறக்குறைய 5-ல் ஒரு பாகம் பட்டணத்துக்கு வெகு சமீபமாயுள்ள இடங்களிலிருந்து வருகிறது. இதைக்கொண்டு வருபவர்கள் ஒவ்வொருவரும் கொஞ்சமாகப் பால் கொண்டு வருவதோடு, கொண்டு வரும் பாலை கையிலேயே பாத்ரங்களில் கொண்டு வருகிறார்கள்.

(2) மீதிப்பால்பட்டணத்திலேயேகிடைத்து வருகிறது. சில ஜனங்கள் ஸொந்த உபயோகத்துக்காக மாடு வைத்துக்கொண்டு பால் கறந்து உபயோகித்து வருகிறார்கள். மற்றவர்கள் பால்காரர்களிடத்தில் பால் வாங்கி வருகிறார்கள். பால்காரர்களுடைய மாடுகள் ஸுகாதாரக்குறைவான சிறு கொட்டில்களில் கட்டி வைக்கப்பட்டு வருகின்றன.

(3) விற்பனை செய்யாமல் ஸொந்த உபயோகத்துக்குப் பால் வேண்டுமென்று ஜனங்கள் மாடு வைத்திருப்பதை கணக்கில் சேர்க்காமல் பார்த்தால், ஸாதாரணமாய் விற்கப்படும் பாலில் நூற்றுக்கு தொண்ணூறு பாகம் எருமைமாட்டுப் பாலேயாகும்.

(4) வெளியிலிருந்து வரும் பால் விற்கப்படும் விலைக்குத் தகுந்தபடி கொஞ்சமாயோ அதிகமாயோ ஜலம் கலந்ததாயிருக்கிறது. ரூபாய்க்கு நான்கு சேருக்கும் மலிவான பால் சுத்தமாயிருக்குமென்று ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

(5) பட்டணத்திலேயே கறந்து விற்கப்படும் பாலும் இன்னும் ரொம்ப கலப்புப் பாலாக இருக்கிறது.

(6) ஜலங்கலக்காத சுத்தமான பாலின் விலை அதிகமாக ஆக ஜலங்கலக்கும் வழக்கமும் அதிகரித்துக்கொண்டே யிருக்கிறது.

(7) பால் கறக்குமிடம் ரொம்ப அசுத்தமாகவும் ஸுகாதாரக்குறைவாகவும் இருக்க, அதற்குத் தகுந்தபடி பாலானது ரொம்ப அசுத்தமாயிருக்கவில்லை.

மேலே குறித்த பூனாவின் பால் வஸதி நிலைமைகள் பொதுவாய் மற்றெல்லா பட்டணங்களிலும் இருந்து வருகின்றனவென்று சொல்லலாம்.

இந்த நிலைமைகளை மாற்ற ஸுகாதார விஷயமாய் சில காரியங்கள் செய்யவேண்டி யிருக்கும்.

(1) கறவை மாடுகள், பசுக்களும் எருமை

களும், நோய் நொடி யில்லாமல் தேக ஸுக முள்ளவைகளாயிருக்கவேண்டும்.

(2) அவைகளைக் கட்டி யிருக்கு மிடங்கள் ஸுகாதாரமுள்ளவைகளா யிருக்கவேண்டும்.

(3) ஜனங்களுக்கு விறகப்படும் பால் மிகவும் நல்ல நிலைமையி லிருக்கவேண்டும்.

(4) விற்குமுன் பாலில்ஜலங்கலக்கக்கூடாது. பாலிலிருந்து ஆடையைப் பிரித்தெடுக்கவுங் கூடாது.

(5) விற்குமுன் பால் அசுத்தமடையாமலிருக்கும்படிக்கும், கெட்ட வஸ்துக்கள் அதில் சேராமலிருக்கும்படிக்கும் இருக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

மேலே சொன்னவை ஸுகாதார ஸம்பந்தமான விஷயங்களாகும். ஆனால் பாலுக்கு ரொம்ப க்ராக்கி யிருப்பதால் அந்த க்ராக்கிக்குத் தகுந்தபடி வேண்டியளவு பால் ஸப்ளை செய்யவும், அந்தப் பாலைக் கூடியமட்டும் குறைந்த விலைக்கு விற்கவும் என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டியது அவச்யம். விலை விஷயம ரொம்ப முக்யமானது. ஸுகாதார ஸம்பந்தமான ஏற்பாடுகள் செய்து இப்போது விற்கும் பால் விலையை அதிகப்படும்படி செய்வது மிகவும் தவறான காரியம்.

நாம் கண்டு பிடிக்கவேண்டிய முறை எப்படியிருக்கவேண்டுமென்றால், ஸுகாதார வஸதிக்காக சட்டதிட்டங்கள் ஏற்படுத்தினாலும் பாலின் விலை அதிகரிக்கக்கூடாது. பால் உற்பத்தி செய்வதிலும், விற்பனை செய்வதிலும் அதிகச் செலவு ஏற்படக்கூடாது. சென்ற சில வருஷங்களின் அநுபவத்தைக் கொண்டும், மற்ற தேசங்களில் எப்படி நடந்து வருகின்றன என்பதைக்கொண்டும் பார்த்தால், மேலே சொன்னபடி செய்யக்கூடுமென்று சொல்லலாம்.

ரொம்ப உபயோகமற்ற பால் ரொம்ப உயர்ந்த விலையில் விற்று வருவதற்கு பூனாவின் அநுபோகப்படி மூன்று முக்ய காரணங்கள் இருக்கின்றனவென்று தெரிகிறது.

(1) கறவை மாடுகளைப்பற்றின மட்டில் சில குறைகளிருக்கின்றன. பசுமாடுகள் கறவைக்கென்று ப்ரத்யேகமாய் வ்ருத்தி செய்யப்படாமல் வேலைக்குதவும் எருத்து மாடுகள் வ்ருத்தி செய்யப்படும்போது உண்டானவைகளாயிருக்கின்றன. அதாவது, கறவைப் பசுக்கள் வ்ருத்தி செய்வதற்கென்று ப்ரத்யேகமான முயற்சி யாதொன்றும் செய்யப்படுவதில்லை. ஆனால் எருமைகள் பால் கறப்பதற்காகத்தான் வளர்க்கப்படுகின்றன. ஆயினும் அவைகளில் அதிக பால் கறக்கும ஜாதிகள் மிகவும் குறைந்து கொண்டு வருகின்றன. நல்ல ஜாதிகளும் இப்போது அகப்படுவது மிகவும் அருமையாயிருக்கிறது. இவைகளுக்குப் போடும் தீனிச் செலவுக்குத் தகுந்தபடி பால் கிடைப்பதில்லை.

(2) மாடுகளை பெரும்பாலும் பட்டணங்களில் கட்டி வைத்து வருகிறார்கள். அது பிசகு. ஏனென்றால் பட்டணங்களில் செலவு அதிகம். கட்டி யிருக்கும் இடங்களும் ஸுகாதாரக் குறைவானவை. அவைகளுக்கு வேண்டிய தீவனத்தை வெளியூர்களி லிருந்து கொண்டு போவதற்குப் ரொம்ப செலவு ஏற்படும்.

பாலை வெளியூர்களிலிருந்து கொண்டுவந்து விற்பது ரொம்ப கஷ்டமென்று எண்ணியே இந்த மாதிரி மாடுகளைப்பட்டணங்களில்கட்டி வைத்துக் கொள்கிறார்கள். அந்தக் கஷ்டத்தைப் போக்கி விடுவது முடியுமென்று தோன்றுகிறது. அப்படியானால் பட்டணத்துக்கு வெளியில் மாடுகளைக் கட்டி வைத்துப் பால் கறந்து பூனாவிலும், அதைப்போலவே மற்ற பட்டணங்களிலும், மலிவாயும் சுத்தமாயும் பால் ஸப்ளை செய்யக்கூடும் என்று சொல்லலாம். மாடுகளை பட்டணத்துக்கு வெளியில் கட்டி வைக்க வேண்டியது மிக அவச்யம்.

பாலை பட்டணங்களுக்குக் கொண்டு வந்து விற்க ஏற்பாடு செய்ய வேண்டியதும் அவச்யம்.

(3) தற்போது பட்டணங்களுக்கு வெளியிலிருந்து வரும் பாலைக்கொண்டு வருவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் இல்லாமல் அதை கொண்டுவர ரொம்ப செலவு பிடிப்பதோடு பால் ரொம்ப ஸுகாதாரக் குறைவுள்ளதாயும் இருக்கிறது. க்ராமாந்தரங்களிலிருந்து பட்டணங்களுக்குப் பால் கொண்டு வந்து விற்பதை ஒழுங்கு படுத்தினுல், பாலின் விலை மலிந்து போகும். பாலும் அதிகமாகவும் நல்லதாகவும் கிடைக்கும்.

பால் வஸதியைச் சீர்திருத்துவதற்கு பின் வருங்கார்யங்கள் செய்யவேண்டியது அவசிய மானது.

(1) போடுந் தீனிக்குத் தகுந்தவளவு அதிக பால் கொடுக்கும்படி மாடுகளை உயர்ந்தவைகளாக அபிவ்ருத்தி செய்ய வேண்டும்.

(2) மாடுகளை பட்டணங்களில் கட்டி வைக்காமல் பட்டணத்துக்கு வெளியில் அதிக செலவு பிடிக்காத இயற்கையான வஸதிகளுள்ள இடங்களில் கட்டி வைக்க வேண்டும்.

(3) பாலை ரெயில் மூலமாகவோ, ஸாதாரண ரஸ்தாக்கள் வழியாகவோ கொண்டு வந்து ஸப்ளை செய்வதை ஒழுங்கு படுத்த வேண்டும்.

சென்ற இரண்டு மூன்று வருஷ காலமாக பெரிய பால் தயிர் கம்பெனிகள் ஏற்படுத்துவதைப் பற்றி அநேகர் ப்ரஸ்தாபித்து வருகிறார்கள்.

பெரிய பாற்சாலைகள் ஸதாபிப்பது ஒரு பக்கம் இருக்க, சுத்தமான பால் விலைமலிவாகக் கிடைக்கும்படி செய்வதற்கு ஒரே ஒரு வழிதானிருக்கிறது. அதாவது, க்ராமங்களில் பால் கறப்பதற்கும் பாலை வெளியூர்களுக்குக் கொண்டு போவதற்கும் ஒழுங்கான ஏற்பாடுகள் செய்வதே. தற்போது பாலை விற்கக் கொண்டு போவதற்கு மாத்ரம் அநேகர் வீணில் ச்ரமப்பட்டு உழைத்து வருகிறார்கள். பாலை விற்பதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்து விட்டால் அநேகர் மாடுகளைப்பற்றி அதிகமாக கவனித்து வருவதற்கு அவகாசம் ஏற்படும். இதற்கு க்ராமத்தில் மாடு வைத்திருப்பவர்களுக்குள் நம்பிக்கையும் ஒற்றுமையும ஏற்படுத்தி அவர்களுடைய வேலைகளை ஒழுங்கு படுத்தவேண்டும்.

நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால் பிறகு பால் வ்யாபாரம் செய்யும் தரகுகாரர்களைக் கொண்டாவது, பால்காரர்களின் கோவாபரேடிவ் ஸங்கத்தாலாவது பாலை விற்பனை செய்ய ஏற்பாடு செய்வது ஸுலபமாகும். பால் ஸப்ளை விஷயமாகப் பாடுபடுபவர்கள் இடையர்களுடன் ஒத்துழைக்கவேண்டுமே யொழிய அவர்களுக்குப் போட்டியாக வேலை செய்யக் கூடாதென்றும், மிஸடர் மான சொன்னுர்.

USES OF LEMON JUICE

ஏலுமிச்சம்பழ ரஸத்தின் உபயோகங்கள்.

எலுமிச்சம்பழரஸத்துக்குப் பல மருந்து குணங்கள் இருக்கின்றன. தொண்டைப் புண், இருமல், தலைவலி, மலேரியாக் காய்ச்சல் ஆகிய இவைகளுக்கு இது மிகவும் கை கண்ட மருந்தாம். தொண்டைப் புண்ணுக்கு, ஜலங்கலக்காத சுத்தமான எலுமிச்சம்பழ ரஸத்தைக்கொண்டு வாயைக் கொப்புளிக்கவும். எலுமிச்சம்பழ ரஸத்தில் சர்க்கரை சேர்க்கக்கூடாது. ஜலதோஷம் அல்லது இருமல் வந்திருநதால் எலுமிச்சம்பழ ரஸமும், வடிகட்டின தேனும் சரிபங்கெடுத்துக் கலந்து ஒரு தேக்கரண்டியளவு ஒரு மணிக்கொருதடவை சாப்பிடவும். கடுமையான தலைவலிக்கு ஒரு பாகம் எலுமிச்சம்பழ ரஸமும் இரண்டு பாகம் வெந்நீரும் கலந்து எவ்வளவு சூடு தாங்கக்கூடுமோ அவ்வள சூட்டில் ஒரு கிண்ணம நிறைய எடுத்து சிப்பிக்குடிக்கவும். மலேரியாக் காய்ச்சலுக்கு

ஒரு எலுமிச்சம்பழத்தின் பாதியைப் பிழிந்து சாறு எடுத்துக்கொண்டு அதோடு இரண்டு தேயிலைக்கரண்டி ஜலமும் சிறிது சர்க்கரையும் கலந்து தினம் மூன்று வேளை சாப்பிடவும். நகச்சுற்று வந்தால் எலுமிச்சம்பழத்தில் த்வாரம் செய்து அதில் விரலை விட்டு கீழே விழாமலிருக்கும்படி கட்டிவிடவேண்டும். இரண்டொரு நாள் வைத்திருந்தால் பிறகு நகச்சுற்றை கீறிவிடலாம்.

PLAGUE

ப்ளேக்

ப்ளேக் பரவியிருக்குமிடங்களில் வீடுகளில் எலி இறந்து போனாலும், ஜனங்களுக்கு ப்ளேக் கண்டாலும் என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றி 'கொச்சி நேசன்' என்னும் நிருபர் 'சுதேசமித்திரன்' பத்ரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்.

எலிகள் சாகிறவீட்டில் ப்ளேக் வ்யாதி மனிதரைப் பிடிப்பது ஸகஜமே. அதற்காகப் பயந்து வீட்டைவிட்டு ஓடிப்போவதில் காரியமில்லை. எலிசெத்துவிழுந்தவுடன் அவ்வீட்டிற்குள் எல்லா அறைகளிலும்கொஞ்சம் கெந்தகமும், பளிங்கு ஸாம்பிராணியும், சுக்கும், ஒரு கட்டுவேப்பிலையும், செத்த எலியும் கூட்டிவைத்து நெருப்பை மூட்டி, நன்றாய்ப் புகை வரும்போது ஜனங்கள் வெளியே போய்க் கதவையும் ஜன்னல்களையும் சாத்திப்போட வேண்டும்.' இப்படி தினந்தோறும் செய்து வரவேண்டும். அதே வீட்டில் ஜனங்களிருந்துகொண்டு, காலைதோறும் ஒரு அவுன்ஸ் வேப்பிலைச் சாறும், ஒரு அவுன்ஸ வெங்காயச் சாறும், ஒரு அவுன்ஸ் கருப்புச் சர்க்கரையும் கலந்து ஒவ்வொருவரும் சாப்பிட்டு வரவேண்டும். பிள்ளைகளுக்குப் பாதியும் கால் பாகமுமாக வயதிற்குத் தக்கபடி கொடுத்துவரவேண்டும். இவ்விதம் செய்துவந்தால், ஒருவருக்காவது ப்ளேக்கு வரமாட்டாது. ப்ளேக்கு வந்த ரோகிகளுக்கு மேற்படி மருந்தை 3-மணி நேரத்திற்கு ஒரு தடவை கொடுத்துவர வேண்டும். இப்படிச் செய்துவந்தால் 100-க்கு 75 பேர் குணப்படுவார்கள் என்பதற்கு ஸந்தேகமில்லை.

THE EFFECT OF PHYSIC.

பேதிக்குச் சாப்பிடுவதின் பயன்.

நம்முடைய வைத்யர்கள் கேட்பவர் யாவருக்கும் பேதிக்குக் கொடுக்கலாமென்று நினைக்கிறார்கள். அப்படிச் செய்வதில் அநேக விதக் கெடுதிகள் உண்டாகுமென்பதில் ஸந்தேகமில்லை. அதிகமாய் பேதியாகிக் குடல் வெந்து சீதம் விழுந்தாலொழிய நம்முடைய ஜனங்களுக்கு த்ருப்தியாவதில்லை. பேதிக்குச் சாப்பிடும் மருந்தில் நேர்வாளம், பூரம் முதலிய மருந்துகள் இருக்கக்கூடாது. நோயாளிக்கு எந்தப் பாகத்தில் மலம் நிற்கிறதென்று வைத்யர் நன்றாய் அறியவேண்டும். ஸுமார் 4 அல்லது 5 தரம் மலம் போனால் போதுமானது. மழை பெய்யும் நாளிலும் காலரா பரவி வருங்காலங்களிலும் தேகத்தில் உஷ்ணம் அதிகரித்துள்ள காலத்திலும், ஜ்வரத்திலும், பேதிக்குக் கொடுக்கக்கூடாது, ஆகையால் பொதுவாய் பேதி மருந்தை தக்க வைத்யர்களிடம் சாப்பிடவேண்டும்.

SLEEPLESSNESS.

தூக்க மின்மை.

தூக்கம் வராமல் கஷ்டப் படுகிறவர்களுக்குத் தேன் ரொம்ப நல்லதாம். ஒரு கண்ணாடி டம்ளர் ஜலத்தில் இரண்டு ஸ்பூன் அளவு தேனை விட்டுக் கலக்கிக் குடித்தால் ராத்ரி முழுவதும் விழிப்பில்லாமல் தூங்கலாமாம்.

The Boys' World.

பையன்கள் பகுதி.

THE BAT.

வௌவால்.

வௌவால் ரொம்ப ஸாதாரணமான ப்ராணியானாலும், அது இரவில் ஸஞ்சரிக்கும் தன்மையுடைய தாகையால் அநேக ஜனங்களுக்கு அதைப்பற்றி விசேஷமாய் தெரிந்திருக்காது.

வௌவாலில் ஸுமார் 450-இனங்கள் உண்டு இவைகளில் சில பார்வைக்கு லக்ஷணமாயும், சில பார்வைக்கு விநோதமாயும், அவலக்ஷணமாயும் இருக்கின்றன. இவைகளில் பல இனங்கள் மனிதருக்குத்தீங்குசெய்துகொண்டு வரும் பூச்சிகளைக் கொன்று தின்று மனிதருக்கு உதவியாயிருக்கின்றன. சில ஜாதி வௌவால்கள் பழங்களைத் தின்று ஜீவிக்கின்றன. இவைகளும், ம்ருகங்களைக் கடித்து ரத்தத்தை உறிஞ்சும் வௌவால்களும் மனிதருக்கு மிகவும் நஷ்டமுண்டாக்கும் வகைகளாகும்.

இங்க்லீஷ்காரர்களின் முன்னோர்களாகிய ஸாக்ஸன் ஜாதியார்கள் வௌவாலைப் பறக்கும் சுண்டெலி யென்று பெயரிட்டுவந்தார்கள். சீனாவில் வௌவாலை தேவலோகத்து எலியென்றும், பூதகணங்களைச் சேர்ந்த எலியென்றும், பறக்கும் எலியென்றும், இரவில் ஸஞ்சரிக்கும் தூக்கணாங்குருவி யென்றும் சொல்லுகிறார்கள். அவர்கள் வௌவாலைப் பற்றிக்கொண்டிருக்கும் எண்ணங்கள் வெகு விநோதமாயிருக்கின்றன. வௌவாலின் மூளை மிகவும் கனமாயிருப்பதால் தான் அது தலைகீழாய்ப் பறக்கிறதாம். அது மூச்சுவாங்கும்போது காற்றை விழுங்கிவிடுவதால் அது வெகு காலம் ஜீவித்திருக்கிறதாம். சீனர்கள் வௌவாலை ஸந்தோஷத்தின் அறிகுறி சின்னமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஐந்து வௌவால்கள் உள்ள ஒரு உருவத்துக்கு அவர்கள் பஞ்சபாக்யமென்று பெயர் கொடுக்கிறார்கள். பஞ்சபாக்யங்களென்பவைகள் மனிதர் அடைய விரும்பும் ஐச்வரியம், தேகஸுகம், நல்லகுணம், தீர்க்காயுள், கஷ்டமில்லாத மரணம் ஆகிய இவைகளாம். வீட்டுக்கு வந்த ஒரு விருந்தாளிக்கு க்ஷேமமும் ஸம்பத்தும் உண்டாகும்படிகோரவேண்டுமென்றால், வீட்டுக்காரர் அடிப்பாகத்தில் ஐந்து வௌவால்களின் உருவங்கள் சித்தரிக்கப்பட்ட ஒரு கோப்பையில் அவருக்கு டீ (தேயிலைப்பானம்) கொடுப்பது வழக்கமாம்.

வௌவால் ஒரு பறவை யல்ல. அது குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கும் ம்ருகவகையைச் சேர்ந்தது. ஆனால் ஸாதாரண நாற்கால் ப்ராணிக்கும் அதற்கும்ரொம்ப வித்யாஸமுண்டு. அதன் முன்னங்கால்கள் (அவைகளை கைகளென்றும் சொல்லலாம்) வெகு நீளமானவை. விரல்களிலுள்ள எலும்புகளும் ரொம்ப நீளமாயிருக்கின்றன. அவைகளுக்கிடையில், ரப்பர்போல் வளையக்கூடிய ரோமமில்லாத தோல் இருக்கிறது. இந்தத் தோல் கைகளுக்கும் தேகத்துக்கும் இடையிலுள்ள பாகத்திலும், கால்களுக்கும் கைகளுக்கும் இடையிலுள்ள பாகத்திலும் இரண்டு கால்களுக்கும் இடையிலுள்ள பாகத்திலும் வ்யாபித்திருக்கிறது. இந்தத் தோல்தான் வௌவால் பறப்பதற்கு உதவியாயிருக்கிறது.

வௌவாலினுடைய கட்டைவிரல் ரொம்ப குட்டையானது. அதிலுள்ள நகம் வளைந்த கொக்கிபோல் இருக்கிறது. இதனால் வௌவால் மரம் முதலிய இடங்களில் தொங்கிக்கொண்டிருக்கவும், உயர ஏறவும் கூடும். ஸாதாரணமாய் வௌவால் தலைகீழாய் காலின்

உதவியால் தொங்கிக்கொண்டிருப்பது தான் இயல்பு. வௌவால் தரையில் விழுந்து விட்டால் அங்கிருந்து நேராகப் பறந்து போக முடியாது. மெதுவாய் ஒரு சுவர் அல்லது மரத்தின் அருகில், போய் அதில் வேண்டிய உயரத்துக்கு தவழ்ந்து ஏறிக்கொண்டு அங்கிருந்து பறந்து போகும். பூமியிலிருந்து மரத்தின் மேல் ஏறும் போதும தலை கிழாகவே ஏறுகிறதாம்.

இரவிலும், கொஞ்சம் இருட்டாயிருக்கும் போதும் வௌவால்களுக்குக் கண்ரொம்ப நன்றாய்த் தெரியும். பகலில் கண்கள் ஸுமாராய்ப் பார்க்கக்கூடும். ஆனாலும் பகலில் அவைகளை யாராவது தொந்தரை செய்தால் அவைகள் யாதொரு ச்ரமும் இல்லாமல் பத்ரமான இடங்களுக்குப் போய்ச் சேருகின்றன. அவைகளின் கண்கள் மிகவும் சிறியவை.

எல்லா ஜாதி வௌவால்களுக்கும் பற்கள் உண்டு. ஆனால் இந்தப் பற்கள் அந்தந்த ஜாதி வௌவால்களின் பழக்க வழக்கங்களுக்கு ஏற்றபடி வித்யாஸப்படுகின்றன. உதாரணமாக, தென் அமெரிக்காவிலுள்ள 'வாம்பயர்' என்னும் ரத்தம் குடிக்கும் வௌவாலுக்கு நீண்டு பெரியதும் கூர்மையானதுமான நாய்ப்பற்களும், பூனையின் பற்கள் போல் கூர்மையான கடைவாய்ப் பற்களும் இருக்கின்றன.

வௌவால்களைப் பூச்சி தின்பவைகளென்றும், பழம் தின்பவைகளென்றும் இரண்டு வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள். பழந்தின்னும் வௌவால்களின் முகம் குள்ள நரியின் முகம்போல் இருக்கும். இந்த ஜாதி வௌவால்கள் மற்றெல்லா ஜாதிகளையும்விட மிகப் பெரியவை. இவைகளில் சில சிறகுகளின் ஒரு முனையிலிருந்து மற்ற முனை 4-அடி தூரமுள்ளனவாயிருக்கின்றனவாம். இவைகள் வெகுவாய் இந்தியா, ஸிலோன், மலேயா தீவுகள், ஆஸ்ட்ரேலியாவின் கீழ்ப்பாகம் ஆகிய இடங்களில் தான் அதிகம்.

ஒரு வகை வௌவாலுக்கு ரொம்ப நீளமான காதுகள் இருக்கின்றன. இந்தக்காதுகள் வௌவாலின் உடலும், தலையும் சேர்ந்தால் எவ்வளவு நீளமிருக்குமோ அதில் பாதியளவு இருக்கின்றன. இந்த வௌவால் பகலில் பறக்கும்போதுதான் இந்தக்காதுகள் நமக்குத் தெரியும். இது பறக்கும்போது தனது நீண்ட காதுகளை வெகு விசித்ரமாக மேலும் கீழும் ஆட்டிக்கொண்டேயிருக்கும்.

தென் அமெரிக்காவிலுள்ள 'வாம்பையர்' வௌவால் ஜாதிகளில் ஒரு பிரிவாகிய 'ஜாவலின்' என்னும் வௌவால் ரொம்ப கொடுமையானது. அது குதிரைகளையும் ஆடுமாடுகளையும் தோளிலும, கழுத்திலும் கடித்து ரொம்ப ஆழமாகக் காயம் செய்து விடும். இன்னம் சில 'வாம்பையர்' வௌவால்கள் மனிதர்களையுங் கூட அவர்கள் தூங்கிக் கொண்டிருக்கும போது கடித்து விடுகின்றனவாம். இந்த வௌவால்கள் தங்களுடைய கூர்மையான பற்களால் தோலில் வட்டமான த்வாரம் செய்து வெகுவேகமாய் ரத்தத்தை உறிஞ்சிக் குடித்துவிடுகின்றன.

வௌவாலுக்கு ஸ்பர்ச உணர்ச்சியும், சப்த உணர்ச்சியும ரொம்ப தீக்ஷண்யமாக இருக்கின்றன. வௌவாலானது இலையுதிர் காலத்தின கடைசியில் தூங்க ஆரம்பித்து மழைக் கால மெல்லாம தூங்கியிருந்து வஸந்த காலத்தின் ஆரம்பத்தில் தூக்கத்தை விட்டு வெளியில் ஸஞ்சரிக்க வருகிறது. வௌவால் மாரி காலத் தூக்கம் தூங்கும்போது மூச்சு வாங்குவதும் விடுவதும் கிடையாது. இந்த விஷயம் சாஸ்த்ரிகளால் பரீக்ஷிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. கரியமில வாயுவில் ஜீவ ப்ராணிகளை வைத்தால் அவை

கள் உடனே இறந்து போகின்றன. மாரி காலத் தூக்கத்திலிருக்கும் வௌவாலை அந்த வாயுவுள்ள ஒரு பாத்ரத்தில் வைத்திருந்தால் அது சாவதே யில்லையாம். ஆனால் மாரி காலத் தூக்கத்திலிராத வௌவாலை, மற்ற வஸந்தம் அல்லது கோடை காலத்தில் கரியமில வாயு வைத்திருக்கும் ஓர் பாத்ரத்தில் வைத்தால், வௌவால் உடனே இறந்து போகிறது. இதற்குக் காரணம் மாரிகாலத் தூக்கத்திலிருக்கும் வௌவால் மூச்சுவிடுவதில்லையாதலால் விஷக்காற்றாகிய கரியமில வாயுவை உட்கொள்ளாமலிருக்கிறது. மற்ற காலங்களில் வௌவால் ச்வாஸம் விடுமாகையால் கரியமில வாயுவை உட்கொண்டு அதனால் இறந்து போகிறது.

அநேகர் வௌவாலைப் பழக்கியிருக்கிறார்கள். பழகிப்போனவௌவால் தன்னை வளர்ப்பவரிடம் அதிகப்பற்றுள்ளதாய் இருக்கிறதாம். அது இரவில் வீட்டை விட்டு வெளியே போய் பூச்சிகள் முதலியவைகளைப் பிடித்துத் தின்றுவிட்டு விடியற்காலையில் வீட்டினுள் வருவதற்காக ஜன்னலோரமாகத் தொங்கிக் கொண்டிருக்குமாம்.

ADVICE TO BOYS.

பையன்களுக்கு ஏற்ற நீதி.

பரிசுத்த நினைவும் கபடமற்ற பேச்சும் பரிசுத்த நடத்தையுமே நீ மேன்மையை அடையத் தருந்த ஸாதனங்கள்.

உள்ளொன்றிருக்கப்புறமொன்றுபேசாதே.

'எண்ணித்துணிக கருமம்' என்ற வாக்யத்தை எக்காலத்திலும மனதிலுடையவனாயிருப்பாயானால், ஒருபொழுதும் பிசகில் அகப்பட்டுக் கொள்ளமாட்டாய்.

கெட்ட எண்ணங்களிலும் கெட்ட வழிகளிலும் நீ மூழ்கியிருக்கும் பொழுது எல்லாம் வல்ல ஈசனாகிய உன்னுள்ளிருக்கும் ஆத்மா உன் க்ரியைகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்று நினை.

தினம் உன் கார்யத்தை ஒழித்து சிறிது நேரம் கடவுளைத் தொழ வைத்துக்கொள்.

எக்காலத்திலும் ஈசனைத் தொழுது கொண்டிருந்தால் அவர் உன்னை ஒருகாலத்திலும் தவிக்க விடமாட்டார்.

அகத்தை அடக்கி, நான் என்று சொல்வது யார், அது என்ன என்பதை அறிய முயலு.

நீ பிறப்பெடுத்ததே பரோபகாரத்திற்கு.

உன்னைப்போல பிறரையும் நினை.

ஆயுளுக்கு ஏற்பட்டது அல்பகாலம். அதில் பாதிகாலம் தூக்கத்தில் ஒழிந்து போகிறது. மீதி காலத்திலேனும் ஒரு நிமிஷங்கூட வீணிலே கழிக்காமல் இரு.

கட்டையாகிய உன் சரீரம் மடிந்தாலும், உன் காரியங்கள் எக்காலத்திலும் உலகத்தை விட்டு மடிக்காமலிருக்கும்படி செய்துபோ.

ஒவ்வொரு நிமிஷத்தையும் ஒரு பவுனாக நினைத்துக்கொள்.

நீ இவ்வுலகில் உனக்கு எவ்வளவு ஸ்வதந்த்ரங்கள் உண்டென்று நினைக்கிறாயோ அவ்வளவு ஸ்வதந்த்ரங்கள் ஸர்வஜீவன்களுக்கும் உண்டென்பதை மறந்து விடாதே.

மனிதர்களாயிருந்தாலும் ம்ருகங்களாயிருந்தாலும் எந்த ஜீவன்களாயிருந்தாலும் கடவுள் ஸமமாக பாவித்து தன் பிள்ளைகளாக மதிக்கிறார்.

நீ எப்படிப் பிறரால் நேசிக்கப்பட விரும்புகிறாயோ அவ்வாறே நீயும் பிறரை நேசி.

இளம் பருவத்திலேயே துர்நடத்தைகளை ஒழித்து நன்னடக்கைகளைப் பழக்கத்தில் கொண்டுவந்துவிட்டால் எக்காலத்தும் நன்கு மதிக்கப்படுவாய்.—லோகரஞ்சனி.

WHY THE STARS TWINKLE.

நக்ஷத்ரங்கள் ஏன் மினுமினுக்கின்றன.

நக்ஷத்ரத்தின் வெளிச்சமானது பூமியி லுள்ள நமது கண்ணுக்கு வரும்போது இடை யிலுள்ள காற்றினல் மாறுதலடைகிறதால் நக்ஷத்ரங்கள் மினுமினுப்பதாகத் தோன்று கின்றன. கனமான காற்றும் லேசான காற்றும ஒன்றோடு ஒன்று கலப்பதாலும், மேலுங் கீழு மாய் இருப்பதாலும், வெளிச்சமானது இப்படி மாறுபாடடைகிறதாம். உஷ்ண காலத்தைவிட குளிர்காலத்தில் தான் நக்ஷத்ரங்கள் அதிகமாய் மினுமினுக்கும். அதிலும் வானத்தில் உச்சியி லிருப்பவைகளைவிட அடிவானத்திலுள்ள நக்ஷ த்ரங்கள் தான் ரொம்ப மினுமினுக்கும். அதிக தணல் உள்ள அடுப்பு அல்லது ரொம்ப சூடாயிருக்கும் "ஸ்டவ்" என்னும் அடுப்பிற்கு ஒரு புறத்தில் இருந்துகொண்டு அதற்கெதிர்ப் புறத்திலுள்ள ஒரு மெழுகுவர்த்தி விளக் கைப் பார்த்தாலும் அதன் வெளிச்சம நக்ஷத் ரத்தைப்போலவே அசைந்து கொடுக்கும்.

பட்டணங்களிலுள்ள விளக்குகளை ரொம்ப தூரத்திலிருந்து பார்த்தாலும் அவைகள் மினு மினுப்பதாகத் தோன்றும். நக்ஷத்ரங்கள் ரொம்ப வேகமாய் மினு மினுத்தால் அது கால ஸ்திதி மாறுபடும் என்பதற்கு ஒரு அடையாள மாகும்.

POCKET MONEY FOR PRINCES.

ராஜகுமாரர்களுக்கு ஸொந்தச் செலவுக்குப் பணம்.

ஜார்ஜ் அரசரும் மேரி ராணியும் தங்களு டைய புத்ரர்கள் பணத்தின் அருமையை அறி ந்து கொண்டு பெரியவர்களானபோது கண் டபடி செலவு செய்யாமல் மிதானமாய்ச் செலவு செய்யும்படி பழகவேண்டும் என்று ரொப கவலை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். ப்ரி ன்ஸ் அப் வேல்ஸ் ஆஸ்பர்ன் என்னும ஊரில் இருந்தபோது அவருக்கு ஸொந்தச் செலவுக் காக அதாவது பிறருடைய அனுமதியின்றி தமிஷ்டப்படிசெலவுசெய்து கொள்வதற்காக வாரம்-12-அணு தான் கொடுத்துவந்தார்க ளாம். அவருடைய ஸஹோதரராகிய ஆல்பர்ட் ராஜகுமாரருக்கும் அவர் படித்துக் கொண் டிருந்தபோது ஒரு வாரத்துக்கு 12-அணு தான் கொடுத்து வந்தார்கள். இவர் கப்பல் படையில் ஒருசிறு உத்யோகஸ்தராக இருந்த போது அவருக்கு மூதல்சம்பளம் வருவதற்கு முன்னுலேயே அவ்வளவு தொகை செலவு செய்து விட்டாராம். இப்போது ஈட்டன் என் னும ஊரில் வாசித்துவரும் ஹென்ரி ராஜ குமாரருக்கு வாரம் $1\frac{1}{4}$ரூபாய் கொடுக்கப்படு கிறது. அவருடைய ஸஹோதரர் ஜார்ஜுக்கு 12-அணு கொடுக்கப்படுகிறது. க்ரிஸ்ட்மஸ் முதலிய காலங்களில் ராஜவம்சத்தைச் சேர்ந் தவர்கள் ஏதாவது பணம் இனுமாகக் கொடுத் தால் ராஜகுமாரர்களுக்கு வெகு ஸந்தோஷ மாம். வேறு ஸாமான்கள் வெகுமதியாகக் கொடுத்தால் அவைகளில் அவர்களுக்கு அவ் வளவு த்ருப்தி கிடையாது. ஸமீபத்தில் க்ரி ஸ்ட்மஸில் ஜார்ஜ் ராஜகுமாரருக்கு எழுதும் பெட்டி வெகுமதியாகக்கிடைத்தபோது அவர் தமது ஸஹோதரரிடம் "இதற்குப் பதிலாகப் பணமாகக் கொடுத்திருந்தால் நன்றாயிருந் திருக்கும். இதைப் பள்ளிக்கூடத்தில் விற்றால் என்ன விலைபோகுமோ?" என்றாராம்.

BOYS AND DRINKING.

பையன்களும் குடியும்.

பம்பாய் மாகாணத்தில் 14 - வயஸுக் குள் பட்ட சிறுவர்களுக்கு சாராயக் கடைக்காரர் கள சாராயம், கள் முதலிய குடி வகைகளை விற்கக் கூடாதென்று ஒரு சட்டமிருந்துவந்த து. ஸமீபத்தில் பம்பாய் ராஜதானியில் நடை பெற்ற மாகாண மதுவிலக்குக் கான்பரென் ஸில் ஷை சட்டத்தைமாற்றி 18-வயஸுக்குள் பட்ட சிறுவர்களுக்கு, குடிவகைகள் விற்கக் கூடாதென்று ஏற்படுத்த வேண்டுமென்றும, அவர்கள் சாராயக்கடைகளுக்குள் போவதை தடுக்கவேண்டு மென்றும் ஒரு தீர்மானம் செய்துகவர்ன்மெண்டுக்கு அனுப்பப்பட்டது. கவர்ன்மெண்டார், 16-வயஸுள்ளசிறுவர்கள் ஸாதாரணமாய் தாங்களே ஸம்பாதித்து சாப் பிடுகிறவர்களாயும், பெற்றோர்களின் ஆதீனத் தில் இல்லாதவர்களாயும் இருப்பதால், அவர் களையும் அந்தவயஸுக்கு மேற்பட்டவர்களை யும் தடுக்காமல் 16-வயஸுக் குள்பட்டவர்க ளுக்கு மட்டும் சாராயம், கள் முதலிய குடி வகைகள் விற்பது சட்டத்துக்கு விரோத மென்று உத்தரவிட்டிருக்கிறார்கள்.

The Ladies' World.

ஸ்த்ரீகள் பகுதி.

SNEHALATA'S LETTER.

ஸ்நேஹலதாவின் கடிதம்.

சென்ற மாஸம் ஸ்நேஹலதா தேவி யென்னும் வங்காளத்துப் பெண் ஒருத்தி தன் கல்யாணத்துக்காக தனது தகப்பனார் தமது வீட்டை ஒற்றிவைக்க உத்தேசித்திருந்ததையும், அப்படி ஒற்றிவைத்தால் தனது தகப்பனார் நித்ய தரித்ரராய் இருக்க நேரிடு மென்பதையும் அறிந்து, அதற்கெல்லாங் காரணம் தான் தானே யென்றெண்ணி தனது தந்தைக்குக் கஷ்ட முண்டாகாமலிருக்க தனது உயிரை மாய்த்துக் கொண்டாள் என்று சென்ற மாஸத்து ஸஞ்சிகையில் தெரிவித்திருந்தோம். அவள் இறக்குமுன் தனது தந்தைக்கு ஒரு கடிதம் எழுதிவைத்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவள் எழுதியதாகச் சொல்லப்படும் அக்கடிதத்தின் மொழிபெயர்ப்பைக் கீழே தருகிறோம்.

“பெருமைதங்கிய பிதாவே, எனது கல்யாணத்துக்காக தாங்கள் வீட்டை ஒற்றிவைக்கப் போவதைப்பற்றி என்னால் நினைக்கவும் ஸகிக்க முடியவில்லை. நீங்கள் அப்படி வீட்டைக் கொதுவை வைக்கக்கூடாது. அப்படிச் செய்ய உங்களுக்கு அவச்யமும் நேராது. ஏனென்றால் நாளை ஸூர்யோதயமாகு முன்னால் தங்களுடைய துரத்ருஷ்டம் பிடித்த பெண்ணின் ஜீவனானது எப்போதும் ஸமாதானமுள்ள இடத்துக்குப் போய்ச் சேர்ந்திருக்கும்.

தாங்கள் என்னிடம் மிதமிஞ்சின அன்புடன் இருந்து வந்தீர்கள். எனது பெற்றோர்கள் காட்டிவந்த மிகுந்த அன்பினால் நான், ராஜகுமாரிகள் நினைக்கக்கூடிய பாக்யத்தை விட அதிகமாக அனுபவித்து விட்டேன். குடும்ப முழுவதையும் தெருவில் துரத்தித் தங்களை நித்ய தரித்ரராயும் ஸதா துக்கியாயும் இருக்கும்படி செய்ய நான் காரணமாயிருப்பதா தாங்கள் என்மீது காட்டிவந்த அன்புக்கு நான் செய்யும் ப்ரதியுபகாரம்?

முந்தாநாள் காலைமுதல் பகல் முழுவதும் வெளியில் அலைந்து திரிந்து பிற்பகலில் வெகு நேரம் கழித்து தாங்கள் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது நான் தங்கள் முகத்தைக் கண்டேன். தாங்கள் விசார ஸாகரத்தில் மூழ்கியிருப்பதைத் தங்கள் முகத்தில் கண்டறிந்தேன். தாங்கள் “எல்லாம் இழந்தேன்” என்று சொன்ன வார்த்தைகளைக் காதால் கேட்டேன். அது முதல் தங்களுடைய முகம் என் மனஸை விட்டு அகலவில்லை, அந்த வார்த்தைகள் இன்னும் காதில் சப்தித்துக் கொண்டிருக்கின்றன. பிறகு எனது கல்யாணத்துக்கு வேண்டிய பணத்துக்காக வீட்டை அடைமானம் வைப்பதாக உத்தேசித்திருக்கும் ஏற்பாட்டைப் பற்றிய விஷயங்களை யெல்லாம் கேட்டேன்.

அப்பா, அப்படிச் செய்வதை நான் ஸகியேன். கல்யாண மென்பது தங்களிடம் ஒரு பெரும்பாரமாக இருந்து வரும் என்னைப்பற்றிய கவலையை ஒழிப்பதற்கன்றி வேறு எனக்கு எதற்காக? எனக்கு இன்னம் கல்யாணமாக வில்லை யென்பதன் பொருட்டு நீங்கள் எவ்வளவோ அவமதிப்பை அடைந்து விட்டீர்கள். இன்னம் உங்களை ஜனங்கள் தூஷிக்க என்ன இருக்கிறது? எனக்குத் தகுந்த வரன் தேடுவதற்காக நீங்கள் செய்யாத முயற்சி இன்னம் என்ன இருக்கிறது? எல்லா முயற்சியும் வ்யர்த்தமாய் விட்டதே. இந்த எனது

முன்னோர்களின் வீட்டில் அன்யர்கள் காலெடுத்து வைக்கவும், அவர்கள் இங்கிருந்து பேசிப் புழங்கவும் நான் ஸம்மதியேன். கண்யம் வாய்ந்த பிதாவே, வரதக்ஷிணையென்னும் பிசாசத்துக்கு பலியாயிருக்கவேண்டியது நானேயன்றி நீங்களல்ல.

தந்தையே, பர்த்வான் வெள்ளத்தால் கஷ்டப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்காக அநேக தர்மசிந்தனையுள்ள வாலிபர்கள் முன் வந்தார்களென்று கேள்விப்பட்டிருக்கிறேன். கஷ்டப்படும் ஜனங்களிடத்தில் அவர்கள் அன்புகூர்ந்து உதவி செய்ய முயன்றதற்குக் கடவுள் அவர்களை ஆசீர்வதிப்பாராக.

இன்னும் அநேக சிறுவர்கள் அன்யதேசத்து ஸாமான்களை வாங்குவதில்லையென்று ப்ரதிக்ஞை செய்திருப்பதாகவும் கேள்விப்பட்டிருக்கிறேன். அன்றைக்குக் கூட அநேக வாலிபர்கள் தூரதேசமாகிய தென் ஆப்ரிக்காவில் கஷ்டப்படும் இந்தியர்களின் கஷ்டநிவர்த்திக்காக வீட்டுக்கு வீடுபோய்ப் பணம் சேகரித்து வந்ததைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அப்படியிருக்க தமது ஸொந்த ஜனங்களுக்காகப் பாடுபடுபவர் ஒருவரும் இல்லையா?

தந்தாய், நேற்று ஒரு ஸ்வப்னம் கண்டேன். அதனால் நான் ஒரு ப்ரதிக்ஞை செய்துகொள்ளும்படியாயிற்று. இதற்கு முன் கேட்டறியாத வாத்யகோஷத்துடன், இதற்குமுன் இந்த ப்ருத்வியில் கண்டிராத ஒரு ஜோதியின் மத்தியில் விளங்கிக் கொண்டிருந்த துர்க்காதேவியைக் கண்டேன். அவர் புன்சிரிப்பான முகத்துடன் என்னை பாக்யவந்தர்கள் வஸிக்கும்படியான மேலுலகத்துக்கு வரும்படி அழைத்தார். அப்போது தங்கள் முகமும், ஸதா துக்கமே குடிகொண்டிருக்கும் எனது தாயின் முகமும், சிறு குழந்தைகளின் முகமும் எனது ஞாபகத்துக்கு வந்தன. உடனே உங்களெல்லாரையும் கஷ்டத்திலிருந்து காப்பாற்றுவதாய்த் தீர்மானித்து தேவியோடு பின் தொடர்ந்து போவதாய் ப்ரதிக்ஞை செய்து கொண்டேன்.

நான் இறந்து போன பிறகு, அப்பா, நீங்கள் எனது சாம்பல்மீது கண்ணீர்விட்டுக் கரைப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். நான் இறந்துபோகிறேன். ஆனால் வீடு பிறர்வசமடையாமல் காப்பாற்றப்படும். அது முதல் நான் எப்படி உலகத்தை விட்டு நீங்குவது என்பதைப்பற்றி யோசித்து வந்தேன். நெருப்பா, ஜலமா, விஷமா என்று யோசித்தேன் கடைசியில் நெருப்பால் இறப்பதேசரியென்று தோன்றிற்று. நான் பற்றவைக்கும் நெருப்பானது தேசமுழுவதும் ஆவேசமுண்டாக்கும்படி செய்யட்டும்.

எனது அருமைத் தகப்பனாரே, போகிறேன். நான் போகுங்காலம் வந்து விட்டது. உலக முழுவதும் அயர்ந்து நித்ரை செய்கிறது. சீக்ரம் நான் விழிப்பென்பதேயில்லாத தூக்கத்தில் விழப் போகிறேன். ஒரு விநோதமானதும் இனிமையானதுமான உணர்ச்சி எனது மனதில் உண்டாயிருக்கிறது. மேலுலகத்தில எனது புது வீட்டில் அம்பாளின் பாதார விந்தங்களில், தங்கள் மடியில் தவழ்ந்து விளையாடினது போல், தவழ்ந்து விளையாடிக்கொண்டு தாங்களும் அன்னையும் வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன்.

தங்களுடைய நிர்ப்பாக்ய குமாரி,

ஸ்நேகலதா.

EXAMINATION OF HOROSCOPES.

ஜாதகப்பொருத்தம் பார்த்தல்.

விவாகத்துக்கு ஜாதகப் பொருத்தம் அவச்யமா என்பதைப்பற்றி ஒருவர் 'சுதேசமித்திர'னில் ஒரு நிருபம் எழுதியிருக்கிறார். ப்ராமணர்களுடைய விவாகத்தில் ஜாதகப் பொருத்தம்பார்த்துச் செய்கிற வழக்கம் ஸகஜமாயிருக்கிறது. அதிலும் பிள்ளை பெண்களுடைய ஜன்மலக்கினத்திற்கு 2, 4, 7, 8, 12- இந்த ஸ்தா

னங்களில் செவ்வாயிருந்தால், அதற்கு அங்காரக தோஷமென்று பெயரிட்டு, அந்தப்படி இருவருக்கும் ஸமதோஷமிருக்கவேண்டுமென்றும், ஒருவருக்கிருந்து ஒருவருக்கில்லாவிடில் அந்த ஜாதகங்களைச் சேர்க்கக் கூடாதென்றும், 7, 8, ஸ்தானங்களில் அங்காரக தோஷம் உக்ரமென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் தோஷமுள்ள அங்காரகன் குருவுடன் சேர்ந்தாவது குருவால் பார்க்கப்பட்டாவதிருந்தால் தோஷமில்லையென்றும் சொல்வதுண்டு. அங்காரகனைப்போல் பாபக்ரகமாகிய சனிக்கும் தோஷமுண்டு. ஆனால் அதை அதிகமாகப் பாராட்டுகிற வழக்கமில்லை. இக்காலத்தில் வரசுல்கம் என்கிற கெட்ட வழக்கம் அதிகரித்திருப்பதால் பெண்களுக்குத் தக்க வரன் கிடைப்பது கஷ்டமாகி, பொருத்தம் பாராமலே, "கிடைத்த வரன் போதும், எல்லாம விதிப்படி நடக்கும், அதைத்தடுக்க யாரால் முடியும்," என்று சிலர் விவாகம செய்யத்துணிந்து விட்டார்கள். சரியாய்ப் பொருத்தம் பார்த்து விவாகம் செய்த சில பெண்கள் சீக்ர வைதவ்ய மடைந்தும், பொருத்தம் பாராமலே துணிந்து விவாகம் செய்த அனேக தம்பதிகள் க்ஷேமகரமாயும் இருக்கிறார்கள். சில ஜோஸியர் வீட்டுப் பெண்கள் பாலவிதவைகளாக இருப்பதே இதற்கு ப்ரத்தியக்ஷ ருசுவாகும். ஆகையால் பொருத்தம் பாராமலே விவாகம் செய்வது நலமென்பது சிலருடைய அபிப்ராயம்.

விவாகத்திற்கு வலியன், கருடன் முதலிய பக்ஷி சகுனங்கள் பார்க்கிற ப்ராசீன வழக்கம் இக்காலத்தில் மிகவும் அரிது. மற்ற எல்லா விஷயங்களிலும் த்ருப்திகரமான ஒரு வரன் கிடைத்தால் பொருத்தமில்லையென்கிற ஒரு காரணத்திற்காக அதை விட்டுவிட யாருக்குத்தான் மனம் வரும்? விவாக நிமித்தம் தாய்தகப்பன் அனுகூல ஸஹோதரன் ஆகிய இம்மூவருடைய ஸம்மதமும் அவச்யந்தான். சில மூடர்கள் அத்தை, பாட்டி, மாமன், மைத்துனன், முதலிய பந்துக்கள் எல்லாரையும் கேட்டு, அதனால் புத்தி கலங்கி முடிவில் நல்ல ஸம்பந்தத்தை இழந்து விடுகிறார்கள். இக்காலத்தில் நல்ல வரன்கிடைப்பது கஷ்டமாக இருப்பதால், சிலர் வரனுடைய ஜாதகத்தைத் தந்த்ரமாகத் தெரிந்து கொண்டு, அதற்கு ஒத்திருக்கும்படி பெண் ஜாதகத்தை மாற்றி விடுகிறார்கள். சுமார் 30-வருஷகாலமாய் த்ருக் கணித மென்றும் வாக்ய மென்றும், பஞ்சாங்கங்கள் பலவிதமாய் வேறுபட்டிருப்பதால் அபத்த பஞ்சாங்கங்களைப் பார்த்து, கடியாரப்படி சரியான காலத்தை அறிய வகையில்லாமல், உத்தேசமாய்க் கணிக்கப்படுகிற இக்காலத்திய ஜாதகங்களை நம்பி, பொருத்தம் ஸரி யென்றாவது தப்பென்றாவது சொல்லமுடியாது.

விவாகவிஷயத்தில் அந்தநிருபாத முடிவான அபிப்ராயம் என்னவெனில், நல்லவரன் ஸுலபமாய்க் கிடைப்பது அரிதாயிருக்கிற இக்காலத்தில், கூடியமட்டில் மனஸுக்கு த்ருப்திகரமான வரனாவது பெண்ணாவது கிடைக்கும்பொழுது கோத்ரம் மட்டில் விசாரித்துக்கொண்டு ஜாதகப்பொருத்தம் பாராமல் அந்தவிவாகத்தைச்செய்து முடிக்கவேண்டிய தவச்யம்.

THE HAIR

தலை மயிர்.

தலை மயிர் ரொம்ப மருதுவானதாகையால் அது விஷயத்தில் ரொம்ப ஜாக்ரதை யெடுத்துக்கொள்ளவேண்டும். அஜாக்ரதையாயிருந்தால் தேகத்தின் மற்ற அவயவங்களைப் போலவே சீக்ரம் வ்யாதி பிடித்ததாக கெடுதலடைந்து அவலக்ஷணமடையும். ஒவ்வொரு ஸ்த்ரீயும் தமது குழந்தைகளின் பற்கள், தலைமயிர், தேகத்தின் நிறம், நகங்கள் ஆகிய இவைகளைப் பற்றி ரொம்ப கவலை எடுத்துக்கொள்ள

வேண்டும். அதிலும் பெண் குழந்தையாயிருந்தால் ரொம்ப கவனம செலுத்த வேண்டும் தினந்தோறும குழந்தைகளின் தலைமயிரை வாரிவரவேண்டியது ரொம்ப அவச்யம். சிறுவர், சிறுமிகள் தெருக்களில் ரொம்ப விளையாடி தேகத்தை அசுத்தமாக வைத்துக் கொள்வது இயல்பு. அவர்களின் தேகத்தை அடிக்கடி துடைத்து சுத்தமாய் வைத்திருப்பதோடு அவர்கள் தலை மயிரில் சேர்ந்திருக்கக்கூடிய தூசிகள், புழுதிகள் முதலியவைகளை நன்றாய் வாரி நீக்கவேண்டும். இல்லாவிட்டால் அவைகள் தலைமயிரின் வேரில் இருந்து மயிரின் வளர்ச்சிக்குத் தடை செய்து வரும்.

சிறுவர், சிறுமிகள் தங்கள் தலைமயிரை வாரிப்பின்னல் போட்டு எடுத்துக்கட்டியிருந்தாலுங்கூட, ஆறு, குளம், கால்வாய்களில் கண்ட ஸ்நாநம் செய்யும்போது அஜாக்ரதையாயிருப்பதால் அவர்களுடைய தலைமயிர் ஜலத்தில் நனைந்து போவதுண்டு. அவர்கள் தங்கள் கூந்தல் நனைந்து போயிருப்பதைப்பெற்றோர்களிடம் சொன்னால், ஜலத்தில் விளையாடினதற்காகவும், அஜாக்ரதையாய்க் குளித்ததற்காகவும் பெற்றோர்கள் தங்களைக் கண்டிப்பார்கள் என்று பயப்பட்டு அதைப்பற்றிச் சொல்லாமலே யிருந்து விடுகிறார்கள். இதனால் தலைமயிர் ஈரமாகவே யிருந்து சிக்குப்பிடித்துப் போய் விடுகிறது. இது விஷயத்திலும் தாய்மார்கள் கவனமாயிருக்கவேண்டும்.

RASAM.

ரஸம்.

ரஸம் மிளகுரஸம், சீரகரஸம், கொத்தமல்லிவிதைரஸம், வெந்தயரஸம், வேப்பம்பூரஸம், கண்டத்திப்பிலிரஸம், பூண்டுரஸம், பொரித்த புளியில்லாதரஸம், எலுமிச்சம்பழரஸம், பருப்புரஸம் எனப் பலவகைப்படும்.

சரீர நிலைமைக்குத் தக்கவாறு ரஸம் உபயோகிக்கத் தக்கதாயும், பல வ்யாதிகளை குணமாக்கக் கூடியதாயும் இருப்பதால், இது பல வகைப்பட்டு ஔஷத ரூபமான உணவாக உபயோகப்படுகிறது. மிளகுரஸம் வாதரோகத்தையும் குளிர்காய்ச்சலையும், சீரகரஸம் பித்த ரோகத்தையும் வயிற்றுக்கடுப்பையும், கொத்தமல்லிவிதை ரஸம் சரீர உஷ்ணத்தையும் அது ஸம்பந்தமான பித்தத்தையும், வெந்தய ரஸம் ஆரோக்யத்தையும், வேப்பம்பூரஸம் வாய்க்கசப்பு, சரீர இளைப்பு, இவைகளையும், கண்டத்திப்பிலி ரஸம் சரீரத்தில் வாயு, சீதளம் இவைகளினால் உண்டாகிய வலியையும், பூண்டுரஸம் கருப்பிணிகளுக்குண்டாகும் சரீர வலியையும், புளியில்லாரஸம் வாத ஜ்வரத்தையும், எலுமிச்சம்பழரஸம் பித்த நோய்களையும் நிவர்த்திசெய்யும். பருப்புரஸம் சரீரவலிமையுள்ளவர்களுக்கு ஆரோக்யத்தைக் கொடுக்கும்.

ரஸத்தில் உப்பு, புளி, காரம் இவ்வமூன்றும் ஒத்திருக்கவேண்டும். மிளகுரஸத்தில்மாத்ரம் மிளகுகாரம் அதிகரித்திருந்தால் சரீரத்துக்கு ஸௌகத்தைக்கொடுக்கும். ரஸத்தில் புளியாவது காரமாவது உப்பாவது அதிகப்படக்கூடாது.—'பெண் கல்வி'யில் மிஸ்ஸஸ் பலராமய்யர்.

SCHOLARSHIPS FOR WIDOW STUDENTS.

ப்ராமண விதவைகளுக்கு ஸ்காலர்ஷிப்புகள்.

சென்னை திருவல்லிக்கேணியிலுள்ள ஸத்ரீகள் ஸெகண்டரி ட்ரெய்னிங் ஸ்கூலைச்சேர்ந்த விதவைகளுடைய ஹோஸ்டலில் 20 ப்ராமண விதவைகளுக்கு ஸ்காலர்ஷிப்பு கொடுத்து வந்ததற்கு பதிலாக 30 ப்ராமண விதவைகளுக்கு ஸ்காலர் ஷிப்புக்கொடுக்கும்படி கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

POTATOES.

உருளைக்கிழங்கு.

ஜலத்தில் வேகவைத்த உருளைக்கிழங்கை விட சுட்ட உருளைக்கிழங்கில் அதிக போஷக சக்தியிருக்கிறது. உருளைக்கிழங்கு வருவல் லேசில் ஜீர்ணமாகாது.

Biography.
ஜீவ்ய சரித்ரம்.

Mr. V. P. MADHAVA RAO, B.A., C.I.E.

மிஸ்டர் வி. பி. மாதவராவ், பி. ஏ., ஸி. ஐ. இ.

தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த மிஸ்டர் மாதவராவ் சென்றமாஸம் பரோடா ஸமஸ்தானத்து திவானாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவருக்கு முன்னால் தஞ்சாவூர்ஜில்லா வாஸிகளாகிய ராஜா ஸர் டி. மாதவராவும், திவான் பகதூர் எஸ். ஸ்ரீநிவாஸராகவய்யங்காரும் அவ்வுத்யோகத்தை வகித்திருந்தார்கள். இப்படி மூன்று தஞ்சாவூர் ஜில்லாக்காரர்கள் பரோடாவுக்கு திவானாகப்போனது தஞ்சாவூருக்கு ஒரு கீர்த்தியாகும்.

மிஸ்டர் மாதவராவ் ஒரு மராட்டிய ப்ராமண வம்சத்தைச் சேர்ந்தவர். அவருடைய முன்னோர்கள் ஆதியில் வடக்கே ஸடாரா என்னும் பட்டணத்துக்கருகிலுள்ள புடான் என்னும்ஊரில் இருந்தவர்கள். மாதவராவ் 1850-ம் வருஷத்தில் கும்பகோணத்தில் ஜனனமானார். அவர் பிறந்த காலத்தில் அவருடைய குடும்பம் கஷ்டதசையிலிருந்தது. அவர் காலக்ரமத்தில் பள்ளிக்கூடத்தில் படித்து பி. ஏ. பரீக்ஷையில் தேறினார். கும்பகோணத்தில் க்யாதி பெற்ற ஆசிரியராகிய மிஸ்டர் போர்ட்டரிடம் அவர் கல்விபயின்றவர். மிஸ்டர்போர்ட்டருக்கு மாதவராவின் மேல் வெகு ப்ரீதி. மாதவராவின் கல்வியறிவைப்பற்றியும், அவருடைய உயர்ந்த குணாதிசயங்களைப்பற்றியும் மிஸ்டர் போர்ட்டர் வெகுவாய் ச்லாகித்துப் பேசுவாராம்.

மிஸ்டர் மாதவராவின் படிப்பு முடிந்ததும் அவர் ஒரு பள்ளிக்கூடத்தில் இங்க்லீஷ் உபாத்யாயராக அமர்ந்தார். கொஞ்ச காலத்துக்கெல்லாம் மைஸூர் ஸமஸ்தானத்தில் அவருக்கு ஒரு உத்யோகம் கிடைத்தது. அங்கு சில காலமிருந்த பிறகு மைஸூர் ராஜ வம்சப் பள்ளிக்கூடத்தில் ஒரு உபாத்யாயராகவும், பிறகு சில காலத்துக்கெல்லாம் அந்தப் பள்ளிக்கூடத்தின் ஹெட் மாஸ்டராகவும் நியமிக்கப் பட்டார். அப்போது அவருடைய அறிவும் ஸாமர்த்யமும் ப்ரபலமடையத் தொடங்கிற்று. அவருடைய ஸாமர்த்யத்தைக் கண்ட மைஸூர் கவர்ன்மெண்டார் அவரை பப்ளிக் ப்ராஸிக்யூடராகவும், பிறகு சில வருஷங்களுக்கெல்லாம் ஸப் ஜட்ஜாகவும் நியமித்தார்கள். பிறகு அவருக்கு ஷிமோகா டிவிஷன் டெபுடி கமிஷனர் வேலை கிடைத்தது. அந்த வேலையிலிருந்தபோது அவா ப்ரயாணிகளுக்காக அநேக பங்களாக்களும், முஸபர்க்கானாக்களும் கட்டினதோடு புதிதாக அநேக கிணறுகளும் கட்டுவித்து ஜனங்களிடம் மிகவும் அனுதாபமுள்ள ஆபிஸரென்று பெயர் வாங்கினார். பிறகு அவர் பங்களூருக்கு மாற்றப்பட்டு இன்ஸ்பெக்டர் ஜெனரல் அப் போலீஸாக நியமிக்கப்பட்டார். அந்த வேலையிலிருந்தபோது அவர் மைஸூர் போலீஸ் ஏற்பாட்டில் பல திருத்தங்கள் செய்து உயர்தரப்படிப்புப் படித்தவர்களும் போலீஸில் சேரவிருப்பங் கொள்ளும்படி அதை உயர்ந்த டிபார்ட்மெண்டாக்கினார். ஒரு உயர்ந்த போலீஸ் ட்ரெய்னிங்ஸ்கூலும் அவரால் ஸ்தாபிக்கப்பட்டது. மிஸ்டர் மாதவராவ் அந்த டிபார்ட்மெண்டை மிகவும் திறமையுடன் நிர்வகித்து வந்தார். அக்காலத்திலிருந்த ப்ரிட்டிஷ் ரெஸிடெண்ட் அவருடைய வேலையைப்பற்றி மிகவும் புகழ்ந்து ப்ரஸ்தாபித்திருக்கிறார். மைஸூரில் ப்ளேக்நோய் ஆரம்பித்தபோது அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளைக் கண்டு ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் 1900-ம் வருஷத்தில் அவ

ருக்கு ஸி. ஐ. இ பட்டமும், கேஸரி ஹிந்து தங்கப்பதக்கமும் கொடுத்தார்கள். மைஸூர் கவர்ன்மெண்டாரும் அவருக்கு 15,000ரூபாய் இனும் அளித்தார்கள். இதற்குப் பிறகு அவர் ரெவின்யு கமிஷனராகவும், ப்ரதம கௌன் ஸிலராகவும் வேலை பார்த்து வந்து மைஸூர் நிலச்சட்டத்தில் அநேக சீர்திருத்தங்கள் செய்து அது ஸம்பந்தமாக ரெவின்யூகோடு ஒன்று தயார்செய்து அதைச்சட்டமாகச் செய்தார். அந்தச் சட்டமேராளதுவரையில் அனுஷ்டானத்தில் இருந்து வருகிறது. 1904-ம் வருஷத்தில் அவர் திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் திவானக நியமிக்கப்பட்டார். அவர் அங்கு வேலைபார்த்தபோது ராஜாங்க நிர்வாகத்தில் பற்பல சீர்திருத்தங்கள் செய்து வந்தார். அவர் அந்த ஸமஸ்தானத்துக்குப் போகுமுன் அங்கே ராஜ்யமுழுவதும் ஸெட்டில் மெண்ட் செய்துகொண்டிருந்தார்கள். ஆனால் அதில் அனுஷ்டிக்கப்பட்டு வந்தவழி அதிக காலம் பிடிக்கக்கூடியதாயும், ஜனங்களுக்குத் தொந்தரை கொடுக்கக் கூடியதாயும் இருந்தது. மிஸ்டர் மாதவராவ் அது விஷயத்தில் கவனம் செலுத்தி ஒரு ஸுலபமான வழி தயாரித்துக் கொடுத்தார். அதனால் ஸெட்டில் மெண்ட் வேலை சீக்ரமாக நடந்து வந்ததோடு கவர்ன்மெண்டுக்கு வருஷா வருஷம் 12-லக்ஷம் ரூபாய் அதிக வரும்படி கிடைத்துவரக் காரணமாயிற்று. திருவாங்கூரில் ஜனங்கள் ஸர்க்காருக்குச் செலுத்த வேண்டிய வரியை விளைபொருள்களாகவே செலுத்தி வரவேண்டு மென்று சட்டமிருந்தது. இதனால் ஜனங்களுக்கு மிகவும் கஷ்டமாயிருந்து வந்தது. சில்லரை ரெவின்யூ அதிகாரிகள் ஜனங்களை ஹிம்ஸித்துக் கொள்ளையடித்து வந்தார்கள். மிஸ்டர் மாதவராவ் அந்த ஏற்பாட்டை மாற்றி வரியை எப்போதும் பணமாகவே கொடுக்க வேண்டுமென்று ஏற்படுத்தினர். ஜனங்களுடைய குறைகளையும் அபிப்ராயங்களையும் கவர்ன்மெண்டார் அறிந்து கொள்வதற்காக ஸ்ரீமூலம் ஜன ஸபை யென்ற ஒரு ஸபையை 1904-ம் வருஷம் அக்டோபர் மாஸத்தில் ஏற்படுத்தினர். இந்த ஸபையின் மெம்பர்கள் முதல் வருஷத்தில் கவர்ன்மெண்டால் நியமிக்கப்பட்டார்கள். இரண்டாவது வருஷம் முதல் அவர்கள் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டுவருகிறார்கள். திருவாங்கூரில் இரண்டு வருஷம் திவான் வேலை பார்த்த பிறகு 1906-ம் வருஷம் ஏப்ரல் மாஸத்தில் மறுபடியும் மைஸூருக்கு திவானக வேலை பார்க்கப்போனர். அங்கே ஒவ்வொரு டிபார்ட்மெண்டையும் சீர்திருத்த முயன்று ஸமஸ்தானத்தில் பணத்தட்டு சிறிதும் ஏற்படாதபடி செய்து வந்தார். அவர் செய்த சீர்திருத்தங்களில் முக்யமானவை, மைஸூர் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் ஏற்படுத்தினது; க்ராம உபாத்யாயர்களின் சம்பளத்தை உயர்த்தினது; மைஸூர் ஸிவில் ஸர்விஸ் ஏற்பாட்டை அனுஷ்டானத்துக் கொண்டுவந்து அதில் இந்தியாவிலுள்ளவர்கள் யாவரும் சேரத் தகுந்தவர்கள் என்று ஏற்படுத்தினது முதலியவைகளாகும்.

மிஸ்டர் வி. பி. மாதவராவ் மூன்று வருஷமே திவான் வேலைபார்த்து வந்தார் 1909-ம் வருஷம் ஏப்ரல் மாஸத்தில் மாஸம் 1250-ரூபாய் பென்ஷனுடு வேலையிலிருந்து விலகிக்கொண்டார். மிஸ்டர் மாதவராவ் மதாபிமானமுள்ளவர். பங்களூரில் ஸம்ஸ்க்ருத காலேஜ் ஸ்தாபிப்பதில் மிகவும் உதவியாயிருந்தார். அதில் வாசிப்பவர்கள் வஸிப்பதற்காக பத்து வீடுகள் கொண்ட ஒரு சிறு க்ராமம் கட்டிக் கொடுத்திருக்கிறர். அந்தக் காலேஜுக்கு மாஸந்தோறும் 125-ரூபாய் கொடுத்து வருகிறர். உத்யோகத்திலிருந்து விலகிக்கொண்டதும் சும்மா இராமல தேசக்ஷேமத்துக்கான விஷயங்களைப்பற்றி கவனித்து வருகிறர். அவர் பரோடாவில திவானக இருந்து தமது பெயர் இன்னும் ப்ரபல மடையும்படி செய்து தமது கீர்த்தியை நிலைநிறுத்துவாரென்று எண்ணுகிறோம்.

Short Stories.
சிறு கதைகள்.

DEVOTION TO GOD.
கடவுளிடத்து பக்தி.

ஒரு அரசனிடத்திலிருந்த ஒருமந்த்ரி தன்னுடைய வேலையை ராஜீநாமாக் கொடுத்துவிட்டுக் கடவுளுக்கு பணிவிடை செய்வதில் அமர்ந்து விட்டான். அரசன் தன்னிடமுள்ள ராஜாங்க உத்யோகஸ்தர்களை கூப்பிட்டு, மந்த்ரி என்ன செய்கிறார் என, அவர்கள், மந்த்ரி தன் உயர்ந்த நிலைமையைவிட்டு கடவுள் த்யானத்தில் ஆடித்திரிகிறார், என்றுரைக்கவே, அரசன் மந்த்ரியை வரவழைத்து "நான் உனக்கு என்ன அத்ருப்தி உண்டுபண்ணினேன்? அதற்காக இந்தவேலையைவிட்டுவிட்டாய்" என்று கேட்க, மந்த்ரி பின்வருமாறு மறுமொழி சொன்னான். "என் ப்ரியமுள்ள ப்ரஜாநாதனே, நான் ஐந்து காரணத்தை முன்னிட்டு இவ்வேலையிலிருந்து விலகிக் கொண்டேன். அவை என்னவெனில் (1) தாங்கள் உட்கார்ந்தும் தங்கள் முன்னிலையில் நான் நின்றும் ஸேவிக்க வேண்டியதாயிருந்தது. இப்பொழுது கடவுளை ஸேவிப்பதிலோ நான் உட்கார்ந்து ஈச்வராராதனம் செய்து வருகிறேன். (2) தாங்கள் சாப்பிடும் பொழுது நான் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க வேண்டியதாயிருந்தது. இப்பொழுதோ உலக ரட்சகரான கடவுள் தான் சாப்பிடாமலே எனக்கு அன்னமளிக்கிறார். (3) தாங்கள் தூங்குங்காலத்தில் நான் விழித்திருக்க வேண்டியதாயிருந்தது; இப்பொழுது அப்படியல்ல; நான் தூங்குங்காலத்தில் கடவுள் என்னைப்பாதுகாக்கிறார். (4) ஒரு ஸமயம்தாங்கள் முந்தி இறந்துவிட்டால் நான் பல துன்பங்களுக்கு ஆளாகி எதிரிகளான விரோதிகளிடமிருந்து கஷ்டங்களை யனுபவிக்கும்படி நேரிடுமே என்று பயந்திருந்தேன். ஆனால், கடவுளை ஸேவிப்பதில் அவா நித்யர்; சாவில்லாதவர்; சத்ருக்களின் கையிலும் காட்டிக் கொடார். (5) தங்களிடத்தில் நான் ஏதாவது ஒரு தப்பிதம் செய்துவிட்டால் அது எவ்விதமாக முடியுமோ என்றும், மன்னிப்பே கிடைக்காமல் போகுமோஎன்றும் பயந்திருந்தேன். கடவுளிடத்தில் அப்படி யல்ல. தினம் நான் நூறுதப்பிதம் செய்தபோதிலும் என்னை மன்னித்து அபயங் கொடுத்து ரட்சித்தருளும்படி அவ்வளவு இரக்க முள்ளவராக இருக்கிறார்."

LAWS OF HYGIENE.
ஸுகம் பேணும் முறை.

பாரஸீக தேசத்து அரசனொருவன் ஒரு தேர்ந்த ஸாமர்த்யமுள்ள வைத்யனை மகம்மது நபியிடம் அனுப்பினான். வைத்யன் அரேபியா நாட்டில் வெகு காலம் இருந்தும் இவன் வல்லமையை பார்க்கவாவது அல்லது வ்யாதிக்காக ஒரு தடவை இவனிடம் மருந்து வாங்கவாவது வந்தவா ஒருவருமில்லை. அப்படி யிருக்க இவ்வைத்யன் மகம்மது நபியிடம் சென்று, "நான் இங்கு வந்து வெகு நாளாகியும் என்னை ஒருவரும் கவனிப்பாரில்லையே. நான் இங்கு பிணிகளை நிவர்த்தி செய்யவல்லவோ அனுப்பப்பட்டேன். அப்படியே தேனும் ஸந்தர்ப்பம் நேரிட்டால் என் வைத்யத்தின் அருமையைக் காண்பிக்கலாம் என்று எண்ணி இருக்கிறேன்." என, அதற்கு மகம்மது நபி "நன்றாய்ப் பசியுண்டானாலொழிய சாப்பிடுகிறதில்லை யென்றும், நன்றாய் பசித்தவுடன் சாப்பிடாம லிருக்கிறதில்லை யென்றும், இவ்வூரில் எல்லா ஜனங்களும் ஒரே கட்டுப்பாடாகவும் விதியாகவும் வைத்துக் கொண்டிருக்கிறார்க"ளென்றார். இதைக்கேட்ட வைத்யர், இது தான் ஸுகம் பேணும்

மூறை என்றுசொல்லி தன்னை இன்னானென்று மற்றவர்களுக்கு தெரிவித்துக்கொள்ளாமலே ஸ்தலத்தை விட்டு நீங்க முயன்றாராம்.

GENEROSITY.

தயாளம்.

நற்கொடைக்கு பேர்போன அராபி நாட்டுக்குத் தலைவனான ஹாதிம் என்று ஒருவரிருந்தார். இவருடைய தர்ம சிந்தையும் தயாள குணத்தையும் அறிந்த சில வித்வான்கள் துருக்கி தேசத்து அரசனிடத்தில் இவரைப் பற்றி ஒரு ஸமயம் புகழ்ந்து பேசினார்கள். அரசன் இதைக்கேட்டு வியப்படைந்து இதைப் பரீக்ஷிக்கக் கருதி ஸமயம் பார்த்திருந்தார். அப்பொழுது ஹாதிம் இடத்தில் புகை நிறங்கொண்ட ஒரு குதிரை இருந்ததாகவும் அக்குதிரையைப்போல உலகத்தில் எக்குதிரையும் விரைவாய்ச் செல்லுவதில் பெயர் போனதில்லை என்றும், காற்றும் அக்குதிரையும பந்தயம் போட்டுக்கொண்டால் ஓடுவதில் காற்று சற்றுப் பிந்திவிடுமென்றும், கடல் மேல் மரக்கலம் போவதுபோல் கானகங்களில் சிறந்து செல்லுமென்றும், அதனிடத்தில் ஹாதிம என்பவருக்கு அதிக ப்ரியமென்றும் துருக்கி ஸுல்தான் கேள்வியுற்றார். உடனே துருக்கி அரசன் தன்னிடமுள்ள ஒரு சிறந்த வித்வானை பத்து மனிதருடன் சேர்த்து அக்குதிரையை ஹாதிம் தனக்கு இனாமாகக் கொடுப்பாரா என்பதைக் கேட்டு வரும்படி தூதாக அனுப்பினார். அத்தூதன் தன்னுடன் வந்த பத்து மனிதருடன் ஒரு நாள் காலையில் புறப்பட்டு கடுநடையாய் நடந்து அன்றிரவு ஹாதிம் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். வந்தவர்கள் ஹாதிமின் உபசரணையால் பசியாறிக் களைதீர்ந்து, பாரஸீகத்திலுள்ள இனிப்புக்குப் பேர்போன ஜிந்தா என்னும் நதியின் ஜலத்தைக் குடித்த ஒருவன் எப்படி தாகவிடாய் தீர்ந்து ஸுகம் பெறுவானோ அம்மாதிரி ஆறுதலடைந்து களிப்புற்று நித்ரை போனார்கள். விடியற் காலத்தில் அத்தூதன் தான் வந்த கார்யத்தின் கருத்தை வெளியிட்டு தனக்கு விடை கொடுத்தனுப்பவேண்டுமென்று ஹாதிமை வேண்டிக்கொள்ளவே, ஹாதிம் குடித்தவன்போல் மதிமயங்கி மனவருத்தமுற்று பற்களால் விரல்களைக் கடித்து, அத்தூதனைப்பார்த்து "படிப்பிலும் அறிவிலும் சிறந்த என கண்ணின் மணிபோன்ற என் அருமை நண்பரே, தங்கள் அரசன் என் குதிரையை விரும்புகிறாரென்பதை ஏன் நேற்றிரவே எனக்குத் தெரிவித்திருக்கக்கூடாது. தாங்களும் தங்கள் ஸ்நேகிதர்களும் நேற்றிரவு இங்கு வந்தவுடன் இருட்டதிகரித்தது மழையின் கொடுமையால் வெளியே போய் விருந்தினருக்கு வேண்டியவைகளை வாங்கிவரக் கூடாமற் போய்விட்டபடியால் அக்குதிரையை நான் கொன்று பக்வஞ் செய்து தங்களுக்கு போஜனஞ் செய்வித்துவிட்டேன். அநேகம் குதிரைகள் என்னிடமிருந்தபோதிலும் அக்காலம் எட்டியிருந்த லாயத்திற்குப் போனால் கால தாமஸம் ஆகிவிடுமென்ற பீதியினால் என்வீட்டிலிருந்த அக்குதிரையை கத்திக் கிரையாக்கினேன். அப்படி செய்யாமற்போனால் என் தயாளத்திற்கு குறைவு வருமென்று நான் எண்ணியபடியால் சிறந்த குதிரையைப் பார்க்கிலும் சிறந்த பெயரே பெரிது என்று எண்ணி கார்யம முடித்து விட்டேன். என்னிடம் வந்த விருந்தினர் பசியினால் வருந்தப் பார்க்க என மனம் இடம கொடாது" என்று சொல்லி அவர்களுக்கு வேண்டிய பொருளுதவியைச் செய்து ப்ரயாணத்துக்குத் தகுந்த அநேகம குதிரைகளையும் கொடுத்தனுப்பினான். நற்குணமெனபது இயற்கையால் கிடைப்பதே ஒழிய வழக்கத்தால் கைப்பற்றக் கூடியதல்ல. இச்செய்தியைத் துருக்கி அரசன் கேட்டு ஆனந்தக்கடலில் ஆழ்ந்துஹாதிமின் நற்குணத்திற்கு மெச்சி கடவுளினிடத்தில் ஹாதிமுக்கு மேன்மேலும் நன்மை பெருகவேண்டுமென்று ப்ரார்த்தனை செய்தார்.

Departmental Notes.

பகுதிக் குறிப்புகள்.

FUN AND ANECDOTE.

வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

PASSENGER AND PORTER.

ப்ரயாணியும போர்ட்டரும்.

திருச்சினுப்பள்ளி ஜங்க்ஷன் ஸ்டேஷனில் ஒரு பட்டிக்காட்டான் ரெயிலேறுவதற்கு வந்து தான் ஏறவேண்டிய வண்டி எது வென்பது தெரியாமல் அங்கு இருந்த ஒரு போர்ட்டரைப் பார்த்து "ஏய், போர்ட்டர், நான் எந்த வண்டியிலேறவேண்டும், சற்று தயவுசெய்து சொல்வாயா?" என்று கேட்டான். அதற்குப் போர்ட்டர் அவனை நோக்கி, "எந்த ஊருக்குப் போகவேண்டும்" என்று கேட்டான்.

"அதெல்லாம் நீ ஏன் கேட்கிறாய். நான் எந்த ஊருக்குப் போனாலென்ன!"

"எந்த ஊருக்குப் போகிறீர்கள் என்று சொல்லாவிட்டால் நான் எப்படி—"

"அதெல்லாம் நான் உன்னிடம் சொல்லமுடியாது. நீ போ, நான் வேறு யாரையாவது கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டு சிறிது தூரம் சென்று வேறு ஒரு போர்ட்டரைப் பார்த்து முன்மாதிரியே கேட்டான். அந்தப் போர்ட்டரும், "எந்த ஊருக்குப் போகிறீர்கள்" என்று கேட்டான்.

உடனே பட்டிக்காட்டானுக்கு கோபம் வந்து விட்டது: "நீ என்ன சுத்த அதிகப்ரஸங்கியா யிருக்கிறாய். நான் எங்கே போகிறேன் என்பதை உன்னிடம் சொல்லுவானேன்?" என்றுசொல்லி இன்னொரு போர்ட்டரிடம்போய் அதே கேள்வியைக் கேட்டான். அந்தப் போர்ட்டரும் மற்ற இருவர்களைப்போலவே, "எந்த ஊருக்குப் போகிறீர்கள் ?', என்று கேட்டான். பட்டிக்காட்டான் எல்லா போர்ட்டர்களும் ஒரேவிதமாய்ச் சொல்லுவதைப் பார்த்து "நான் எந்த ஊருக்குப் போகிறேன் என்பது தெரியவேண்டுமா? சரி, நான் பட்டணம் போகிறேன்." என்றான். அதன்மேல் போர்ட்டர் அவனை மதராஸுக்குப் போகும் வண்டியில் ஏற்றிவிட்டான். வண்டிநகர்ந்தவுடன் அந்தப் பட்டிக்காட்டான் ஜன்னல் வழியாய் வெளியி லெட்டிப்பார்த்துப் போர்ட்டரை நோக்கி "போர்ட்டர், உன்னை ஏமாற்றிவிட்டேன், பார்த்தாயா! நான் பட்டணத்துக்குப் போகவில்லை. திண்டுக்கல்லுக்காக்கும் போகிறேன்!" என்றான்.

AN IRISHMAN'S FIRST VISIT TO INDIA.

புதிதாய் இந்தியாவுக்கு வந்த ஐரிஷ்காரன்.

இரண்டு ஐரிஷ்காரர்கள் அதாவது அயர்லண்ட் தேசவாஸிகள் புதிதாக இந்தியாவுக்கு வந்தபோது, வந்தவன்று இரவில் படுத்துத் தூங்க எண்ணி கொசுக்கடி அதிகமாயிருப்பதைப் பார்த்து, போர்வையைப் போட்டு நன்றாய் மூடிக்கொண்டு படுத்துக்கொண்டார்கள். கொஞ்ச நேரமானதும் ஒருவன் மூச்சுவிட முடியாமல் திகைத்து முகத்தில் மூடியிருந்த போர்வையைச் சற்று விலக்கி வெளியிலெட்டிப் பாரத்தான். அங்கு அறையில் ஒரு மினுமினுப் பூச்சி பறந்து கொண்டிருப்பதைப் பார்த்து பயந்து மற்றவனைத் தட்டி எழுப்பி, "பெர்கஸ், பெர்கஸ், (மற்றவன் பெயர்) போர்த்துப் படுத்துக்கொள்வதும் ப்ரயோஜனமில்லை, இதற்குப்போர்த்துக் கொள்ளாமலே படுத்துக் கொள்ளலாம். இதோ பார், ஒரு கொசு லாந்தலெடுத்துக்கொண்டு நம்மைத் தேடுகிறது!" என்றானாம்!

CURIOSITIES.
விநோதங்கள்.

AN APE IN AN ÆROPLANE.
ஆகாயக் கப்பலில் ப்ரயாணம் செய்த குரங்கு.

ஸமீபத்தில் ஒரு ஜர்மென் ராணுவ உத்யோகஸ்தர் ஆகாயக் கப்பலொன்றில் ப்ரயாணம் செய்தபோது அவர் தாம் வளர்த்து வரும் கொரில்லா என்னும் வாலில்லாக்குரங்கையும் ஏற்றிக்கொண்டு போனாராம். அந்தக் குரங்கைக் கப்பலில் கட்ட அது முதலில் இடங்கொடுக்க வில்லையாம். ஆயினும் அதைப் பல விதத்தில் ஸமாதானப்படுத்தி ஏற்றிக் கொண்டு போனார். கப்பலில் ப்ரயாணம் செய்தபோது அது கூச்சலிட்டு நடுங்கிற்றும். ப்ரயாணம் முடிந்து கப்பல் பூமிக்கு வந்து சேர்ந்த போது குரங்கு பயத்தால் கைகால் ஸ்வாதீனமில்லாமல் போய் அது இருந்த விடத்திலிருந்து இறங்க முடியாமல் தவித்தது. அதை ஒருவர் கீழே இறக்கிவிட வேண்டியிருந்ததாம்.

GRAFTING TAILS UPON FISH.
மீனுக்கு வால்கள் ஒட்டுக்கட்டுதல்.

ஜப்பானியர்கள் மீனுக்கு வால்களை ஒட்டுக்கட்டுவதில் நிபுணர்களாம். மீன்களுக்கு 4-முதல் 6 - வால் வரையில் ஒட்டுக்கட்டுவார்களாம். கோல்ட்பிஷ் என்னும மீன் ஜாதியில் சிலவற்றிற்கு இரண்டு மூன்று வால்கள் இருக்கும். அப்படிப்பட்ட மீன்களை ஜலத்தில் பத்ரமாய் உயிரோடு காப்பாற்றிவைப்பார்கள். அவைகளில் ஒட்டுக்கட்டவேண்டிய மீனை தெரிந்தெடுத்துக் கொண்டு, வேறு சிறுமீன்களின் வால்களைத்தரித்து அதில் ஒட்டுக்கட்டி விடுவார்களாம்.

MEN PULLING THE PLOUGH.
மனிதர்கள் ஏரையிழுத்தல்.

சீனாவில் சில இடங்களில் நிலத்தை உழ மனிதர்கள் மாட்டுக்கு பதிலாக ஏரை இழுக்கிறார்களாம். ஒரு ஏரை இரண்டுபேர் சேர்ந்து இழுப்பார்களாம். அவர்கள் உழும் படைச்சால் 6-அங்குலம் அகலமுள்ளதாம். ஒரு ஏக்கர் உழ நிலத்தின் நெடுக 400 தடவை நுகப்பையை இழுத்துச் செல்வார்களாம்.

A CURIOUS FISH.
ஒரு விநோதமான மீன்.

அமெரிக்காவிலுள்ள ந்யூயார்க்கின் ம்யூஸியத்தில் ஒரு விநோதமான மீன் இருக்கிறது. அது ஆறுமாஸகாலம் ஜலத்திற்குள்ளிராமல் ஜலத்துக்கு வெளியிலே வஸித்து வந்திருக்கிறதாம்.

PAPER BUILDING.
கடுதாசியால் ஒரு கட்டிடம்.

பாரிஸ் பட்டணத்தில் 60,000 ரூபாய் செலவழித்து கெட்டியான கடுதாசியினால் ஒரு பெரிய கட்டிடம் கட்டியிருக்கிறார்களாம்.

THIRTY-TWO BROTHERS.
முப்பத்திரண்டு ஸகோதரர்கள்.

ஸமீபத்தில் இங்க்லண்டில் இறந்து போன மிஸ்ஸஸ் ஜான் ஸ்மித் என்னும் 84-வயதுள்ள ஸ்த்ரீக்கு 32 ஸகோதரர்கள் பிறந்திருந்தார்களாம. இவருடைய தகப்பனார், லெப்டினண்ட் ஜேம்ஸ் ரோபர் என்பவர் ட்ராபால்கர் சண்டையில் யுத்தம் செய்தவராம், அவருக்கு இரண்டு மனைவிகளிருந்தார்கள். முதல் மனைவிக்கு 16 பிள்ளைகளும், இரண்டாவது மனைவிக்கு 16-பிள்ளைகளும ஒரு பெண்ணும் பிறந்தார்களாம். இந்தப்பெண்தான் மிஸ்ஸஸ் ஜான் ஸ்மித் என்பவர்.

THE SNEEZING TREE.
தும்மல் மரம்.

தென் ஆப்ரிக்காவில் தும்மல் மரம் என்றொரு மரமிருக்கிறது, அதை வெட்டும்போது அதிலிருந்து விழும்படியான தூள் மிகவும் காரமுடையதாயிருப்பதால் அதை வெட்டுபவர்கள் தும்மிக்கொண்டே யிருப்பார்களாம்.

HINTS AND RECIPES.

யுக்திகளும் முறைகளும்.

KEROSINE OIL

கெரோஸின் எண்ணெய்.

கடியாரம், கைகடியாரம், தையல் யந்த்ரம், துப்பாக்கிகள், பூட்டுகள், டைப்ரைட்டர்கள், முதலியவைகளை சுத்தம் செய்வதற்கு கெரோஸின் எண்ணெய் ரொம்ப உபயோகமுள்ளது. இவைகளின் பாகங்களை கெரோஸின் எண்ணெயில் சற்றுநேரம் வைத்திருந்தால், அவைகளிலுள்ள அழுக்கு, தூசி முதலியவைகள் விட்டுப்போகின்றன. சுத்தம் செய்த பிறகு அந்த எண்ணெயைச் சற்றுநேரம் அப்படியே வைத்திருந்தால் தூசி அழுக்குகள் எல்லாம் எண்ணெயின் அடியில் தங்கிவிடும். தெளிவான எண்ணெயை ஒரு ஸீஸாவில் ஊற்றிவைத்துக்கொண்டு மறுபடியும் சுத்தம் செய்வதற்கு உபயோகித்துக் கொள்ளலாம். கடியாரம் முதலியவைகளில் ஏற்கனவே இருந்திருக்கக்கூடிய எண்ணெய்ப் பசை இந்தக் கெரோஸின் எண்ணெயில் சேர்ந்திருக்குமாதலால் இது விளக்கெரிக்க உதவாது.

CANDLE STAINS ON CLOTHES.

துணிகளில் மெழுகுவர்த்திக் கறை.

மெழுகு வர்த்தியானது எரிந்து கொண்டிருக்கும்போது அதிலிருந்து எண்ணெய் உருகி சில ஸமயங்களில் துணிகளில் விழுவதுண்டு. விழுந்தவுடன் எண்ணெய் கெட்டியாய்ப் போகிறது. அதைக் கத்தியால் சுரண்டுவது கூடாது. எண்ணெய் பட்ட பாகத்தின் மேல் ஒரு சுத்தமான ப்ளாட்டிங் பேபர் (மையொற்றும் கடுதாசியை) வைத்து அந்தக் கடுதாசியின்மேல் பழுக்கக் காய்ச்சின இருப்பை வேகமாய் ஒரு தடவை இழுக்கவும். இப்படி இரண்டுதடவை செய்தால் துணியிலுள்ள கறை விட்டுப்போகும். கொஞ்சம் வைன் சாராயத்தை கறைபட்ட விடத்தில் ஊற்றி நன்றாய்த் தேய்த்தாலும் கறை விட்டுப்போகும்.

A NEW USE FOR NEWSPAPERS.

ஸமாசாரப் பத்ரிகைகளுக்கு ஒரு புதிய உபயோகம்.

துணிகளைப் பூச்சிகள் அரித்துக் கெடுத்து விடாதபடி காப்பதற்கு ஸமாசாரப் பத்ரிகைகள் ரொம்ப உபயோகமானதென்று சொல்லப்படுகிறது. இனிப்படி உபயோகத்துக்கு வேண்டியிராத வஸ்த்ரங்கள் உடுப்புகள் முதலியவைகளை ஸமாசாரப் பத்ரிகைகளில் வைத்துச்சுற்றி ஓரங்களில் சந்து ஏற்படாதபடி, வைத்யர்கள் சூர்ணம் மடிப்பதுபோல் கடிதாசியின் ஓரங்களை முதலில் ஒருதரம் மடித்து, மடித்த ஓரங்களை மறுபடியும் மடித்து ஆக இப்படி இரண்டு தடவை மடித்து வைத்து விட்டால் அதற்குள் பூச்சிகள் போய்த் துணிகளைக் கெடுக்க முடியாது.

TO REMOVE STAIN.

கறைகளைப் போக்க.

லினன் துணிகளில் காப்பி, தேயிலை, பழங்கள் முதலியவைகளின் கறைபட்டு விட்டால் குளிர்ந்த ஜலத்தில் சிறிது வெண்காரத்தைக் கலந்து அதில் துணிகளை நனைத்து வைக்கவும். பிறகு துணிகளைத் துவைப்பதற்கு முன்னால் கறைகளில் கொதிக்கும் ஜலத்தை ஊற்றிக் கசக்கினால் கறைகள் விட்டுப்போகும்.

A NEW CEMENT.

ஒரு புது ஸிமெண்டு.

துருக்கியில் ஒரு நூதன ஸிமெண்டு உபயோகிக்கிறார்களாம். இது தாளித்த சுண்ணாம்பு, ஆளிவிதை யெண்ணெய், பருத்தி ஆகிய இவைகளால் செய்யப்படுகிறது முதலில் பருத்தியில் ஆளிவிதை யெண்ணெயை ஊற்றி அதை நனைத்து அதன்மேல் சுண்ணாம்புத் தூளைத்தூவி நன்றாய்ப் பிசைய வேண்டும். எவ்வளவுக்கு நன்றாய்ப் பிசைகிறோமோ அவ்வளவு நல்லது. இந்த ஸிமெண்டு நன்றாய் வேலைக்கு உதவுகிறதாம்.

TAMIL LITERATURE.

தமிழ்க் கல்வி.

IMPROVEMENT OF TAMIL LANGUAGE.

தமிழ் பாஷையின் அபிவ்ருத்தி.

சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இந்தியன் எடியூகேஷன் கௌன்ஸில் ஸெகண்டரி ஸ்கூல்களில் தேசபாஷை முக்யமாய் உபயோகப்பட வேண்டுமென்றும், ஆங்கிலத்தை ஒரு தனிப் பாஷையாய்க் கற்கவேண்டுமென்றும் ஒரு சுற்றுக் கடிதமெழுதி ப்ரசுரித்திருக்கிறார்கள். அதாவது ஸெகண்டரி ஸ்கூல்களில் எந்தப் பாடங்கள் சொல்லி வைத்தாலும் அப்படிச் சொல்லிவைப்பதில் பிள்ளைகளின் தாய் பாஷையை உபயோகப்படுத்தவேண்டும். கணக்கு, சரித்ரம், பூகோளம் முதலிய பாடங்கள் சொல்லி வைத்தாலுங்கூட, வாத்தியார் போதனை செய்வதில் தமிழ் பாஷையை உபயோகிக்கவேண்டும். இங்க்லீஷ் பாஷையை ஸம்ஸ்க்ருத பாஷையைப்போல் ஒரு தனி பாஷையாய்க் கற்கவேண்டுமேயல்லது, அந்த பாஷையையே பிள்ளைகளுக்குத் தாய் பாஷையாய்க் கருதி அதிலேயே வாத்தியார் சொல்லுவதும் கேட்பதுமாயிருக்கக்கூடாது. இங்க்லீஷ் ராஜ பாஷையாயிருப்பதாலும், மேல் நாட்டுக் கல்வியைக் கற்பதற்கு ஒரு ஸாதனமாயிருப்பதாலும், உத்யோகங்கள் தொழில் முதலியவைகளில் அந்த பாஷை உபயோகப்படுமாகையாலும், இங்க்லீஷ் கற்பதை அசட்டை செய்யக் கூடாது. ஆனால் இங்க்லீஷ் கற்பதற்காக தாய் பாஷையை பிள்ளைகள் இப்போது அவமதித்து கேவலம் வாலிபப் பருவத்திலேயே அதைப் பேசுவதிலும் எழுதுவதிலும் இங்க்லீஷ் வார்த்தைகளைக் கலந்து சுத்தமான தமிழ் எழுதவாவது பேசவாவது சக்தி யற்றுப் போகிறார்கள். இந்த ஜனங்கள் நாகரிகம் பெற்று, அவர்கள் பாஷை புஷ்டியும் விசாலமும் பெற வேண்டுமானால் மேல்திசைக் கருத்துக்கள் இந்தியர் மனதில் தாராளமாய்ப் புக வேண்டும். இந்தக்கருத்துக்களைத்தேசபாஷையில் பெயர்த்தெழுதி ஜனங்களுக்குப்போதிக்க வேண்டும். இப்படிச் செய்வதற்கு இந்தியர்கள் கீழ்த்தர ஸ்கூல்களில் தெரிந்து கொள்ளும் தமிழ் மட்டும் போதாது. ஸெகண்டரி ஸ்கூல்களில் உயர்ந்த தமிழும் சிறிது கற்க வேண்டும். மேலும், ஜனங்களில் பெரும்பான்மையோர்க்கு ஆங்கில பாஷையிலுள் ளடங்கியிருக்கும் கருத்துக்கள் மறைவாயிருக்கின்றன. இந்தக் கருத்துக்களை அறிந்த படித்த வகுப்பார் பெரும்பான்மையான ஜனங்களுடன் அனுதாப மில்லாமல் ஒதுங்கிவஸிக்கிறார்கள். இவைகளன்றிப் பாடங்கள் தமிழ்ப்பாஷையில் சொல்லப்படும்போது, அது தாய்ப் பாஷையானதால் பிள்ளைகள் எளிதாய் க்ரஹித்துக் கொள்வார்கள். அன்ய பாஷையில் சொல்லப்பட்டால் இது ஸாத்யமல்ல. ஸெகண்டரி ஸ்கூல்களில் தமிழ் பாஷை இப்படி உபயோகிக்கப்படுமானால் அன்ய பாஷையிலுள்ள சாஸ்த்ரச்சொற்களும் தொழில் சொற்களும் தமிழில்கலந்து ஜனங்களுக்குப் பழக்கமாகிவிடும். அறியாத ஜனங்கள் கூட இந்தச் சொற்களைத் தெரிந்து கொண்டு உபயோகப்படுத்துவார்கள். தமிழ்ப்பாஷையை இவ்வாறு கௌரவப்படுத்துவதால் ஜனங்கள் அந்தபாஷை மூலமாய் ஐரோப்பிய பாஷைகளிலுள்ள கருத்துக்களை அறியக் காரண முண்டாகி தற்காலத்தில் தேசத்தில் வெள்ளம்போல் பாய்ந்து வரும் அன்ய தேசத்துக் கருத்துக்கள் ஆங்கிலம் கற்ற இந்தியருக்கு மட்டும் தெரிந்தவைகளாயிராமல் ஸாமான்ய ஜனங்களுக்கும் தெரிந்தவைகளாய், ஜனங்களின் புத்தியும், ஞானமும், புதுமையில் விருப்பமும் உயரும்.—சுதேசமித்திரன்.

MISCELLANEOUS NEWS.

நாநா ஸங்கதி.

THE STEEL SOLDIER.

உருக்குப் போர்வீரன்.

யுத்தகளத்தில் நிறுத்திவைப்பதால் நாம் வேண்டுகிற படியெல்லாம் துப்பாக்கிசுடும் விநோத உருக்குப் போர்வீரப் பதுமை யொன்று ஸமீபத்தில் டென்மார்க்கிலுள்ள இஞ்ஜினியர் ஒருவரால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தப்பதுமையை ஒரு ஸைன்யம் உபயோகிக்கு மானால் அதற்கு யுத்தத்தில் ஸாதாரணமாக நேரிடும் அபாயங்கள் ஒன்றும் நேரிடாதாம். ஒரு பெரியஉருக்குக் குழாய்க்குள் ஒரு சிறிய உருக்குக்குழாய் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதை யுத்தக்களத்தில் அமைத்துவிட்டு தூரத்திலிருந்து கொண்டு தந்திக் கம்பியில்லா மின்ஸாரத்தால் வெடி சுடும்படி செய்து விட்டால், அதில் உள்ள சிறு குழாய் 5-அடி உயரம் உயர்ந்து 400-குண்டு வரையில் சுடுமாம். பதுமை இருக்குமிடத்துக்கு 5-மைல் தூரத்துக்கப்பால் இருந்து கொண்டும் சுடும்படி செய்யலாமாம். ஏதாவது ஒரு இடத்தைக் காக்கவேண்டுமானால் இந்தப்பதுமைகளை வைத்துவிட்டால் எந்த தைரியமான காலாட்படையாலும் அந்த இடத்தைப் பிடிக்க முடியாமல் போகுமாம். எதிரிகள் இந்த பதுமைகள் சுடுவதைநிறுத்த வேண்டுமென்று விரும்பினால் ஒவ்வொருஉருக்குப் பதுமையையும் நாசமாக்க வேண்டும். யுத்தகளத்தில் அப்படிச் செய்வது ரொம்ப ச்ரமமான கார்யமாகும்.

'F'RAYS.

எப் ரேஸ் என்னும் ஒரு நூதன கிரணம்.

ஸீனர் உலிவி என்னும் இட்டலி தேசத்து சாஸ்த்ரி ஒரு நூதன கிரணம் கண்டுபிடித்திருக்கிறார். அதைக்கொண்டு தூரத்திலுள்ள கப்பல்களை நாசம் செய்துவிடலாம். இந்த கிரணத்தைத் தயார்செய்யும் யந்த்ரத்தையும் முறையையும் அவர் ஏதாவது ஒரு ஐரோப்பிய கவர்ன்மெண்டுக்கு விற்றுவிட யோசித்திருந்தார். ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அதைப் பரீக்ஷித்துப் பார்த்து தங்களுக்கு வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். இட்டலி தேசத்து கவர்ன்மெண்டார் அதைப் பரீக்ஷித்துப் பார்த்து விலைக்கு வாங்கிவிட்டார்கள்.

THE KAMINIA OIL AND CALENDARS.

காமினியா தைலமும் காலண்டர்களும்.

காமினியா தைலம் விற்றுவரும் மெஸர்ஸ் ஆங்க்லோ இண்டியன் ட்ரக் அண்ட் கெமிகல் கம்பெனியார் நமக்கு காமினியா தைலத்தின் மாதிரிப்புட்டியும், இரண்டு பெரிய படங்களுள்ள காலண்டர்களும், இரண்டு நேர்த்தியான பாக்கெட் முகம் பார்க்கும் கண்ணாடிகளும், பெரிய அழகான படம் ஒன்றும், சில சிறிய காலண்டர்களும் அனுப்பியிருக்கிறார்கள். அவைகள் மிகவும் நேர்த்தியாயிருக்கின்றன. அவைகளை நமக்கு அனுப்பினதற்கு நாம் அவர்களுக்கு வந்தனம் செலுத்துகிறோம்.

A BIG NOVEL.

ஒரு பெரிய கதைப் புஸ்தகம்.

உலகத்திலுள்ள கதைப்புஸ்தகங்களெல்லாவற்றிலும்மிகப்பெரியது ஜப்பானில்கியாங்டே பாகின் என்பவரால் எழுதப்பட்டது. அவர் 1852-ம் வருஷத்தில் அதை எழுத ஆரம்பித்தாராம். அந்த நாவல் மொத்தம் 106 தனிப் புஸ்தகங்கள் (வால்யூம்) கொண்டது. அதன் கடைசி வால்யூம் சென்ற வருஷந்தான் வெளியாக்கப்பட்டது. ஒவ்வொரு புஸ்தகத்திலும் சராசரி 1000 பக்கமும் ஒரு பக்கத்தில் 30 வரியும், ஒரு வரிக்கு 10 வார்த்தையும், இருக்கவாம். ஆகவே, அந்த 'நாவலில்' 1,06,000 பக்கங்களும், 31,80,000 வரிகளும், 3,81,00,000 வார்த்தைகளும் இருக்கின்றன. அதன் நிறை 130 ராத்தலாகும். நாளது வரையில் யாரும் அதை மொழி பெயர்க்க முன் வரவில்லையாம்.

DIARY OF THE MONTH.

மாஸ வர்த்தமானம்.

INDIAN NEWS.

இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

பிப்ரவரி ீ 17-தேதி.

வரதக்ஷிணை:—இன்று கல்கத்தாவில் கூடின ஒரு மீட்டிங்கில் அநேக வாலிபர்கள் வரதக்ஷிணை வாங்குவதில்லை யென்று சபதம் செய்தார்கள்.

18-தேதி.

கவர்னரின் சுற்று ப்ரயாணம்:—இன்றையதினம் மதுரையில் சென்னை கவர்னருக்கு மதுரை முனிஸிபாலிடியாரும், மதுரை ஜில்லா போர்டாரும், ராமனுதபுரம் ஜில்லா போர்டாரும், மதுரை பீபிள்ஸ் ஸங்கத்தாரும் அட்ரெஸுகள் வாசித்துக் கொடுத்தார்கள்.

வீடு சோதனைகள்:—ஒரு ராஜத்துரோகத் துண்டுப் பத்ரிகை விஷயமாக லாகூரில் அநேக வீடுகள் சோதனை செய்யப்பட்டன. கல்கத்தாவிலும் அநேக பாகங்களில் வீடுகள் சோதிக்கப்பட்டன. டெல்லியில் போலீஸார் பல வீடுகளைச் சோதித்து இரண்டு பேரை கைது செய்திருக்கிறார்கள். இவர்கள் ஒரு வெடிகுண்டுக் கேஸில் ஸம்பந்தப்பட்டவர்களாம்.

20-தேதி.

பரோடாவில் கோவாபரேஷன்:—பரோடா ஸமஸ்தானத்து கோவாபரெடிவ் கான்பரென்ஸ் இன்று ஆரம்பமாயிற்று. பரோடா ராஜாவாகிய கெய்க்வார் தமது ஆரம்ப ப்ரஸங்கத்தில் கோவாபரேஷனுடைய நன்மைகளைப் பற்றிப் பேசினார்.

21-தேதி.

சித்தூர் ஜில்லா கான்பரென்ஸ்:—இரண்டாவது சித்தூர் ஜில்லா கான்பரென்ஸ் இன்று மதனபல்லியில் கூடிற்று. ஆனரபிள் ர்ாவ்பகதூர் வி. கே. ராமானுஜாசார்யார் ப்ரெஸிடெண்டாக இருந்து, கிலவிஷயம், ஸெட்டில்மெண்டு முதலிய விஷயங்களைப் பற்றிப் பேசினார்

வீடு சோதனை:—லாகூரில் டி. ஏ. வி. காலேஜ் ப்ரின்ஸ்பாலாயிருந்த லாலா ஹான்ஸ்ராஜின் வீட்டை இன்று போலீஸார் சோதனை போட்டார்கள். எம். ஏ. வகுப்பில் வாசிக்கும் அவருடைய மகனையும், இன்னொரு எம். ஏ. மாணவரையும் போலீஸார் கைது செய்திருக்கிறார்கள்.

நேபாலின் ப்ரதம மந்த்ரி:—நேபாலின் ப்ரதம மந்த்ரியாயிருந்த மகாராஜா தேவ ஷாம்ஷீயர் ஜங் மஸ்ஸூரியில் இறந்துபோய் விட்டதாகத் தெரிகிறது.

22-தேதி.

கண்ணம்பாடித்தேக்கம்:—ப்ரெஞ்ச் இந்தியாவின் ப்ரதிநிதியாக பாரிஸில இருக்கும் மான்ஷர் ப்ளுஸேன், கண்ணம்பாடித் தேக்கத்தால் காரைக்கால் ஜலவஸதி பாதிக்கப்படுகிற தென்று சொல்லி, இது விஷயமாய் ப்ரான்ஸும் இங்லண்டும் பேச்சுகள் தொடங்கவேண்டுமென்று ப்ரயத்தனம் செய்து வருகிறார்.

24-தேதி.

இந்தியா லங்கை இருப்புப்பாதை:—இந்த இருப்புப்பாதை இன்றையதினம் சென்னை கவர்னரால் திறக்கப்பட்டது. இலங்கை கவர்னர் ஸர் ராபர்ட் சாமர்ஸும் புதுச்சேரி கவர்னரும் விஜயஞ் செய்திருந்தார்கள். சென்னையிலுள்ள கவர்ன்மெண்டு உத்யோகஸ்தர்களிற் சிலரும் ப்ரமுகர்கள் சிலரும் தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியாரின் விருந்தினராக அங்கு வந்திருந்தார்கள். லங்கையிலிருந்தும் சிலர்வந்திருந்தார்கள், தென்னிந்தியரெயில்வே

கம்பெனியின் மானேஜிங் டிரெக்டரான மிஸ்டர் ப்ரீஸ்ட்லி இந்தியா லங்கை இருப்புப்பாதை ஸம்பந்தமான சரித்ரத்தை விவரித்துக்கூறி ஒரு அட்ரெஸ் வாசித்தார்.

25-தேதி.

ராஜ ப்ரதிமைகளைக் கெடுத்து விட்டது:—கோலாபூர் ஸமஸ்தானத்தில் கோலாபூரில் திவான் ஆபீஸுக்குப் பக்கத்திலுள்ள ஒரு பூந்தோட்டத்தில் வைக்கப்பட்டிருக்கும் எட்வர்ட் அரசர், அலெக்ஸாண்ட்ரா ராணி ஆகிய இவர்களுடைய உருவச் சிலையில் யாரோ ஒருவன் தாரை ஊற்றி அவலக்ஷணமாக்கிவிட்டான். போலீஸார் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

உஷ்ண ப்ரதேச வைத்யம்:—இன்று பங்காளத்து கவர்னர் கல்கத்தாவில் புதிதாக ஏற்படுத்தப்படும் உஷ்ண ப்ரதேச வைத்ய பள்ளிக்கூடத்தின் அஸ்திவாரக்கல்லை நாட்டினார்.

27-தேதி.

ஒரு வேடிமருந்து விபத்து:-வடக்கே கோண்டால் போர்பந்தர் ரெயில்வேயிலுள்ள ஜேதல்ஸார் யார்ட் ஜங்க்ஷன் ஸ்டேஷனில் ஒருவண்டியில் வைத்திருந்த வெடி மருந்துப் பீப்பாய்களில் மருந்து பற்றிக்கொண்டு வெடித்தது. அருகிலிருந்த 3-மனிதர்கள் அதனால் இறந்து போனார்கள். சில வண்டிகள் நாச மடைந்தன.

வீடு சோதனைகள்:—டெல்லி அராஜகஸதியாலோசனையைக் கண்டுபிடிக்கும் விஷயமாய், எல்லா மாகாணங்களிலும் வீடு சோதனைகள் செய்து வருகிறார்கள். மாகாண போலீஸ் டிபார்ட்மெண்டுகளின தலைவர்களெல்லாம் ஸமீபத்தில் கூடி இந்த அராஜக் கிளர்ச்சியைத் தடுக்க என்ன செய்வதென்பதைப் பற்றி ஆலோசித்தார்கள். இதுவரையில் டெல்லியில் 5-பேரும் மற்ற விடங்களில் 4- பேரும் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்.

28-தேதி.

திருக்காட்டுப்பள்ளியில் கோவாபரேஷன்:—திருக்காட்டுப்பள்ளி கோவாபரேடிவ் ஸங்கத்தின் வருஷாந்தரக் கொண்டாட்டம் இன்று நடைபெற்றது. ஆனரபிள் ராவ்பகதூர் வி. கே. ராமானுஜாசாரியார் ப்ரெஸிடெண்டாக இருந்தார். 'விவஸாயத்தில் கோவாபரேஷன்', 'கோவாபரேஷனும் தேசத்தின் க்ஷேமமும்' ஆகிய இவைகளைப்பற்றி ப்ரஸங்கங்கள் செய்யப்பட்டன.'

மோட்டார் ஸைகிள் பந்தயம்:—கல்கத்தாவிலிருந்து கயாவுக்கு மோடார் ஸைகிளில் யார் சீக்ரம் போகிறார் என்றறிவதற்காக ஒரு பந்தயம் இன்று நடத்தப் பட்டது. 22- பேர் போட்டி போட்டார்கள். பந்தயத்தில் முதலாக ஜயித்தவா 7-மணி 19-நிமிஷம் 36-ஸெகண்டில் 268-மைல் தூரம் போனார். ஒருவர் நடுவழியில் ஒரு ரெயில்வே கேட்டில் மோதிக்கொண்டு தொடை முறிந்து போய்க் கடைசியில் இறந்துபோய்விட்டார். இன்னம் மூன்றுபேருக்கு வேறு விபத்துகள் நேர்ந்தன.

மார்ச்சுமீ 1-தேதி.

ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர்:—ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸரின் 79-வது பிறந்தநாள் இன்று மைலாப்பூரிலுள்ள ராமக்ருஷ்ண மடத்தில் கொண்டாடப்பட்டது. அதற்காகக் கூடின ஒரு மீட்டிங்கில் திவான் பகதூர் பி. ராஜ ரத்ன முதலியார் ராமக்ருஷ்ணரின் உபதேசங்களைப் பற்றி ப்ரஸங்கம் செய்தார்.

2-தேதி.

பச்சையப்பன் காலேஜ்.—இன்றைய தினம் பச்சையப்பன் காலேஜின் பரிசளிப்புக் கொண்டாட்டம் நடைபெற்றது. பச்சையப்பன் காலேஜை மாணவர்கள் கட்டிடத்திலேயே தங்கி வாசிக்கும் காலேஜாக மாற்றுவதாக ட்ரஸ்டிகளுக்கு உத்தேசமிருக்கிற தென்று

அந்த ஸமயம் தெரிவிக்கப்பட்டது. ஆனரபிள் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் வெகுமதி களை மாணவர்களுக்கு எடுத்துக்கொடுத்து ப்ரஸங்கம் செய்தார்.

3-தேதி.

தூத்துக்குடியில் கவர்னர்:—இன்றையதினம் தூத்துக்குடி முனிஸிபாலிடியும், தூத்துக்குடி வ்யாபாரஸங்கமும் சென்னைக் கவர்னருக்கு அட்ரெஸுகள் வாசித்துக் கொடுத்தார்கள்.

5-தேதி.

பயோனீர்-பாங்கி:—பம்பாயில் சில காலமாக லேவாதேவியை நிறுத்தியிருந்த பயோனீர் பாங்கி மறுபடியும் தொழிலாரம்பித்து விட்டது.

வரதக்ஷிணைக் கொடுமை:—ஸ்நேக லதாவைப் போலவே இன்னொரு பெண்ணும் வரதக்ஷிணையின் கொடுமைக்கு ஆளானதென்று தெரிய வருகிறது. வங்காளத்தில் போக்ராவின் ஜாயிண்ட் ஸப் ரெஜிஸ்ட்ராரினுடைய 15-வயதுப் பெண் தன்னுடைய புருஷனும் மாமனும் கேட்கும் அதீதமான தொகையைக் கொடுக்க தன் தகப்பனுக்கு சக்தி யில்லாமலிருப்பதை யறிந்து வருத்தப்பட்டு தனது தேகத்தில் நெருப்புப் பற்றவைத்துக்கொண்டு இறந்து போனாள்.

6-தேதி:—

சென்னை கவர்னர்:—தென்ஜில்லாவுக்குச் சுற்றுப்ரயாணம் செய்யப்போயிருந்த எச். இ. சென்னை கவர்னர் இன்று சென்னைக்குத் திரும்பிவந்து சேர்ந்தார்.

புதிய இந்திய ஸேனாதிபதி:—புதிய இந்திய ஸேனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் ஜெனரல் ஸர் பூச்சாம்ப் டப் இன்று பம்பாயில் வந்திறங்கினார்.

7-தேதி.

ஸிலோனில் இந்திய கூலிகள்:—ஸிலோனில் ப்ளேக் பரவி யிருப்பதால், கட்டாயப்படுத்தி ப்ளேக்குக்கு அம்மை குத்துவார்கள் என்று பயந்து இந்திய கூலிகள் இந்தியாவுக்குத் திரும்பி வந்துகொண் டிருக்கிறார்கள். சென்ற மூன்று நாட்களுக்குள் 2653-பேர் திரும்பி வந்துவிட்டார்கள். ஸிலோன் கவர்ன்மெண்டார், அம்மை குத்திக்கொள்ள இஷ்டப்படாதவர்களுக்குக் கட்டாயப்படுத்தி அம்மை குத்துவதில்லை யென்று ஜனங்களுக்கு பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

மிஸ்டர் கோகலே:—மிஸ்டர் கோகலே சற்று தேகஸௌக மடைந்திருக்கிறார். இன்று பம்பாயிலிருந்து இங்கிலண்டுக்குப் புறப்பட்டுப் போய் விட்டார்.

ஸர் ஓமூர் க்ரீ:—இந்திய ஸேனாதிபதியாயிருந்த ஸர் ஓமூர் க்ரீ இன்று இங்கிலண்டுக்கு ப்ரயாணமானார்.

கம்மவார் கான்பரேன்ஸ்:-நான்காவது கம்மவார் கான்பரென்ஸ் இன்று கபிலேச்வரத்தில் கூடிற்று. திருநெல்வேலி ஜில்லா குருவிகுளம் ஜமீன்தார் அக்ராஸனாதிபதியாயிருந்து கல்வி, கல்யாண விஷயம், ரோடுஸெஸ் முதலிய விஷயங்களைப்பற்றிப் பேசினார்.

ஓங்கோல் கால்நடைக் காட்சி:—இன்றைய தினம பத்தாவது ஓங்கோல் கால்நடைக்காட்சியானது குண்டூர்ஜில்லா கால்நடைக் காட்சி ஸங்கத்தின் ஆதரவில் நடை பெற்றது. ஆனரபிள் மிஸ்டர். பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் காட்சியைத் திறந்துவைத்துப் பேசினார்,

8-தேதி.

'பாம்பே கெஜட்':—1791-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டதும், இந்தியாவில் மிகவும் பழமையான பத்ரிகையுமான பம்பாயில் ப்ரசுரமாகும் 'பாம்பே கெஜட்'டை நிறுத்திவிடுவதாக அந்தப் பத்திரிகையின் டிரெக்டர்கள் இன்று தீர்மானித்தார்கள். இன்று வெளிவந்த பத்ரிகைதான் அதன் கடைசி ஸஞ்சிகையாகும்.

9-தேதி.

ஸர் பூச்சாம் டப்:—இந்திய சேனைதிபதியாக நியமிக்கப் பட்டிருக்கும் ஸர் பூச்சாம் டப் இன்று டெல்லிக்குப் போய்ச் சேர்ந்தார்.

10-தேதி.

கடல் ப்ரயாணம்:—இன்று கல்கத்தாவில் ஸுமார் 300-ப்ராமண பண்டிதர்கள் ஒரு ஸபையில் கூடி கடல் யாத்ரைசெய்த ப்ராமணர்களை ஒழிந்து ஸமூகத்தில் சேர்த்துக் கொள்வதைப் பற்றி ஆலோசித்தார்கள். வங்காளம், ஒரிஸா, ஆஸாம், காசி முதலிய இடங்களிலிருந்து பண்டிதர்கள் வந்திருந்தார்கள். கடல் யாத்ரை செய்தவர்கள் ப்ராயச்சித்தம் செய்துகொண்டாலும் அவர்களுடன் வ்யாபார நடவடிக்கைகள் வைத்துக் கொள்ளலாமே யொழிய மற்ற விஷயங்களுக்கு அவர்களை ஒழிந்து ஸமூகத்தில் சேர்த்துக் கொள்ளக் கூடாதென்று அந்த ஸபையில் தீர்மானிக்கப் பட்டது.

11-தேதி.

வீடு சோதனைகள்:—இந்தூரில் எல்லா இந்திய ஜெயின் கல்வி ஸங்கத்தின் டிரெக்டராகிய பண்டித அர்ஜுனலால் ஸேத்தின் வீட்டையும், அவருடைய சிஷ்யரும் இந்தூரிலுள்ள ஜெய்ன் ஹைஸ்கூலின் ப்ரின்ஸ்பலுமாகிய த்ரிலோக சந்த்ராவின் வீட்டையும் போலீஸார் சோதனை போட்டார்கள். சில கடிதங்களைப் போலீஸார் எடுத்துக்கொண்டு இருவரையும் டெல்லிக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

12-தேதி.

ஒரு விருந்துக் கச்சேரி.—பம்பாய் முனிஸிபாலிடியார் இன்று பம்பாய் கவர்னருக்கு ஒரு விருந்துக் கச்சேரி வைத்து உபசரித்தார்கள்.

FOREIGN NEWS.

அந்ய நாட்டு ஸமாசாரங்கள்.

பிப்ரவரி ௴ 16-தேதி.

பால்கன் விஷயம்.—க்ரீஸும் ரொமானியாவும் ஸெர்வியாவும் ஒன்றொடொன்று ஸமாதானத்துக்காக ஒத்துப் போயிருக்கின்றன.

க்ரீஸ் கவர்ன்மெண்டார் கப்பல் படையை சீக்ரம் அதிகப்படுத்த யோசனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

புதிய இந்திய உதவிஸெக்ரேடரி.—பார்லிமெண்டில் மெம்பராயிருந்து வரும் மிஸ்டர் சார்லஸ் ஹென்ரி ராபர்ட்ஸ் என்பவர் இந்திய உதவி ஸெக்ரெடரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பெல்ஜியம் தேசத்து அரசர்:—பெல்ஜியம் தேசத்து ஆல்பர்ட் அரசர் இன்று காலையில் குதிரை ஸவாரி போகையில் குதிரை கல் தடுக்கிக் கீழே விழுந்துவிட்டது. அரசருடைய இடது புஜம் முறிந்துபோய்விட்டது.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்:—இன்று ரெவரண்ட் ஸி. எப். ஆண்ட்ரூஸ் கேப் டௌனில் பலப்ரமுகர்கள் கூடியிருந்த ஒரு மீட்டிங்கில் டாக்டர் ரபீந்த்ரநாத் டாகூரைப்பற்றி ஒரு ப்ரஸங்கம் செய்தார். லார்ட் க்ளாட்ஸ்டன் ப்ரஸங்கத்தின் முடிவில் தென்னாப்ரிக்கா வாஸிகள் இந்தியர்களைப் பற்றியும் அவர்களுடைய ஸாமர்த்யங்களைப் பற்றியும் இன்னம் அதிகமாக அறிய முயல வேண்டுமென்றும், பல தென்னாப்ரிக்கா வாஸிகள் இந்தியாவுக்குப் போய் இந்தியாவைப்பற்றிய விஷயங்களை நேரில் கண்டறிய முயலவேண்டுமென்றும் சொன்னார். 18-தேதி.

துருக்கியர்களுக்கு உதவி:—க்ரீஸைச் சேர்ந்த த்ரேஸ் மாகாணத்தில் அநாதைகளாயிருக்கும் துருக்கியர்களின் உதவிக்காக லேடி ஹார்டிஞ்ஜ் 1000-ருபாய் நன்கொடை யளித்திருக்கிறார்.

ஆல்பானியா:—ஆல்பானியா தேசத்து அரசராகிய வில்லியம் ராஜகுமாரர் இன்று ஜார்ஜ் அரசரையும் மேரி ராணியையும் போய்க்கண்டு அவர்களுடன் சிற்றுண்டி சாப்பிட்டார். அவர் இங்க்லீஷ் அன்ய மந்த்ரியாகிய ஸர் எட்வர்ட் க்ரேயினுடன் ராஜ்ய விஷயங்களைப் பற்றிப் பேசினர். வில்லியம் ராஜகுமாரருக்கு ஜி. ஸி. வி. ஓ. பட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு ஸ்த்ரீ ஸ்வதந்த்ரவாதியின் அக்ரமம்:—இன்று லண்டனில் ஒரு ப்ரபுவின் கல்யாணத்துக்குப் போவதற்காகரெயில்வே ஸ்டேஷனுக்குப் போய்க் கொண்டிருந்த லார்ட் வீர்டேலை ஒரு ஸ்த்ரீ ஸ்வதந்தரவாதி சவுக்கால் அடித்து எதிர்த்தாள். ஸ்திரீ ஸ்வதந்தரவாதி கைது செய்யப் பட்டிருக்கிறுள். ப்ரிட்டிஷ் ப்ரதாம மந்திரியாகிய மிஸ்டர் ஆஸ்க்வித் என்று எண்ணி அவரை அந்த ஸ்வதந்தரவாதி தாக்கினளாம்.

22-தேதி

அல்பானியா:—அல்பானியா அரசரை அழைத்துவரச் சென்ற எஸ்ஸட் பாஷா டெபுடேஷனை வில்லியம் ராஜகுமாரர் வரவேற்று அல்பானியா ராஜ்யத்தை ஏற்றுக்கொண்டார்.

24-தேதி.

லார்ட் மிண்டோ:—லார்ட் மிண்டோ சற்று பலவீனமா யிருக்கிறுர்.

26-தேதி.

மிஸஸ் பாங்கர்ஸ்ட்:—ஸ்த்ரீ ஸ்வதந்த்ரவாதிகளின் விருப்பங்களை யறிந்துகொள்வதற்காக அவர்களிடமிருந்து ஒரு டெபுடேஷனை அரசர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மிஸ்ஸஸ் பாங்கர்ஸ்ட் ஜார்ஜ் அரசருக்கு ஒரு கடிதம் எழுதி யிருக்கிறுர்.

27-தேதி.

துருக்கியும் க்ரீஸும்:—துருக்கியர் தமக்குக் கிடைத்திருக்கும் தீவுகளில் இரண்டுக்கு பதிலாக க்ரீஸினிடமிருந்து வேறு தீவுகள் பெறுவதற்காக க்ரீஸைக் கேட்டதில் வல்லரசுகள் செய்த ஏற்பாட்டிற்கு விரோதமாக ஒன்றும் செய்வதற்கில்லை யென்று க்ரீஸ் பதில் சொல்லி விட்டது.

27-தேதி.

சீனு:—சீனக்குடியரசின் ப்ரஸிடெண்டாகிய யுவான்-ஷி-கேக்கு ரொம்ப வேண்டியவரும் அவருக்கு ரொம்ப உதவியாயிருந்தவருமான சே பிங் சன் என்பவர் 26-தேதி யன்று அஜீர்ணமடைந்து இன்றுபிற்பகலில் இறந்துபோய் விட்டார். அவருக்கு யாராவது விஷம் வைத்துவிட்டார்களோ என்று ஸந்தேகிக்கிறுர்கள்.

28-தேதி.

எஸ்ஸட் பாஷா:—அல்பானிய அரசரை அழைத்துவரப் புறப்பட்ட எஸ்ஸட் பாஷா டெபுடேஷன் இன்று ஆஸ்ட்ரியா தேசத்து சக்ரவர்த்தியைக் கண்டு கொண்டார்கள். சக்ரவர்த்தி தமது பேச்சில் ஆல்பானியர்கள் ஒற்றுமையடைந்து விட்டபடியால் அல்பானியா நல்ல ஸ்திதியடையுமென்று சொன்னுர்.

மார்ச்சுமீ 1-தேதி.

காலஞ்சென்ற லார்ட் மிண்டோ.—இந்தியாவின் கவர்னர் ஜெனரலாயிருந்த லார்ட் மிண்டோ இன்று இறந்து போனுர்.

3-தேதி.

காலஞ்சென்ற லார்ட் மிண்டோ.—லார்ட் மிண்டோ இறந்துபோனதைக் குறித்துத்தாங் கள்விஸனப்படுவதாக ஜார்ஜ் அரசரும், மேரி ராணியும், அலெக்ஸாண்ட்ரா ராணியும், மற்ற ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் லேடி மிண்டோவுக்குத் தெரிவித்திருக்கிறுர்கள்.

5-தேதி.

ட்ரிப்போலி.—ட்ரிப்போலியின் ஒரு பாகமாகிய பெஸ்ஸான் ப்ரதேசத்துக்கு ராஜதானிப்பட்டணமாகிய மர்ஜக்கை இட்டாலிய

ஸைன்யங்கள் கைப்பற்றி விட்டன. பெஸ்ஸரான் முழுவதும் இட்டாலி தேசத்துக்குக் கீழ்ப்பட்டு விட்டதென்பதாக ஒரு விளம்பரப் பத்ரிகை இட்டலியின் ப்ரதிநிதியால் வாசிக்கப்பட்டது

7-தேதி.

அல்பானிய அரசர்.—அல்பானியாவின் அரசராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் வியட் ராஜகுமாரரும், ராஜகுமாரியும் இன்று டுர்ராஸோவுக்கு வந்துசேர்ந்தார்கள்.

9-தேதி.

ஸ்த்ரீ ஸ்வதந்தரவாதிகள்.—ஸ்த்ரீ ஸ்வதந்தரவாதிகளின் டெபுடேஷன் ஒன்று அரசரைப் பார்க்க அநுமதிவேண்டுமென்று கேட்டதற்கு அரசர் அநுமதி கொடுக்க மறுத்து விட்டார்.

11-தேதி.

'வால்டர்ஜே' விபத்து.—வால்டர்ஜே கப்பல் விபத்தில் உதவி செய்தவர்களுக்கு ஜார்ஜ் அரசர் 228 மெடல்கள் கொடுத்திருக்கிறார்.

மொம்பாஸாவில் இந்தியர்கள்.—கிழ் ஆப்ரிக்காவில் மொம்பாஸாவிலுள்ள இந்தியர்களின காங்க்ரெஸ் ஸபையின் மீட்டிங் கொன்றில் இந்தியர்களுக்கு ஸமமான ஸ்வதந்தரங்கள் வேண்டுமென்றும், இந்தியர்களை கவர்ன்மெண்டார் மற்றவர்களோடு ஸமத்வமாய் நடத்தவேண்டுமென்றும் ஒரு தீர்மானம் செய்தார்கள். மேலும் கவர்னருடைய ஸபையில் ஒரு இந்தியரும் இல்லாமலிருப்பதை கவர்னருக்குத் தெரிவிப்பதாயும் உத்தேசித்திருக்கிறார்கள்.

12-தேதி.

லண்டன் 'டைம்ஸ்' பத்ரிகை.—லண்டன் டைம்ஸ் பத்ரிகை இனி எப்போதும் 1-அணாவாக விற்கப்படுமென்று தெரிகிறது. இதற்கு முன் இது ப்ரதியொன்று இரண்டணாவாக விற்கப்பட்டு வந்தது.

SEASON.

கால ஸ்திதி.

Rainfall.

மழை.—1913௵ ஏப்ரல்மீ 1உயிலிருந்து 1914௵ மார்ச்சுமீ 26உவரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் சராசரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	47·28	44·80
வால்டேர்	35·70	37·17
காக்கிநாடா	36·45	39·04
மசூலிப்பட்டணம்	31·53	39·97
நெல்லூர்	30·41	34·92
மதராஸ்	65·99	49·47
கடலூர்	96·76	50·89
நாகபட்டணம்	85·12	53·52
பாம்பன்	41·26	37·19
கொழும்பு	69·07	83·82
திருவநந்தபுரம்	62·44	62·76
கொச்சி	97·48	112·48
கள்ளிக்கோட்டை	111·58	116·38
மங்களூர்	110·25	127·02
மெர்க்காரா	109·22	126·72
ஐதராபாத்	18·91	31·78
பல்லாரி	15·11	19·98
கர்நூல்	17·84	26·92
கடப்பை	23·75	31·61
ஹாஸ்ஸான்	25·84	35·76
பெங்களூர்	21·47	35·44
கொடைக்கானல்	53·95	60·85
உதகமண்டலம்	44·71	55·91
கோயம்புத்தூர்	15·21	22·04
வேலூர்	23·93	45·29
சேலம்	31·30	40·04
திருச்சிநாப்பள்ளி	33·25	32·78
புதுக்கோட்டை	38·15	33·34
மதுரை	16·18	34·20
திருநெல்வேலி	35·12	27·07

Calendar—பஞ்சாங்கம்

அம்ருதாதி.	லக்னபாக்கி நா வி	அகர்மாந நா வி	துலு உ	இஸ் உ	தமி உ	வா	48-ஆனந்தஞுசித்திரைமீ-உத்தராயணம்-வஸந்தருது { கொல்லம்-1089 பஸலி-1323 { இங்கிலீஷ் - 1914 ஏப்ரல்-மேமீ } ஹிஜரி-1332 ஜமாதிலவல்-ஜமாதிலஸானி
யோகம்.							[மேஷசூன்யதி, வியசிரா, அவம, சங்கடசதுர்த்தி, ஸமார்க்கம்
சி	4 34	30 34	16	13	1	தி	த்ரி-5-7, உப-53-0, அனு-49-35, விய-47-20, பவ-31-26, தி-3-54, மேஷரவி-14-7, விஷுவத்புண்யகால,
உஅ	25	35	17	14	2	செ	பஞ்-52-48,கேட்-45-54,வரீ-39-55,கவு25-15,தி-2-36,மேஷபஞ்சமீதி,வராஹஜயந்தி, (ரங்கூனில் அவம)
மஅ	16	36	18	15	3	பு	ஷஷ்-49-24,மூல-44-4, பரி-33-59,கர 20-51,தி-5-5,ரா-9-32
சி	7	38	19	16	4	வி	ஸப்-48-6,பூரா-44-19,சிவ-29-44,பத்-18-30,தி-7-56,
சிம	3 59	40	20	17	5	வெ	அஷ்-48-53,உரா-16-36,சித்-27-8,பால-18-15,தி-4-52,ரா-26-32,காலாஷ்டமீ
சி	50	41	21	18	6	ச	நவ-51-36,திரு-50-47,சாத்-26-7,தை-20-2,சே-1-8,சிரவணஉப,கரிநாள்
மசி	41	42	22	19	7	ஞா	தச-55-57,அவி-56-33,சுப-26-28,வணி-23-36,தி-1-40, { பிருக்அப்பர்சுவாமி }
சி	32	44	23	20	8	தி	ஏகா-60-0,சத-60-0,சுப்-27-55,பவ-28-38,தி-16-33,ரிஷபாயன-55-32-திரிதினஸ்
ம	23	45	24	21	9	செ	ஏகா-1-33,சத-3-30,பிரா-30-6,கவு34-38,தி-21-29,ஸர்வஏகா
அசி	15	46	25	22	10	பு	த்வா-7-51,பூட்-11-7,மா-32-41,கர-41-8,ரா-7-29,பிரதோஷ,மத்ஸ்யஜயந்தி
சி	6	48	26	23	11	வி	த்ர-14-27,உட்-19-0,வை-35-24,பத்-47-44,ரா22-9,சதுர்த்தசீதி,வைசிரா,மாஸசிவரா
அ	2 57	49	27	24	12	வெ	சசி-20-58,ரே-26-48,வஷ்-37-59,சது-54-6,அதிதி,போதாயனஅமா,சிவஸ்நானம்,இராமா
சி	48	50	28	25	13	ச	●-27-7,அசு-34-13,பரீ-40-14,நாக,27-7,தி-23-1,அமாதி,பிண்டபிதிரு,திவாமா [சிறுத்தொண்டர்
பிசி	39	52	29	26	14	ஞா	ப்ர-32-42,பர-41-4,ஆயு-42-2,கிம்-0-0,தி-1-3,வைசாகசுத்த,இஷ்டி,சந்திரதர்சன(சிரமம்)சந்திராஸ்தம் இரவு-2-2
மஅ	31	53	1	27	15	தி	த்வி-37-33,கிரு-47-13,ஸவு-43-17,பால-5-14,தி-14-15,கிருத்திகை, கரிநாள்
அசி	22	54	2	28	16	செ	த்ரி-41-32,ரோ-52-32,சோ-43-51,தை-9-40,தி-30-52, அக்ஷயதிர்தியை, கிருதயுகாதி,சல்பாதி,பலராமஜயந்தி,
சி	13	55	3	29	17	பு	சது-44-30,மிரு-56-49,அதி-43-40,வணி-13-10,தி-7-38,சதுர்த்திவிரு, [மங்கையர்க்கரசி
ம	4	57	4	30	18	வி	பஞ்-46-20, திரு-60-0, சுக 42-35, பவ-15-34, தி-19-4, லாவண்யகௌரீவிரு, ஸ்ரீசங்கரபகவத்பாதாள் அவதார
சி	1 55	30 58	5	1	19	வெ	ஷஷ்-46-54,திரு- -1, திரு-40-32,கவு-16-48,ரா-0-12,ஷஷ்டியுபவாஸம் [திதி, விறன்மிண்டர்
சி	47	31 0	6	2	20	ச	ஸப்-46-2,புன-1-55,சூல-37-22,கர-16-40,தி-22-14,கங்கோத்பத்தி
சி	38	1	7	3	21	ஞா	அஷ்-43-40,பூச-2-24,கண்-33-0,பத்-15-3,ரா-3-2, அக்னிநாளாரம்ப-46-4,
சிமசி	29	2	8	4	22	தி	நவ-39-45,ஆயி-1-23,உப-57-27,விரு-27-25,பால-11-55,தி-30-17,
சிஅ	20	3	9	5	23	செ	தச-34-19,பூர-54-50,துரு-20-35,தை-7-13,தி-17-39,
அம	11	4	10	6	24	பு	ஏகா-27-33,உத்-49-34,வியா-12-37,வணி-1-6,பவ-53-43,தி-11-23,ஏகாதசீதி,ஸர்வஏகா
சி	3	5	11	7	25	வி	த்வா-19-40,ஹஸ்-43-18,ஹர்-3-41,உப-50-17,கவு-45-24,தி-8-29,திதித்வய,பிரதோஷ,உமாபதிசிவாசாரியார்
சி	0 54	7	12	8	26	வெ	த்ர-10-58,சித-36-28,வஜ்ர-18-47,கர-36-26,தி-1-3,ரா-17-38,சதுர்த்தசீதி,நரஸிம்மஜயந்தி,இசைஞானியார்
அசி	45	8	13	9	27	ச	சசி-1-51,உப-○-50-52,சுவா-29-14,விய-33-28,பத்-27-15,ரா-10-29,வியசிரா,சித்ராபூர்ணிமை,வைசாகஸ்நான பூர்த்தி, அவம,திருக்குறிப்புத்தொண்டர்
உம	36	9	14	10	28	ஞா	ப்ர-44-1,விசா-22-20,வரீ-23-23,பால-18-18,ரா-0-6,வைசாகபகுள, இஷ்டி,
சி	27	10	15	11	29	தி	த்வி-36-13,அனு-16-8,பரி-13-53,தை-9-59,தி-28-50,இராமா,
உஅ	19	11	16	12	30	செ	த்ரி-29-41,கேட்-11-4,சிவ-5-20,உப-52-43,வணி-2-46,பவ-57-3,தி-29-43,சங்கடசதுர்த்தீ,திவாமா
மஅ	0 10	31 13	17	13	31	பு	சது-24-54,மூல-7-37,சாத்-52-18,கவு-53-14,தி-3-48,தி-30-45,மேஷசதுர்த்திதி

ப	ர-சு	சனி	செ
ரா	4-கட-செ 13-ரிஷ-சு		
குரு	19-மே-பு		கே